# மாணவருக்கு அண்ணா

தொகுப்பு :
" பிரபா "

புதுமைப் பிரசுரம்

திருவல்லிக்கேணி பெண்ணாடம்
சென்னை - 5 தெ. ஆ. மாவட்டம்

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1970

13854

விலை ரூ. 4-00

முல்லை அச்சகம், சென்னை-14.

## பதிப்புரை

பேரறிஞர் பெருந்தகை அண்ணு அவர்கள், நம்மோடு நேருக்கு நேர் உரையாடுவதை நிறுத்தி ஓராண்டாகி விட்டது. இந்த ஓராண்டை நாம் ஒரு நூறு ஆண்டுகளைப் போல் கடந்திருக்கின்றோம். எஞ்சிய ஆண்டுகளை எப்படிக் கழிக்கப் போகிறோம் என்பதறியாது திகைக்கின்ற நமக்கு, அவர் தந்த அரிய கருத்துக்களே வழித்துணையாகின்றன.

அண்ணுவின் கருத்துக்களை, கேலி பேசியவர்கள் சிலர் ; கிண்டல் செய்தோரும் உண்டு ; 'மறுக்க வேண்டுமே' என்பதற்காக மறுத்தவர்கள் ஒரு சாரார்; மனச்சாட்சியைக் கழற்றி வைத்துவிட்டு சவால் விட்டவர்களும் இல்லாமல் இல்லை. அவர் கருத்துக்கள் நாட்டுக்கு கேடு தரும் என்றோரும் இருந்தனர். ஆனுல் இன்றைய தினம் அவர்களை எல்லாம் தேடிப் பார்க்கிறோம், காணவில்லை. மாருக அவர்கள்தான் நம்மைவிட உரத்த குரலில் அண்ணுவின் அரிய கருத்துக்களைப் பாராட்டிக் கொண்டும், அதிலுள்ள பொருள்களுக்கு புது விளக்கம் தந்து கொண்டுமிருக்கின்றனர். காலத்தால் அழியாத கருத்துக்கள் அண்ணுவுடையது என்பதற்கு இதைவிட சான்று தேவை இல்லை.

அத்தகைய கருத்துக் குவியல்களில் மாணவர்கட்கு ஏற்றதும், இன்றியமையாததுமானவற்றை தொகுத்து மாணவ மணிகளுக்கு அளிக்கிறோம்.

(மாணவ சமுதாயத்திற்கு அண்ணா அன்பழைப்பு விடுக்கின்றார்; வழிகாட்டுகின்றார்; எச்சரிக்கை செய்கின்றார்; பொறுப்பை உணர்த்துகின்றார்; பொல்லாதவற்றினைச் சுட்டிக் காட்டுகின்றார்; கடமைகளை நினைவூட்டுகின்றார்; பரந்த உலகத்தை அவர்களிடம் ஒப்படைக்கின்றார்; இத்தனைக்கும் மேலாக இந்தச் சமுதாயம் வாழ, வளர அத்தனையும் ஒட்டு மொத்தமாக மாணவர்களிடமே எதிர்பார்க்கின்றார்) மாணவ மணிகளே செல்லுங்கள்; அண்ணாவின் மொழிகளை சுவையுங்கள்; ஆனால் அண்ணாவை ஏமாற்றிவிடாதீர்கள்!

புதுமைப் பிரசுரம்
சென்னை-5

வீ. இராமசாமி

# அண்ணாவின் பொன்மொழிகள்

கந்தசாமியும் கலெக்டர்! கார்த்திகேயனும் கலெக்டர்! கார்த்திகேயன் ஜில்லா கலெக்டர்! கந்த சாமி பில்கலெக்டர்! அதுபோல, இந்தியும் ஆட்சி மொழி! தமிழும் ஆட்சி மொழி! இந்தி எதற்கு ஆட்சி மொழி என்றால், எல்லா நாடுகளும் இந்தி யாவைப் பற்றி அறிந்துகொள்ள அது பயன்படும். ஒரு ராஜ்யத்திற்கும்—மற்றொரு ராஜ்யத்திற்கும் அது பயன்படும். சட்டங்கள் இயற்றப்பட்டால் மொழியில் எழுதப்படும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த மொழியிலேபிறப்பிக்கப்படும். கார்டு கவர்களில் அந்த மொழிதான் பொறிக்கப்படும். இரயில்வே பிளாட் பாரத்தில் உள்ள பலகைகளில் அந்த மொழிதான் இருக்கும்—அப்படிப்பட்ட ஆட்சி மொழியானது இந்தி. அது—ஜில்லா கலெக்டர். தமிழும் ஆட்சி

மொழி—அது பில்கலெக்டர்! இன்னின்ன வரி கொடுங்கள் என்று வாங்கி, பில் கலெக்டர் முனிசி பாலிடியில் கொடுப்பதுபோல தமிழை இன்னின்ன இடத்தில் படியுங்கள் என்று எடுத்துச் சொல்வ தற்குத்தான் தமிழ் இங்கே ஆட்சிமொழியாக இருக் கிறது.

* * *

வாழைப் பழத்தை உரித்துச் சாப்பிடுவது மிக எளிதான காரியம். பலாப் பழத்தை உரித்துச் சாப் பிடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல.

* * *

வீடு சின்னதாக இருக்கும் காரணத்தாலேயே மனம் சின்னதாக இருக்கும் என்று அர்த்தமல்ல!

* * *

மாற்ருன் தோட்டத்து மல்லிகையென்பதால் அதற்கு மணமிருக்காது என்று உரைப்பவனல்ல நான்.

* * *

மலர் பறித்திட பூங்கா அமைக்கும் வேளையிலே பசும்புல் தரையிலே ஒளிந்திருந்து காலினைத் தீண்டும் நச்சரவு போல கிளம்பிற்று சீனப் படையெடுப்பு.

* * *

உத்தமர் வாங்கித்தந்த விடுதலையை மறைத்துக் கூறுபவன் ஏமாளி !

* * *

வெற்றி வாகைசூடி, பேரரசு அமைத்த பெரு வீரர்கள் வாழ்ந்த வீரபுரி இந்நாடு. மாவீரர்கள் நடத்திய போர் பற்றி புலவர்கள் இயற்றியுள்ள காவியம் பல பெற்ற நாடு. கூனன் நிமிருவான். கோழையும் வீரனுவான், புலவர்கள் பாடியுள்ள பரணிபடித்தால் !

* * *

மண்ணுசை மட்டுமா காரணம் சீனப் படையெடுப்புக்கு ? என்ருல். இல்லை. மண்ணுசையுடன் வேருேர் நோக்கமும் இருக்கிறது. அது இந்தியாவிலேயே வெற்றிகரமாக நடைபெற்றுவரும் ஜனநாயக முறைக்கு வேட்டு வைத்துத் தகர்த்துவிட்டு ஆசியா முழுவதிலும் சர்வாதிகார முறையைப் புகுத்த வேண்டும் என்பதும் ஆகும்.

* * *

முத்தமிழ் என்ருல் அது முக்கனித் தோட்டம். மா, பலா, வாழை என்பவை இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழுக்கு உவமை.

* * *

சங்க நூல்களைச் சங்கையறக் கற்ருல் அதிலே எவ்வளவோ அரிய கருத்துக்களைக் கண்டுமகிழலாம்!

* * *

அலை கடலிலே பாய்மரக் கப்பலிலே செல்ல முடியுமா? பாய்மரக் கப்பலிலே போனால் பாய்தான் மிச்சமாகுமே தவிர ஆள் மிச்சமாக முடியாது.

* * *

உயர்ந்தவன், தாழ்ந்தவன், தீண்டாதவன் என்ற பாகுபாடுகளை ஏற்படுத்திய புராணங்களை ஒழிக்க வேண்டும்.

* * *

தோட்டம் நல்ல தோட்டமாக இருந்தால்தான் மரஞ் செடிகளும் வளரும். காயும் கனியும் தோப்பும் நல்ல தோப்பாக இருக்கும். தோட்டம் கெட்டிருந்தால் மரஞ்செடி எப்படி வளரும்?

* * *

கலம் ஓட்டியமனிதன் களவாடியதேன்? கட்டிட மெழுப்பிய மனிதன் கள்ளக் கையெழுத்திட்டதேன்? போர்முரசு கொட்டிய மனிதன் போக்கிரியானதேன்! பொன்னெடுத்த தமிழன் பொய் பேசியதேன்? கண்ணியத்தைப் பெற்ற மனிதன் கற்பழித்ததேன்? நல்லவனாக இருந்தவன் நாடோடியானதேன்? எல்லாவற்றிற்கும் காரணம் சூழ்நிலை.

* * *

பழம் அழுகுவது போல, மலர்கசங்கி மணத்தை இழந்து பிறகு கெட்டவாடை கொள்வதுபோல, தழை சருகு ஆவதுபோல, கட்டடங்கள் கலைந்து குப்பைமேடு ஆவதுபோல, பலப்பல தத்துவங்களும்

ஏற்பாடுகளும் காலச்சிறையிலே கிடந்து கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும் இயற்கையாக ஏற்படும் ஓர் நிகழ்ச்சி. இதனை உணர மறுப்பது உலகை அறியாதார் போக்கு.

* * *

செல்லுபடியாகாத நோட்டுகளைச் சேகரித்து வைத்து சிறுபிள்ளைகள் விளையாடினால் கேடு அதிகம் இல்லை. ஆனால் அந்த நோட்டுகள் செல்லுபடியாக வேண்டும் என்று வாதாடினால் நாட்டுக்கே கேடு.

* * *

நமக்கு இடையில் ஏற்படும் சபலங்களை விரட்டிடும் துணிவு மட்டும் வந்துவிட்டால் நாம் நிச்சயம் வெற்றியடைவோம்.

* * *

கண்ணன் சிறு வயதிலேயே வெண்ணெயைத் திருடும் நேரத்திலேயே, திருடாதே என்று தடுக்காத தால் பெரிய வயதில் சேலையையே திருட ஆரம்பித்து விட்டான்.

* * *

மழை பெய்தால் ஒதுங்கி நிற்போம் சிறிது நேரம்—ஓய்ந்து விடமாட்டோம். தொடர்ந்து நடப்போம். பனி, மழை, வெய்யில், குளிர், இரவு, பகல் என்ற எதுவும் பயணத்தை நிறுத்தாது—பாதையை மாற்றாது—பாதை மாறாது—மாற்ற முடியாது.

* * *

சட்டசபை அலங்காரமானது. எம். எல். ஏ. பதவி லாபகரமானது. மந்திரிப் பதவி மயக்கம் தரக் கூடியது.

*  *  *

வளர்ந்திருக்கும் ஆர்வத்தை வகைப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் நம்மையே அது கொன்று விடும். ஆர்வத்தை அளவில்லாமல் வளர்த் திருக்கிறோம்—அதற்கேற்ற பணியாற்றும் வழி அமைக்க வேண்டும்.

*  *  *

லட்சியத்தை அடைய கஷ்டநஷ்டம் அடைதல் எனும் விலை கொடுத்தாக வேண்டும்.

*  *  *

முதலில் சமுதாயத்தில் பிறவியின்பேரால் உள்ள பேதங்களை ஒழித்தாகவேண்டும். அதுவே, இந்நாட்டு சமதர்மத்திற்கு முதல்படியாகும்.

*  *  *

மாபெரும் சனியனான ஜாதிமத பேதத் தொல்லை கள் மனித சமூகத்தை விட்டுத் தொலையவேண்டு மானால், மனிதனுக்கு விஞ்ஞான அறிவும், நாட்டில் விஞ்ஞான வளர்ச்சியும் தேவை.

*  *  *

ஒருவர் மீது ஒருவர் காதல் கொள்ளுதலை மிகப் பெரிய கண்டம் எனக் கூறலாம். காதல் கொள்வதி

லும் அபாயம் பற்றிக்கொண்டிருப்பது உண்மை. காதலர்கள் ஒரு சில காலத்திற்கே அன்னியோன்ய உறவாடி இன்ப வாழ்க்கை வாழ்கிறுர்கள். சில காலத்திற்குப் பிறகு, அவர்கள் நேசப் பான்மையும், ஒற்றுமையும் வளர்வதற்குப் பதிலாக வேற்றுமை தலைகாட்ட ஆரம்பிக்கிறது !

* * *

திருட்டுத் தனமாகக் கனி தேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படி இருக்கும்? எந்த அளவிற்கு அவன் நிலை உயர்ந்து இருக்கிறதோ, அந்த அளவிற்கு அவன் நினைப்பு தாழ்ந்திருக்கும். முதலில் கனி பறித்து, பிறகு அவசர அவசரமாகத் தோட்டத்திற்குச் சொந்தக்காரன் வந்து விடுவானோ, வந்து விட்டால் என்ன செய்வானோ என்ற பயத்தில் செங்காய்களைப் பறித்து அதன்பின் காய்களையும் பறிப்பான், கனி பறிக்கையில் அவனது பாதத்தால் மரம் குலுங்கும்போதெல்லாம் அவன் மனம் பயத்தால் குலுங்கும். அடிக்கடி தோட்டத்துச் சொந்தக்காரன் வந்தால் எப்படிக் குதித்து எங்கு ஓடுவது என்று நினைப்பான். அவன் இருப்பது மரத்தின் உச்சியில்! ஆனுல், அவன் மனம் இருப்பது தரையில் ! இங்கும் நிலைக்கேற்ற நினைப்பில்லை. காரணம், எப்படி மூன்ருவது அடுக்கு மாடியில் உலவும் தொழிலாளிக்கு அந்த மாடி வீடு சொந்தமில்லையோ, அதுபோல மர உச்சியில் கனிப் பறிப்பவனுக்கும் அந்த மரம் சொந்தமில்லை.

* * *

நமது பிள்ளைகளிடம், நான்கு மாம்பழங்கள் வைத்திருந்தேன். அதை இரண்டு பேருக்குக் கொடுத்தால் ஆளுக்கு எத்தனை மாம்பழம் ? என்று கணக்குப்போடுவோம். பிள்ளைகளோ மாம்பழம் எத்தனை என்று யோசிப்பதை விட, மாம்பழத்தின் ருசி எப்படி இருக்கும் என்று யோசிப்பதில் நினைப்பை அதிகம் செலுத்துவார்கள். ஆனால் அப்படி அல்ல ஜெர்மனியில் பிள்ளைகளுக்கு கணக்குப் போடுவது ! (நாலு)டாங்கிகள்தான் நம்மிடம் இருக்கின்றன. எதிரிகளிடம் எட்டு டாங்கிகள் இருக்கின்றன. எப்படி இந்த 4 டாங்கிகளைக் கொண்டு எதிரியை தோற்கடிப்பது என்ற முறையில் கேள்வி இருக்கும். இன்னும் நிமிடத்திற்கு 60 மைல் வேகத்தில் செல்லும் விமானம் காலை 7 மணிக்கு இங்கிருந்து கிளம்பி இலண்டனில் குறித்த இடத்தில் குண்டு வீசிவிட்டு வரவேண்டுமானல், எத்தனை மணி பிடிக்கும் என்ற கேள்வி இருக்கும் !

* * *

திருத்தணி, திருப்பதி, திருவாரூர், சிதம்பரம் போன்ற திவ்விய க்ஷேத்திரங்களையும் ஆங்காங்கு நடக்கிற விழாக்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளக் காட்டும் அளவிற்கு ஆசையை, ரேடியோவின் மூலம் இலண்டன், கல்கத்தா, இரங்கூன் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதில் காட்டமாட்டார்கள்.

பேச்சு—கருத்தின் தொகுப்பு; கருத்து—சிந்தனையின் விளைவு; சிந்தனை—காண்பன, கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும் ஆர்வம் ஒரே பொருள்? காண்பவருக்கு வெவ்வேறு சிந்தனையைக் கிளறி, வெவ்வேறு கருத்தை அண்டி, அதற்கேற்ற முறையிலே பேச்சு பிறக்கச் செய்யும்; வேப்பிலை வைத்தியர்—பூசாரி என்னும் இருவருக்கும் வேறான எண்ணம் தருவது போல!

*   *   *

யவன நாட்டுக் கலங்கள் தமிழ் நாட்டுக் கடற்கரையை முத்தமிட்டன. தமிழ் நாட்டு முத்துக்களை, இத்தாலிய நாட்டு எழிலரசிகள் தங்கங்களைக் கொடுத்து வாங்கினார்கள், தமிழ்நாட்டு மன்னன்ஒருவன் ஈழநாடு சென்று வெற்றி பெற்றான், இமயத்தில் சேர, சோழ, பாண்டியர்களது இலட்சியங்கள் பொறிக்கப்பட்டன. தமிழர்களை எதிர்ப்பவர்கள் இலர். எட்டுத்திக்கும் வெற்றி முரசுக் கொட்டினார்கள், போரும் காதலும் அவர்கள் போற்றியப் பொருள்கள்.

*   *   *

பாடதிட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தினால் தான் மக்களுக்கு பழமையினிடத்திலுள்ள பாசம் குறையும்; மனத்திலுள்ள மாசு நீங்கும்; காலத்திற்குத் தக்கதுபோலக் கருத்து வளரும்.

*   *   *

சமுதாயத்திற்கு உழைக்கவேண்டும் என்ற ஆர்வத்திலுள்ள மாணவர்கள், கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள பாமர மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்.

* * *

பண முதலாளித்துவத்தைவிட, நில முதலாளித் துவம் இருக்கிறதே அது, மனிதத்தன்மையை மாய்ப் பதிலே முதல் தரமானது.

* * *

பகுத்தறிவை முன்நிறுத்தி உழைப்பதே, இந்தி யாவின் தற்கால இன்றியமையாத் தேவை.

* * *

பல இனம், பல மொழி, பல கலை, பல கோட் பாடுகள் நிரம்பி உள்ள ஒரு பரந்த நாட்டில் மாறு பட்ட மக்கள் அனைவரையும் ஓர் ஆட்சியின் கீழ் கொண்டு வரமுடியாது.

* * *

ஆதிக்கக் காரர்களின் பிடியில் சிக்கி, நாயினும் கேடாய் நலிந்து, வாழ்வு வளைந்து, மடமை மிகுந்து, உடலும் உள்ளமும் நைய்ந்து, உருக்குலைந்து போய் இருக்கும் ஒரு சமுதாயத்திடம்—பேசும் திறம் சிறிது பெற்றுள்ளோர், கல்வி கேள்விகளில் சித்தி பெற்றுள் ளோர், ஆதிக்கக்காரர்களை அதட்டிக் கேட்கவும் அதற்கான உரிமைக்குப் போராடவும் முந்துவர்.

* * *

சூழ்நிலையே மனிதரில் சிலரைக் குற்றவாளி ஆக்குகிறது. சமுதாயநிலை, கள்ளனை—காமுகனை—கொலைகாரனை—குடியனை—எத்தனை — பித்தனை — பிச்சைக்காரனை—வெறியனை உண்டாக்குகிறது.

*     *     *

காலம் மாறக்கூடியது; மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாருத சமுதாயம் மறைந்துவிடும்.

*     *     *

தமிழ் நாட்டிலே காதலைப் பற்றியும், வீரத்தைப் பற்றியும் புலவர்கள் அதிகம் பேசுவதற்கும், எழுதுவதற்கும் காரணம், தமிழ் நாட்டில் இயற்கை எழில்.

*     *     *

இந்தச் சாதி மட்டம்; அந்தச் சாதி ஒசத்தி என்று சாதி மட்டக்கோலை நாம் வைத்திருக்கும்வரை இந்த நாடு நற்கதி அடைய மார்க்கமில்லை !

*     *     *

மாயா வாதமும் மன மருட்சியும் வாலிபர்களிடம் நெருங்க நடுங்கும். வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரம், வீணரின் கொட்டத்தை அடக்கி ஆகவேண்டும் என்ற வீரம், ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல் அநீதியைக் கண்டால், கொதித்தெழுந்து தாக்கும் பண்பு, வாலிபர்களிடையே மிகுந்து இருக்கும். சும்மா இருப்பதா ? நாம் என்ன சொரணை அற்ற

வர்களா ? புறப்படு, போரிடு, அநீதி ஒழியும் மட்டும்; அல்லது நாம் ஒழியும்வரைப் போர், இந்தப் பேச்சு தான் வாலிபரின் செவியில் ஏறும்.

* * *

முட்டாளே—என்று ஒருவன் சொன்னல் ஏற்படக் கூடியகோபத்தைவிட, முட்டாள்பயமகனே! என்ருல் எழக்கூடிய கோபம் அதிகமாக அல்லவா இருக்கும் ?

* * *

அப்பா காதைத் திருகு ! பார்க்கலாம் உன் சாமர்த்தியத்தை ! என்று நாலு வயது மகனுக்குக் கூறும் அதே தாய், இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, அதே வார்த்தையையே சொல்லிப் பார்க்கட்டும்—எத்தனை விபரீதமான பொருள்படும் ?

* * *

நேர்த்தியான அறுவைத்திறன் காட்டினுர் மருத்துவர். ஆனுல் நோயாளிதான் செத்து விட்டார் என்று கூறிடத்தக்க நிலை ஏற்படக் கூடாதல்லவா ?

* * *

வேலின் கூர்பார்க்க, நம் விழியினையே குத்திக் கொள்ளப் போமா ?

* * *

கோடி கோடியாகக் கொட்டிச் செலவிட்டாலும் செய்து காட்ட இயலாத காட்சியன்ரே மலைவளம். அதிலும் தமிழகத்தின் தன்னிகரில்லா வரலாற்றுச்

சிறப்பினுக்கு உள்ள சான்றுகளிலே ஒன்று கொல்லி மலை! முகிலைத் தொட்டிழுத்து—முத்தமிடும் குன்றுகள் உள்ளன—அந்தக் குன்றுகளிலே இயற்கைவளம் கொஞ்சி விளையாடுகிறது. எனினும் அது திருமாலுக்கா, அவன் மருமகனுக்கா என்று மல்லுக்கு நிற்கின்றனர் மேதைகள்!

*　　　*　　　*

இந்துத தண்ணீர் கிடைக்கும் வரையில் இந்துக்கள் காத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இதே இந்துக்கள் நோயுற்று விடும்போது டாக்டர் தங்களுக்குக் கொடுக்கும் சாராயத்தையும், மாட்டிறைச்சி சூப்பையும் குடிக்கத் தயங்குவதில்லை. தங்களுக்கு மருந்துத் தண்ணீர் கொடுப்பவர் கிறிஸ்தவக் கம்பவுண்டர், முஸ்லிம் கம்பவுண்டரா என்பதைக் குறித்து விசாரிப்பதும் இல்லை, என்பது கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம்.

*　　　*　　　*

அலைகடலில் கிடக்கிறது முத்து! மண்ணடியில் கிடக்கிறது தங்கம்! பிறகோ கைத்திறன், தொழில் நுட்பம் பெற்றோரின் கரம் வந்தடைகிறது. பிறிதோர் நாள் மனதை மயக்கும் பருவத்தாளின் மார்பினில் புரள்கிறது, மாலையாகி!

*　　　*　　　*

ஒருதாய் வயிற்று மக்களேகூட ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதுண்டு பகையுணர்ச்சி ஏற்பட்டு—

வெட்டி வீழ்த்திக்கொள்வதுண்டு. வெறி முற்றி—எனினும் இறுதியில் ஒருதாய் வயிற்று மக்கள் என்ற உண்மை வெற்றி பெறும் !

* * *

கறந்தபால் காம்பேருது — கருத்தழிந்தோர் துணிவினைப் பெருர் !

* * *

கதை என்பதே கட்டுவதுதானே ! சிறுசிறு உண்மைகளை வைத்துக்கொண்டு அந்தக் காலம், நிலைமை இவைகளை விளக்க பல சம்பவங்களைச் சுவையாகச் சேர்த்துக் கட்டுவது கதை !

* * *

தமிழ் வகுப்பு நடந்துகொண்டே யிருக்கும். தெய்வயானையை விட்டுவிட்டு வள்ளியைத் தேடிக் கொண்டு முருகன் போவது போல், மாணவர்கள் வாத்தியாரை விட்டுவிட்டு வெளியே போய்விடு வார்கள் ஆனால் அந்த நிலை இன்று மாறிவிட்டது. எங்குசென்ருலும் தமிழ், தமிழர் என்ற பேச்சுக்கள் !

* * *

உலகிலே பலப்பல தீவிரவாதிகள் தேன்றியது பற்றிய வரலாறுகள் எனக்குத் தெரியும். நாத்திகம் பேசும் நாவரையும் நானறிவேன். நெருப்பாறு தாண்டும் வீரரையும் எனக்குத் தெரியும். ஆனல் அவர்களுக்கும் பெரியாருக்கும் உள்ள ஒரு பெரிய

வித்தியாசத்தை உணர வேண்டுகிறேன். அவர்கள் படித்த பக்குவமனம் படைத்த கூட்டத்திலே பேசினர். அவர்களுக்கும் எழுதினர். பெரியாரின் பணி, தற்குறிகள் நிரம்பிய தமிழகத்திலே, கல்வீச்சு, மண்வீச்சுக்கிடையே என்பதை அறிய வேண்டும்.

* * *

காந்தியாரிடம் என்ன சொத்து இருந்தது ? நூல் ரசம், சிறுகரண்டி, தெர்மாஸ்பிளாஸ்க், ஒரு பவுண்டன் பேனா, ஒரு ஜதை காலணி. இவை, அருள் பெற்றவர்கள், யோகமறிந்தவர்கள், மக்களின் மோட்ச லோக வழிகாட்டிகள் என்றெல்லாம் விருது பெற்ற துறவு நிலையும் கொண்டிருப்பதாகக் கூறுபவர்கள் இன்றும் பலர் உள்ளனரே அவர் களின் சொத்துக்களை—சற்று உங்கள் மனக்கண்முன் கொண்டுவந்து பாருங்கள் — எவ்வளவு ஆடை ஆபரணம் — தங்கத்தால் வட்டில் தட்டு முதலியன மட்டுமா ? பாதக்குறடே தங்கத்தால் !

* * *

அலைகடலை அடக்கும் மரக்கலம் அமைத்தோர், விண்ணில் பறக்கும் விமானம் படைத்தோர், காட்டாறுகளைக் கட்டுக்குக் கொண்டு வந்தோர், நீரில் நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர் அனைவரும் நம்போல் மனிதரே ! அவர்களால் முடிந்தது, நம்மால் ஆகும் என்ற நினைப்பு அவர்களை ஊக்குவிக்கும் சக்தி யாயிற்று, அவைகள் சாத்தியமானபோது ! மேடைப்

பேச்சா சாத்தியமாகாது? பேசாமலிருப்பது வேண்டு மானுல் சிரமம் — சிந்தையை அடக்கியே சும்மா இருப்பதரிது—பேசுவது எளிது. பேசுவதை ஒழுங்குக் கும், முறைக்கும் கட்டுப்படுத்துவதுதான் மேடைப் பேச்சு!

* * *

மனம்போன போக்கிலே மற்றவர்கள் பேசவும் எழுதவும், அதனைக் கண்டு மனம் பதருமல் பணி யாற்றிவருவதுமே, தூயதொண்டுக்கு அடையாளம்!

* * *

வெட்டுக்கிளியும், வேங்கையும், வலிமை ஒன்ருகா! எனினும் இரண்டும் பாயத்தான் செய் கின்றன!

* * *

மரத்தை வண்டு துளைத்திடக் காணும் விறகு வெட்டிக்கு காரியம் எளிது என்றுதானே எண்ணத் தோன்றும்!

* * *

விளக்கம் என்பது, உள்ள நிலையை எடுத்துக் கூறுவதுதானே!

* * *

ஒவ்வொரு சூழ்நிலையும் ஒவ்வொரு கதை சொல்லும், ஒவ்வொரு புள்ளினமும் ஒவ்வொரு இசைப் பாடுவதுபோல்! மழையாகப் பெய்யும்போது ஒரு ஓசை; காட்டாருக போகும்போது வேறு

இறைச்சல்; அருவியாகும்போது மற்ருெரு வகை யானபடி! எல்லா இடத்திலும் காண்பது தண்ணீரைத் தான்! எனினும் வெவ்வேறு ஒலி அன்ருே கேட் கிருேம்? காற்றினில் ஆடை விலகுகிறது, கொடிகள் அறுபடுகின்றன, செடிகள் சிதறுகின்றன, மரங்கள் பெயர்ந்துவிடுகின்றன—சில வேளைகளிலே, அதே காற்று பூங்கொடியைப் புள்ளினம் ஊஞ்சலாக்கி மகிழ்விக்கிறது! வெப்ப நாட்களின் விருப்பம்; குளிர் நாட்களிலே அருவருப்பு! காற்று மீது குறையா? நிலைமை, நினைப்புக்குக் காரணம். நிலைமையை ஏற்படுத்தியது காற்ரு? அல்லவே! சூழ்நிலையேதான்! எனினும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் காப்பியம் ஏற்பட்டுவிடுகிறது.

கதை அடியால் ஏற்பட்ட புண்ணுக்கும் களத் திலே பெற்ற புண்ணுக்கும் பொருள், தன்மை, தரம் எல்லாவற்றிலும் மிகுந்த வேறுபாடு உண்டு! புலவர் கள் புகழ்ந்திடுவர், களத்தில் ஏற்றப் புண்காணின்.

* * *

தாயை இழந்த மான் குட்டிகள், அலரித் துடிக் கின்றன. சிங்கக் குட்டிகளோ, மான் இறச்சியைத் தின்று ஆடுகின்றன; சிங்கம் கண்டு மகிழ்கிறது; குகையிலே குதூகலம்; புதர் அருகே புலம்பல்! உலகமே, அழிவுச்சக்தியும், அதனை உயிர் எழும் சக்தியும் மோதிக் கொள்ளும் போர்க்களம்!

காற்றே இல்லை என்றால் ஒரே புழுக்கம் ! காற்று அதிகமானால் எதுவும் சிதறும், அடிபெயரும் ! எனவே, அதனை—உணர்ச்சியை முறைப்படுத்தல் வேண்டும். அதனை முறைப்படுத்துவதே, அறிவாளர் கடன் !

* * *

மரப் பொந்தோ, மாளிகையோ—எங்கு அழிவு நுழையினும் அலறல், கதறல் கிளம்புகின்றன !

* * *

பொது உடைமைத் தத்துவத்திற்கும் கழகக் கொள்கைக்கும் அதிக வித்தியாசம் இல்லை. கம்யூனிஸ்டுகள் பொருளாதாரத் துறையினில் மட்டும் கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் சமுதாயத்துறையிலே, சமூக சீர்திருத்தத்திலே முதலில் நாட்டம் செலுத்திய பின்னர்தான் பொருளாதாரத் துறையிலே சர்க்காரிடம் போரிட வேண்டும் என்பது என் விருப்பம். அப்பொழுதுதான் வெற்றியும் எளிதில் கிடைக்கும்.

* * *

சமுதாயத் துறையிலே ஒரு புரட்சியை உண்டாக்கிய பின்னர்தான் மக்கள் லெனினை வரவேற்றார்கள். ஒரு வால்டேர் தோன்றிய பின்னர்தான் ஒரு லெனின் தோன்ற முடிந்தது. லெனின் தோன்றுவதற்குமுன் ஒரு வால்டேர், ஒரு ரூஸோ தோன்றியாக வேண்டும்.

* * *

போப்பின் கொடுமையைக் களைந்து எறிய—உலகம் தட்டையாக இல்லை, உருண்டையாக உள்ளது என்று சொல்ல—அண்டத்தில் உள்ளவற்றைத் தூர திருஷ்டிக் கண்ணாடியால் கண்டு தெரிவிக்க—அலை கடலின் ஆழத்தை அறிந்து கூற, பல அறிஞர்கள் தோன்றிப் பாதையை அழகுறச் செப்பனிட்ட பின்னர் தான் புரட்சித்தேவன் தோன்றி வெற்றியுடன் உலாவ முடிந்தது.

*　　　*　　　*

நம் நாட்டிலே உண்மைச் சரித்திரம் நிலவ வேண்டுமானால் ஜாதிபேதம் ஒழியவேண்டும். ஜாதிக் கோட்டையை இடித்துத் தகர்த்தால்தான் அடிப்படை இறுகிக் கெட்டியாக இருக்கும். மூடப் பழக்க வழக்கங்களை முறியடித்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்தால்தான் அஸ்திவாரம் பலமாக இருக்கும்.

*　　　*　　　*

என்னதான் தஞ்சாவூர் சம்பா, அருமையான விதையாக இருந்தாலும்—பதமான விதைதான் என்று பாறையிலே தூவினால் பலன் கிடைக்குமா ?

*　　　*　　　*

நாட்டிலே நல்லறிவு பரவினால்தான் அடிப்படை பலமாக இருக்கும்.

*　　　*　　　*

கிணற்றினை ஒரு ஆணியைக் கொண்டு தோண்டிவிட முடியாது. கடப்பாறை இருந்தால்

கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தோண்டி முடிக்கலாம். ஆணியை உபயோகித்தால் கையில்தான் காயம் உண்டாகும்.

*　　*　　*

நாகரீக மென்பதன் பொருள் விலங்கினங்களை விட மனிதன் குறைவாக வேலை செய்து அதிக பயன் அடைவதுதான்.

*　　*　　*

சிலருடைய தயாள குணத்தினுல், ஒரு பெரிய கூட்டத்தில் வளர்ந்து வரும் தொல்லைகளைப் போக்கி விட முடியாது.

*　　*　　*

பாசறையின் உபயோகம் அதிகப்பட வேண்டு மானுல், வாள் மட்டும் போர் போலக் குவித்து வைத்துக் கொண்டு, கேடயம் தேடாமல் இருப்பதோ; விற்களைக் குன்றெனக் குவித்துக்கொண்டு அம்புகள் இல்லாமலிருப்பதோ; துப்பாக்கிகளைக் கிடங்குகளில் குவித்து வைத்துக்கொண்டு வெடிமருந்து தேடாமலிருந்து விடுவதோ; இவை யாவும் ஒழுங்காகவும் தேவைக் கேற்ற அளவும் இருந்து இவைகளைத் திறம்பட உபயோகிக்கும் ஆற்றலுள்ள வீரர்கள் இல்லாதிருப்பதோ ; வீரர்கள் இருந்தும் இவர்களை நடத்திச் செல்லும் படைத்தலைவன் இல்லாதிருந்தால் பாசறை

இருந்து என்ன பயன் ? அழகிய சிலே போலிருக்குமே தவிர, பயன்தரும் மனிதராக இருக்க முடியாது.

* * *

இயல், இசை, நாடகம் மக்கட்கு அறிவு வளர, ஆர்வமூட்ட, அகமகிழ்ச்சி பிறக்க, நன்னெறியைக் காட்டப் பயன்பட வேண்டும்.

* * *

வாலிபர்கள் நடமாடும் எஃகுக் கம்பிகள். அகத்திலே அருவி போல் ஆர்வம், முகத்திலே வீரக்களே, செயலிலே துடிதுடிப்பு காணப்படும். தலே குனிந்து நிற்பது, பெருமூச்செறிவது, நம்மால் ஆகிற காரியமா ? என்று இழுத்துப்பேசுவது ஆகிய முறைகள் அவர்களுக்குப் பிடிக்காதன—அவர்கள் செயலாற்றும் வீரர்கள்.

* * *

கனியும் அழுகுவது காண்கிறோம். அந்த அழகிய பழத்திலே பிறகு புழு நெளியவும் காண்கிறோம். மதுரம் தரும் பழமாயிற்றே, மாங்கனியாயிற்றே, நமது தோட்டத்திலே கிடைத்ததாயிற்றே, இதிலே, நெளிவது புழுவாக இருக்கமுடியாது. பழத்திலே சுவை இருக்கும்; புழு எப்படி இருக்க முடியும் ? என்று யாராவது வாதாடுவார்களா ? பழம் அழுகுவது போல், மணத்தை இழந்து பிறகு கெட்ட வாடை கொள்ளுவதுபோல, பலப்பல தத்துவங்களும், ஏற்பாடுகளும் காலச்சிறையிலே கிடந்து கிடந்து

கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும் இயற்கையாக ஏற்படும் ஓர் நிகழ்ச்சி. இதனை உணர மறுப்பதுதான் உலகை அறியாத போக்கு.

* * *

கடமை அழைக்கும்போது காலத்தினால் விளையும் கஷ்டங்களை சாக்காகக் கூறி தப்பித்துக் கொள்வது மன்னிக்க முடியாத குற்றம் !

* * *

மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா ? ரசிக்கத்தானே செய்வோம். அதுபோலவே, பேசுபவரின் கருத்து பயன்தருமாயின் கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையாக இருப்பினும், அவர்கள் ஏற்றுக்கொள்வர்.

* * *

உள்ளத்தை உள்ளபடி உரைக்க அறிஞர்கள் மயங்கும்வரை உலகம் காட்டு மிராண்டித் தன்மையிலேயே இருந்து வரும்.

* * *

நம் வீட்டில், கூடம், பாதுகாப்பான அறை, படுக்கை அறை, சமையலறை, பூஜையறை இவையெல்லாமிருக்கும். புத்தகம் உள்ள இடம், படிப்பதற்கென்று ஒரு அறை இருக்காது.

* * *

விடா முயற்சியிருந்தால் வெற்றி கிடைத்தே தீரும். தூற்றினோரே துதிபாடி நிற்பர், ஏளனம் பேசினோர் ஏத்தி ஏத்தித் தொழுவர்.

* * *

பண்டைய முறையில் தேவையானவற்றைத் தெரிந்து எடுத்துப் போற்றத் தவறக்கூடாது. அது போலவே தேவையற்றவற்றைத் தள்ளிடவும் தயங் கிடக் கூடாது.

*　　　　*　　　　*

ஏழைகள் செய்யும் குற்றங்களுக்குக் காரணம் அவர்களின் ஏழ்மை ! ஆகவே, தண்டிக்கப்படவேண் டியது ஆட்களல்ல—பொருளாதார பேத அமைப்பு முறை !

*　　　　*　　　　*

குற்றம் தனிப்பட்டவர்களின் குணத்தைப் பொருத்து இல்லை. அவர்களின் சூழ்நிலையைப் பொருத்துத்தான் இருக்கிறது.

*　　　　*　　　　*

ஒன்றே குலம் ஒருவனே தேவன்.

*　　　　*　　　　*

கத்தியைத்தான் தீட்டினாயே தவிர உன் புத்தி யைத் தீட்டவில்லை. காரியத்தைச் சாதிக்க கத்தி யைத் தீட்டிப் பயனில்லை, உன் புத்தியைத் தீட்டு.

*　　　　*　　　　*

தலைவலிக்காக கருங்கற் பாறையில் முட்டிக் கொண்டால் வலிதீராது; மண்டை உடையும்.

*　　　　*　　　　*

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் யாரோ ஒருவன் கனவு கண்டதன் விளைவாகத்தான், சந்தி

ரனை எட்டிப்பிடித்து, பூமியிலிருந்த பொருளைச் சந்தி ரனில் சேர்க்க முடிந்தது. இன்று சந்திர மண்ட லத்தை 'ராக்கெட்டு' எட்டிப் பிடிக்க வித்தூன்றி யவன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கனவு கண்ட வன்தான். அப்படிக் கனவு காண்பதற்கு இன்று சிலர் தேவைப்படுகிறார்கள்.

* * *

பாதை புதிதாக வகுத்துக் கொண்டேன் என்று பின்பற்றுவோர் கண்மூடிக் கிடக்கும்வரை பேசலாம்.

* * *

வெளியே எடுக்கப் பட்டுவிட்ட முத்து மீண்டும் சிப்பிக்குள் போய்விட முடியாது !

* * *

மாந்தோப்பாக இருந்தாலென்ன, புளியந் தோப் பாக இருந்தாலென்ன, காலாகாலத்திலே காய்த்து, காய்த்தது நல்ல விலைக்கு விற்றுக் காசு கிடைத்து வாழ்க்கையைச் செம்மைப் படுத்தினால் போதும்.

* * *

கூடைக்காரன் மண் வெட்டியும் கையுமாகத் திரிந்து மடை திருத்திக் கிராமத்திலே இருந்தபோது கிடைத்த வாழ்க்கை நிம்மதியைக் காட்டிலும், பட்ட ணத்திலே பிழைக்க வந்தால், சிறப்பான வாழ்க் கையா கிடைக்கும் ?

. . .

உன்ஞல் என்ன ஆகும்? என்று ஒருவன், ஆணவத்தை அறிவின் முதிர்ச்சி என்று நம்பிக் கொண்டு, நம்மைக்கேட்டிடின்;ஒன்றும் ஆகாதப்பா! என்று கூறிவிடுவதால் நமது ஆற்றலும் அழிந்து விடாது. மரியாதையும் மங்கிவிடாது. ஆனுல், உன் தமிழ் மொழியில் என்ன உண்டு? உன் தாய் மொழி யால் என்ன ஆகும்? என்று கேட்க ஒருவன் முற்பட் டால், உணர்ச்சியற்றுப் பதிலளிக்காதிருந்தால், மரபும், மானமும், நாடும், மொழியும் ஏளனத்துக்கு இலக்காகிச் சிதைவுபடும். ஈடுசெய்ய முடியாத நஷ் டம், துடைக்க முடியாத பழி, போக்கமுடியாத கறை அப்போதுதான் ஏற்படும்.

* * *

தனிப்பட்டவர்களுக்குத் தனிப்பட்ட காரணங் களுக்காக, கோப உணர்ச்சி கொதித்தால், அவர் களுக்கு உள்ள பலமும் போய் விடும்; மற்றவர்கள் கண்டு எள்ளி நகையாடவும் செய்வர். ஆனுல் பொதுநல நோக்கத்துக்காக, இனத்துக்காக, மொழிக் காக உணர்ச்சிப் பிழம்பாக நாம் மாறும்போது புதிய தோர் வலிவு பெறுகிரேும்; காண்போர் கனிவு காட்டு கின்றனர்!

* * *

ஜுர வேகத்தில் இருப்பவனே, நாலுபேர் சேர்ந்து அழுத்திப் பிடித்தாலும், நெம்பிக்கொண்டு எழுவான். அது வலிவின் அடையாளமல்ல; நோயின் தன்மை. கட்டான உடலே, உடற்பயிற்சி முறைகளால், மேலும்

வலிவுள்ளதாகவும், பொலிவுமிக்கதாகவும் ஆக்கிக் கொண்டால், பத்துப் பேர் பிடித்திழுத்தாலும், நிலை குலையாத தன்மை கிடைக்கும்; அது உண்மையான வலிவுக்கு அடையாளம் !

* * *

என் கோபத்துக்குக் காரணம் நான் இகழப்பட்ட தால் அல்ல; என்னை எவரேனும் ஏளனம் செய்ததால் அல்ல. அந்தமாதிரி நேரங்களில் நான் மரக்கட்டை !

* * *

உழைக்காது வாழும் மனிதர்கள் வாழும்போது விதைக்காது விளையும் கழனி ஏன் இருக்காது ?

* * *

அரசன் உழைப்பதில்லையே தவிர வேறு வேந்தரின் படை எடுப்புக்கும், ஊர்கோபத்துக்கும் அஞ்சி வாழவேண்டும்.

* * *

மன்னன் ஆளப்பிறந்தவன் என்ற எண்ணம் மக்கள் மனதிலே ஆழப் பதிந்திருக்கும்வரையிலே தான், மன்னன் மணிமுடி தரித்து வாழமுடியும். கோபமோ, குமுறலோ கொப்பளித்தால் கோல் உடையும்.

* * *

சதுர்க்கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு அரண்மனையைத் தரைமட்டமாக்க வேறோர்

அரண்மனை சதியாலோசனை மண்டபமாக மாறி இருக்கும் !

* * *

முகாரி முடிந்து அடாணு ஆரம்பமான நாள் ! மாடப்புரு வல்லூறைத் துரத்திய நாள் ! மன்னர் மருண்ட நாள் ! சீமான்களின் தலை சிதறிய நாள் ! ஓடப்பரெல்லாம் உதையப்பரான நாள் ! விலங்கு பூட்டப்பட்டு வேதனையை அடைந்த கரங்களிலே வீர வாள் ஜொலித்த நாள் ! விடுதலை நாள் ! வீரரின் வெற்றித் திருநாள் ! வெறியரின் வீழ்ச்சி நாள் !

* * *

காற்று வீசாதபோது வேண்மானல் விசிறி கொண்டு காற்றுறைப் பெறலாம். விசிறினல் வரும் காற்றைத் தடுக்கலாம், விசிறியை வீசி எறிவதால் ! ஆனால் காற்று இயற்கையாக வீசுவதைத் தடுக்க, ஏன் என்று கேட்க எவரால் முடியும் ?

* * *

புலியிடம் மான் மன்றுடி மனம் வைத்து உயிர்ப் பிச்சை அளிக்கும்படி வேண்டுவது இயற்கை. நடக்கக் கூடியது ஆனல், புலி மானிடம் பயந்து அடங்கி ஒடுங்கி நடுங்கி உயிர்ப் பிச்சை கேட்பது என்றால் விவேகமுள்ள பேச்சா ?

* * *

வில்வீரன் ஒருவன் வில்லிலே நாணேற்றி, அம்பை பூட்டி விசையாக விடுகிறான் ஒரு புலியைக்

குறிவைத்து. அம்பு வில்லினின்றும் விடுபட்டது மிக வேகமாக புலியின் உடலை ஊடுருவிச் சென்று அருகிலிருந்த வாழை மரத்திலே பாய்ந்து நின்று விட்டது. இந் நிகழ்ச்சி உண்மையானது. உருவகப் படுத்தியதன்று! அம்பு புலியின் உடலைத் துளைத்துச் சென்றது என்பது அம்பின் கூர்மையையும் வேகத்தையும் அதை எறிந்தோனுடைய சக்தியையும் குறி தவறுத்திறமையையும் குறிக்கிறது. புலியைத்துளைத்த பின் அம்பின் வேகம் குறைகிறது. தடையேற்பட்டதால்! எனவே புலியைத் துளைத்த அம்பு வாழையைத் துளைத்துச் செல்ல முடியாமல் அதிலேயே பதிந்து நின்றுவிட்டது. வில்வீரனின் செய்கை இவ்விதம் கூறப்படுகிறது திராவிடக்கலையிலே!

* * *

பாட்டாளி பாடுபட்டுக் கட்டுவது மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் போன்ற மனைகள். நான் கடுக்கு ஐந்தடுக்கு அரண்மனைகள். அவைகளை நிமிர்ந்து நோக்கினால் கழுத்து வலிக்கும். ஆனால் அவன் அண்டியிருப்பது குனிந்து நுழைய வேண்டிய குடிசை! ஏன் இந்த பேதம் இந்த நாட்டிலே?

* * *

மன்னன் ஒருவன் கானமயிலாடக் கண்டான், கார்மேகத்தைக்கண்ட களிப்பின் மிகுதியால்! கண்ட மன்னன் மயில் குளிரால் வாடுகிறது என நினைத்தான். அளித்தான் அதற்கோர் ஆடை! அதிலும்

பட்டுப் பீதாம்பரம்! அவனது செயல் கருணையுள்ள தாக இருக்கலாம் கவைக்குதவுமா? அன்பு மிகுந்த தாகக் காணப்படலாம். ஆனால் அறிவு தொக்கி யுளதா அதில்?

* * *

குடும்பம் முதற்கொண்டு கோலோச்சும் சர்க்கார் வரையிலே ஸ்தாபனங்கள்தான்! ஸ்தாபனம் ஏற்படச் செய்வதற்குக் கொள்கைகள் தேவை!

* * *

எண்ணங்களை வெளிப் படுத்திக் கொள்ள, மனதிற்பட்டதை எடுத்தியம்ப, நமதுகதி இதுதானா என்றென்றும் என்று கேட்டிட, இவ்விதமா நமது முன்னோர்கள் இருந்தனர் என்று பேச, இடுக்கண் வந்தகாலை அவர்கள் யாதுசெய்து இன்னல் போக்கிக் கொண்டனர் என்பது குறித்துக் கலந்துரையாட, மொழி பயன்படுகிறது.

* * *

மொழியைக் காத்திடின் உரிமைவாழ்வு நிலைத்திடும்.

* * *

எத்தனை எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக் கொண்டோம். கொற்றம் இழந்தோம். கோட்டை இழந்தோம். வாணிபம்இழந்தோம். விருது பலவற்றை இழந்து நிற்கிறோம். தொழில் வளம் இழந்தோம். தோழர்களை இழந்தோம். கலம் இழந்தோம். காவியம்

இயற்றும் திறம் இழந்தோம். இத்தனை இன்னல்களும் தாங்கிக்கொண்டோம். ஆனால், தமிழ் மொழியிடம் தமிழன் காட்டவேண்டிய பற்றினை, தாய் மொழிக்குப் பேராபத்து எனின் துடித்தெழுந்து போரிடும் வீரத்தினை, தாய்மொழியைத் தாழ்த்திப் பேய் மொழி ஒன்றினைப் புகுத்திடும் கொடுமையை எதிர்த்திடும் வீரத்தினை, ஒரு தமிழன், தமிழ் நாட்டில், நாம் உயிருடன் உலவிக் கொண்டிருக்கும் நாட்களில், மொழிவெறி என்று கேலிபேசி இகழ்வது, அதனை நாம் கேட்டுக்கொண்டு நிற்பது, எனும் இந்தக் கொடுமையையுமா தாங்கிக்கொள்ள வேண்டும்?

* * *

பொதுமக்களின் எதிர்ப்பு வலுவடையும்போது பசப்புவதும், மக்களின் கவனம் வேறு திக்கில் திரும்பி இருக்கும்போது திணிப்பதும் இந்தி ஆதிக்கக்காரரின் போக்காகிவிட்டது.

* * *

அவன் வீரன் என்று கூறினால, நான் என்ன கோழையா? என்று கோபித்துக் கேட்டிடச் சொல்கிறது உணர்ச்சி. அவன் அறிவாளி என்று கூறினால், நான் முட்டாள் அல்ல! என்று கொதித்தெழுந்து கூறத் தோன்றுகிறது!

* * *

அடுப்புக்குள் இடும் நெருப்புக்கும், அடுப்புக்குத் தேவை என்பதற்காகக் கூரையில் செருகிவைக்கும் கொள்ளிக் கட்டைக்கும் வித்தியாசம் இருக்கிறது.

* * *

மறத்தமிழ் மரபினன் நீ. மார்தட்டி நின்றாய்! வஞ்சகர்களே! வாழ்ந்தால் தமிழோடு வாழ்வேன்! வீழ்வதேனும், இந்தியை எதிர்த்தபடி வீழ்வேன்! என்று சூளுரைத்தாய். துடித்தெழுந்தாய்! வெற்றி உனை நாடி வந்தது. தேடி அமைந்தது.

* * *

வங்கத்திலிருந்து சென்று அரவிந்த கோஷ் உபதேசம் செய்தது அந்தக் காலம். வங்கம் வந்து அசாமியன் உபதேசம் செய்வது இந்தக் காலம்

* * *

கழுநீர்ப் பானையினைத் தலையில் சுமந்துகொண்டு செல்பவன்! பன்னீர் செம்பினைக் கரத்தில் எடுத்துச் செல்பவனைக் கண்டு 'பூ' இந்தச் சின்னச் செம்புதான் உனக்குக் கிடைத்ததா? என்தலையில் பார்! எத்தனை பெரிய கழுநீர்ப்பானை? என்று கூறுவது எவ்வளவு பெரிய மடமை.

* * *

முப்புறமும் கடல் சூழ்ந்த தமிழ்நாடு என்று பெருமை கொள்கிறோம். நமது முன்னோர் கலம் விட்டுக் கடலுக்கப்பாலும் சென்று வாழ்ந்தனர் வகை யோடு என்று இலக்கியத்தில் படித்துவிட்டு இறும்பூ தெய்துகின்றோம். ஆனால் இன்றோ நம்முடைய துறை முகங்கள் தூர்ந்து கிடக்கின்றன.

* * *

வேலை இருக்கிறது நிரம்ப, வெற்றிக் கோலம் பூண்ட தம்பி! செந்தமிழ் நாட்டுச் சோலையிலே நல்ல

சிந்துபாடும் வேளையிலே தென்றல் அடிக்குது என்னை மயக்குது ! என்று இருந்து விடாதே !

*  *  *

தடுத்தால் நிற்கவா போகிருன் ? தடுப்பதுதான் அறமாகுமா? தாய் எனினும் தமிழச்சி அல்லவா ? மொழிகாத்திட என்மகனும் சென்ருன் என்று கூறுவ தன்ரேே மரக்குடியினர் மரபு ! கிளர்ச்சியில் ஈடுபடும் போது என்னென்ன ஆபத்து வந்து தாக்குமோ, இடுக்கண் யாதோ, யாரறிவார் ? என் மகன் இப்போ தேனும் உண்டு உரம் பெறுவதைக் கண்டு மகிழ வேண்டுமே ! நாளை எப்படியோ ? என்ற எண்ணம் தாயின் குரலிலே தோய்ந்து இருக்கிறது.

*  *  *

எண்ணங்களை வெளியிடும் கருவி, மொழி என்று வாதாடுவது எளிது. ஆனல் எண்ணங்கள் உருப்பெற அவரவர்க்கு அவரவர் இயல்புக்கு ஏற்ப, வாழும் நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப அமையும் மொழியே துணைநிற்கிறது.

*  *  *

உடல் பெரிது ! உள்ளே நுழையும் கிருமி மிக மிகச் சிறிது. அளவில் ! ஆயின் என்ன ? உடலை அரித்து அரித்து கிருமிகள் உயிரையே குடித்து விடுகின்றன.

செம்மொழி தமிழ்மொழி என்று செப்பிக் கொண்டிருக்கலாம், சின்னாட்கள்! பிறகு எம்மொழி ஆட்சிமொழி என்று உலகு கேட்குமே! என்ன பதிலளிப்போம்? இந்தி ஆட்சிமொழி என்று கூறின், பிறகு செம்மொழிக்கு எவர் மதிப்பளிப்பர்?

* * *

நமக்குக் கிடைத்திருக்கிற தாய்மொழி பிற மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், பிற மொழியாளர்க ளெல்லாம் பார்த்து இவ்வளவு எழிலுள்ள மொழியா உங்களுடையது? இவ்வளவு ஏற்றம் படைத்த இலக்கியமா உங்களிடத்தில் உள்ளது? இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்? ஈராயிரம் ஆண்டுக் காலமாகவா இந்த மொழி சிதையாமல் சீர் குலையாமல் இருந்துவருகின்றது? என்று ஆவலுடன் சிலரும், ஆயாசத்துடன் பலரும், பொறுமையோடு சிலரும், பொச்சரிப்பாலே பலரும் கேட்கத்தக்க நல்ல நிலையிலேதான் தமிழ் மொழி இருக்கின்றது.

* * *

வெட்ட வெளியிலே கொட்டகை போட்டு வீதி தவறுமல் தோரணங்கள் கட்டி சிற்றூர்களிலிருந் தெல்லாம் சிங்க நிகர்த்த காளைகள் சாறை சாறை யாக வந்து மாமன்றத்தில் கூடி யிருப்பதற்குக் காரணம் இந்தி மொழியை விடத் தமிழ் மொழி சிறந்தது என்று வாதாடுவதற்கல்ல. தமிழகத்திலே இந்தி மொழி திணிக்கப்பட்டால் அதை எந்த

வழியிலே ஒழித்துக் கட்டுவது; அதற்கு நம்முடைய காணிக்கை என்ன? என்று சிந்தித்து அவரவர்கள் தங்கள் காணிக்கைகளைச் சேர்ப்பிப்பதற்காக!

* * *

மாடி வீடானாலும் சரி, பள்ளியறையானாலும் சரி, சாலையானாலும் சரி, சோலையானாலும் சரி, களமானாலும் சரி, எங்கேயும் பயன்பட்டு வந்த தமிழ் மொழி, பயன்படாது என்று சொல்லுகின்றவர்கள் எப்படிப் பட்டவர்களாக இருக்கவேண்டும்?

* * *

மொழி காப்பாற்றப்பட வேண்டும், இனம் அழிந்து படாமலிருக்க வேண்டுமானால்!

* * *

தட்பவெப்ப நிலைக்கேற்ப மொழி உருவாக்கப் படுகிறது.

* * *

மொழி உணர்ச்சி ஒரு இனமக்களுக்கு உயிரூட்டம் தருகிறது.

* * *

மொழி, இனம், பண்பாடு என்பவை ஒன்றுக் கொன்று தொடர்புடையன.

* * *

மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு

தருவது, செயல் புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம் !

* * *

நாவலர்களும் பாவலர்களும் சங்க இலக்கியங்களைச் சுற்றி நாலுபக்கமும் வேலிகள் அமைத்து, எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் எழுப்புச் சுவரை எழுப்பி வைத்துக்கொண்டு, உள்ளே ஆடுது காளி வேடிக்கை பார்க்க வாடி என்பதைப் போல, தொல்காப்பியத்தைப் பாரீர் ; அதன் தொன்மையைக் காணீர் என்றால் அதனிடம் யார் அணுகுவர் ?

* * *

சங்க இலக்கியங்களை வீட்டைவிட்டு வெளியேற்றி, நாட்டிலே நடமாட விடவேண்டும். நடன சுந்தரிகளாகச் சிறு சிறு பிரதிகள் மூலம் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டால்தான், அவை ஒவ்வொருவருடைய மடியிலேயும், மனத்திலேயும் தவழும்.

* * *

புலவர்கள், எந்த அளவுக்குப் பொது மக்களுக்குக் கம்பனை அறிமுகப் படுத்தினார்களோ, அந்த அளவுக்குச் சங்க காலப் புலவர்களை அறிமுகப் படுத்தவில்லை.

* * *

கம்பன் கவிதையானாலென்ன—சேக்கிழார் புராணமானாலென்ன—கேடு இருந்தால் களைந்து

எறி ! குப்பையிருந்தால் கூட்டித் தள்ளு ! இழுக்கு இருந்தால் எடுத்து எறி ! தீதினைத் தீயிடு !

* * *

புரட்சி என்பது இயக்கும் சக்தி ! அதைப் பொசுக்கிவிட யாராலும் ஆகாது. புரட்சியென்பது மக்களின் போராடும் சக்தியின் வழி வருவது. புரட்சி என்பது வாலிபத்தின்கூறு; பகுத்தறிவாளர் ஆயுதம். பழமை விரும்பிகள், புரட்டர்கள், யதேச்சாதிகாரிகள் ஆகியோருக்கு அது நஞ்சு.

* * *

கிளி கொஞ்சிடும் சோலையானாலும் நடுநிசி வேளையிலே ஆந்தையும் அலறத்தான் செய்யும்.

* * *

அறிவாளிகள்கூட 'விவாஹம்' என்று சொல்வதையே பெருமைக்குரியதாகக் கருதி வந்தனர். திருமணம் எனக் கூறுவதை ஏதோ இழிவு-சொல்லத் தகாத சொல் என்றுகூடக் கருதினர் பலர்.

* * *

இயக்கம் தன்னுடைய பணியை விடாது செய்து வந்ததன் பயனாக விவாஹம் என்று கூறுவது மாறித் திருமணம் என்ற தமிழ்ச் சொல், நாட்டில் வழங்கத் தொடங்கிய பின்னரும், மணமுறைகள் தமிழ் முறைப்படி நடத்தப் படாமல், ஆரிய முறைப்படிதான் நடைபெற்று வந்தன. திருமணம் என்ற போர்வைக்குள் "விவாஹம்" புகுந்து சிலகாலம் வேலை செய்தது. அதாவது தமிழ், மக்களின் திருமணங்கள் பல, ஆரிய முறைப்படி, ஆரிய புரோகிதர்கள் கொண்டே நடை

பெற்று வந்தன. அதன் பின்னர், திருமண முறையில் ஆள்மாற்றம் ஏற்பட்டது. அதாவது, ஆரிய புரோகிதர்களுக்குப் பதிலாகத் தமிழர்கள் சிலர் அந்தக் காரியத்தைச் செய்ய முன்வந்தனர். புரோகிதர்கள் ஆரிய முறைப்படி செய்யும் சடங்குகள் எல்லாவற்றையும் இவர்களும் செய்தனர். இது சிலகாலம் நடந்தது.

* * *

காதல் என்பது இருவர் மனது லயிப்பது. சுருதியில் சேர்ந்த சங்கீதம் போன்றது. மலரில் மணம் இருப்பது போன்றது. மதியில் குளிர்ச்சி இருப்பது போன்றது.

* * *

நமது குடும்பப் பெண்களிலே, எவ்வளவோ பேர், தங்கள் மண விவகாரத்தை மாற்ற முகத்தில் மஞ்சள் பூசி, குங்குமமிட்டு வாழ்கின்றனர். எத்தனை பெண்கள் வாழ்க்கையின் இன்பம் என்றால் சமையற் கட்டில் அதிகாரம் செலுத்துவதும், கட்டிலறையில் விளக்கேற்றுவதும், கலர்புடவை, கல்கத்தாவளையல், மங்களூர்குங்குமம், மயில்கழுத்து ஜாக்கட் ஆகியவைகளைப் பற்றி புருஷர்களிடம் பேசுவதும், தொட்டிலாட்டுவதுந்தான் என்று கருதிக்கொண்டு வாழுகின்றனர். ரசமில்லாத வாழ்க்கை, பாவம்!

* * *

நல்ல பஞ்சவர்ண கிளி என்றாலும் சோலையில் பறக்க விடுகிறார்களா தங்கக் கூண்டிலே போட்டுத் தானே அத்துடன் கொஞ்சுவார்கள்.

* * *

சமுகத்தில் வளர்த்து விடப்பட்ட பழக்கத்துக்கு தனது அழகையும், இளமையையும் பலி கொடுக்கப் போகிருள். இவ்விதம் அழிந்த "அழகுகள்" எவ்வளவு! தேய்ந்த இளமை எத்துணை !!

* * *

அறிவுத் தெளிவும், அதன்பயனுக ஆண்டவனைப் பற்றிய தெளிவும் ஏற்பட்ட பிறகே உலகிலே, பல நாடுகளில், இப்படிப் பொருளை முடக்கி வைப்பது, ஏழையை உயர்த்தி வாழ்வை வளமாக்குவதற்குப் பயன்படக் கூடிய பொருளை வீணுக கிரீடமாகவும், பதக்கமாகவும், கவசமாகவும், வட்டிலாகவும், பாதக் குறடாகவும், பல்லக்காகவும், நாகரூபத்திலும், தேருருவிலும் முடக்கி வைப்பது, பக்திக்கோ, பரமனின் பெருமையைப் பாரரியச் செய்வதற்கோ, பாமரரின் வாழ்வை வளமாக்குவதற்கோ, பயன்படுவதல்ல, எனவே, இந்த வீண் வேலையை நிறுத்திவிட வேண்டும். இந்தப் பொருள்களை பள்ளிக்கூடங்களாக வைத்தியசாலைகளாக, ஏழைவிடுதிகளாக, இல்லாமை நோய்க்கு மருந்திடும் இதம்புரிச்சாலைகளாக, மாற்றி அமைக்க வேண்டும் என்ற மாண்பு ஏற்பட்டது. பற் பல நாடுகளிலும் வேக வேகமாக இந்தப் பண்பு ஏற்பட்டது.

* * *

கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்பவனுக்கு தரப்பட்ட மதிப்பு மங்கி, பள்ளிக்கூடம் அமைத்துக் கல்வித் தொண்டு செய்பவனுக்கு மதிப்பு உயரத்

தொடங்கிற்று. பஜனை கூடங்கள் கட்டும் பயனற்ற காரியத்தைப் பழமையை விடவே முடியாத சிலர் கட்டி அழுதனர் — புதிய பண்பினர், பல்கலைக் கழகங்கள் அமைக்கலாயினர். உலகிலே இவ்வளவு மாறுதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலுங் கூட, நமதுநாட்டிலே மட்டும், தங்கரிஷபத்தின் மீது சிவனார், உலாவந்து கொண்டுதான் இருந்தார் — இருந்தாரா இருக்கிறார்.

* * *

கண்டனத்துக்கும் ஏளனத்துக்கும் ஆளான சுயமரியாதைக்காரன் மட்டும் மனதிலே கற்பனை கண்டவண்ணம் இருந்தான். இந்தப் பெரும்பொருள், விடுதலை பெற்று, நாட்டிலே ஆலைகளாகவும், கல்வி நிலையங்களாகவும், வைத்திய விடுதிகளாகவும் வகையற்றோரின் பராமரிப்புச் சோலைகளாகவும் மாறும் ஒரு காட்சியைக் கண்டுவந்தான். இன்றும் இவை கற்பனைக் காட்சிகள்தான்! இன்னும்சில காலத்துக்கு, கற்பனைக் காட்சிகளாகவே இருக்கும். ஆனால் நீண்ட காலத்துக்கு அல்ல — விழிப்புநாள் விரைந்து வருகிறது — அறிகுறிகள் ஆயிரம் தெரிகின்றன.

* * *

சிவனாக இருந்தால் பக்கத்தில் ஒன்று, தலையிலே ஒன்று. விஷ்ணு மார்பின் மீதே சாய்த்துக் கொண்டிருக்கிறாராம். பிரம்மா என்னமோ நாக்கிலே வைத்துக் கொண்டிருக்கிறாராம். இப்படி நமது "சாமிகள்"

நாயகிகளுடன் ஜோராகக் காலந் தள்ளிக் கொண்டிருக்கையிலே; நம்மைப்பற்றி ஏன் கவலைவரப் போகிறது.

* * *

மேனாட்டிலுள்ள மதம், விஞ்ஞானம் வளர வழி விடுகிறது. இங்கு, 'மலைபோல் மாடு படுத்திருக்கிறது' என்றுதான் பாடவேண்டும். அங்கு விஞ்ஞானம் தோன்றியதும், மத ஆதிக்கக்காரர்கள், பலமாக எதிர்த்தனர்—ஜபமாலை கொண்டு மட்டுமல்ல, கோல் கொண்டவனின் துணையைக் கொண்டுங்கூட, நாத்திகப் பட்டம் சூட்டினர். நாடு கடத்தினர். மத ஆதிக்கத்தையும், கொடுங் கோன்மையையும், எதிர்த்துப் பலமான பிரசாரம் நடைபெற்ற பிறகுதான், அங்குமதம், விஞ்ஞானம் வீறு கொண்டெழுந்து விட்டது. இனி நம் தலை தப்பினால் போதும் என்று இருந்து விட்டது. ஒரு காலம், இருந்தது. அரசுகளெல்லாம், குருமார்களின் கோபம் கிளம்பினால் ஆடியகாலம்! ஒரு அரசன், குருவின் மாளிகை வாயிலில் தலையில் பாகையின்றி, காலில் செருப்பின்றி, மூன்று நாட்கள் காத்துக் கிடந்தான். அவருடைய மன்னிப்புப்பெற அப்படி இருந்த காலம் போய், மக்கள் மதவாதிகளை இருக்க வேண்டிய இடத்தில் இன்னபடி இரு என்று திட்டமாகக் கூறினர்—விஞ்ஞானம் கருவிகளைக் கண்டு பிடித்து அளிப்பதற்குமுன்பு, கருத்தில் தெளிவை உண்டாக்கி அச்சத்தைப் போக்கிற்று. அதனாலேயே

பிறகு அங்கு, மதம் இருந்தாலும் விஞ்ஞானம் வளர முடிந்தது இங்கு அவ்விதம் இல்லையே !

*  *  *

உலகமே அநித்தியம்—பிரபஞ்சமே மாயை—இந்த லோகத்திலே என்ன இருக்கிறது—பணம் பாஷாணம்—இன்றைக்கு இருப்பாரே நாளைக்கு இருப்பாரென்று எண்ணவோ திடமில்லை—காயமே இது பொய்யடா—மனிதவாழ்வு இந்திர ஜாலம் என்று ஏதோதோ பேசுகிறார்கள் வேதாந்தம். ஆனால், அதேமக்கள், பாட்டும் கூத்தும் தேடுகிறார்கள். பெண்கள் இருக்கக் கண்டால் போதும். தேன்கண்ட ஈபோல் தேங்குகிறார்கள். எத்தனை விதமான கோணல் சேட்டைகளைச் செய்கிறார்கள். சட்டையைச் சரிப்படுத்திக் கொள்வதும் தலையைச் சீவிவிட்டது கலைந்து விட்டதோ என்ற கவலையால் விநாடிக் கொருமுறை தடவித் தடவிப் பார்ப்பதும் முகத்தை நிமிஷத்துக் கொருமுறை கைக் குட்டையால் துடைப்பதும், கண் சிமிட்டுவதும், கைதாள மிடுவதும், கனைப்பதும், காதல் பாட்டுக்கள் பாடுவதும், கலகல வெனச் சிரிப்பதும், பணத்தை எடுத்து வீசுவதும், படாடோபம் செய்வதுமாக இருக்கிறார்கள். இத்தகைய ஆண்டவன் பூஜைக்கு என்ற பெயரை வைத்து நடத்தப் படுகிற திருவிழாக்களிலே மக்களின் எண்ணமெல்லாம் ஆண்டவன் அறிவார் என்று சொல்கிறார்கள் பெரியோர்கள். தவன உற்சவத்துக்கு வந்தவர்களின் எண்ணத்தை ஆண்டவன் உள்ளபடி அறிந்திருப்

பின், நான் சொல்கிறேன், ஒரு நிமிஷம் கூட அங்கே இருக்க மாட்டார். எழுந்து ஓடிப்போய், கோயில் கதவைத் தாளிட்டுக் கொண்டு விடுவார். ''உங்கள் முகத்திலேயே நான் விழிக்கமாட்டேன். என்னைச் சாக்காக வைத்துக் கொண்டு நீங்கள் கேளிக்கையாக இருக்கவும் காமச்சேட்டைகள் செய்யவும், ஆடம்பர ஆட்டம் ஆடிவருகிறீர்கள். நான் இதற்குத்தான் பயன்பட்டேன். நான் என்ன பித்துக் கொள்ளியா?'' என்று கூறுவார். மாயை, மாயை என்று வேதாந்தம் பேசும் மக்கள் உள்ளபடி மாயை என்று உலகத்தையோ உலக சுகபோகத்தையோ கருதினால், ஊரிலே இவ்வளவு திருவிழாக்கள் நடைபெறாது.

* * *

தேளையும், பாம்பையும் உலகம் ஒழித்து விட்டது? அதுபோல் கொடிய வழக்கங்களையும் ஒழித்து விடத்தான் இல்லை. துஷ்டஜந்துக்களைக் கண்டால் கொல்வார்கள் துஷ்ட வழக்கங்களையோ இந்த நாட்டிலே துதிக்கிறார்கள். தத்துவம் கூறவோ தயார், தயார் என்று பலர் இருக்கின்றனர்.

* * *

ஊரிலே இரண்டு மூன்று களவு நடந்து கண்டு பிடிக்காவிட்டால், போலிசாரைத் திட்டுகிறார்களே, எவ்வளவு கொடுமைகள் நடக்கின்றன உலகிலே, அணுவை அசைப்பதையும் தமது அருளின் சக்தியினால் தான் என்று அனைவரும் கூறும் ஆடம்பர பெருமையை அணிந்து கொண்டுள்ள ஆண்டவன், ஏன்

இக் கொடுமைகள் நடக்கப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

* * *

ஒருவனுடைய இரக்கத்தால் தான் வாழமுடியும் என்ற நிலைமை மக்களிலே பலருக்கு இன்று இருக்கிறது, அந்த நிலைமையே மாறவேண்டும். அந்த நிலைமையை உண்டாக்கி வைக்கும் முறை மாறவேண்டுமானால், மக்கள் மன்றத்திலே, காசிக்ஷேத்ர மகாத்மியம் பேசப்படுவது குறைக்கப்பட்டு மாஸ்கோ மணத்தின் மாண்பு எடுத்துரைக்கப்படவேண்டும். அதிகமாக உதவி செய்—உத்தமனாவாய் என்பதற்குப் பதில் உரிமை கொடு உலகைக் கெடுக்காதே என்று சொல்லவேண்டும்.

* * *

மோட்டார் நன்றாக ஓட அதை ஒட்ட விசை இருந்தால் மாத்திரம் போதாது—அது தவறான வழியில் சென்றால் தடுக்க 'பிரேக்கும்' வேண்டும்!

* * *

அச்சுப் பொறிகள் கண்டு பிடிப்பதற்கு முன்னர் ஓலைச் சுவடியைக் கண்டு பிடித்த அறிவுத்திறனை நாம் பாராட்டுகிறோம். அதைப் போலவே முதன் முதலில் விலங்குகளின் மீது பொதிகளை வைத்துக் கொண்டு நடந்து சென்று வழிப்பயணம் செய்த மக்களிடை மரத்திலான சக்கரம் கண்டு பிடித்தவரைப் பாராட்டுகிறோம். முதன் முறை மரச்சக்கரத்தின் நடுவே

இரும்புக்க ணையை அமைத்தவரின் அறிவுத் திறனைப் பாராட்டுகிறோம். அதைப் போலவே கோபுரம் கட்டிய சிற்பத்திறமை, அகழிகள் கட்டிய திறமை இவற்றைப் பாராட்டுகிறோம்.

* * *

தமிழர் வீடுகளிலே சென்று தேவாரம் இருக்கிறதா? என்றால், இருக்கும். திருவாசகம் இருக்கிறதா? என்றால், இருக்கும். பாரிஸ் பற்றி நூல் இருக்கிறதா? இராது. ரஷ்யத் தலைவர் ஸ்டாலின் பற்றி நூல் இருக்கிறதா? இருக்காது. அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் பற்றி இருக்கிறதா? இருக்காது. விஞ்ஞானம் பற்றி நூல் இருக்கிறதா? இராது. அகநானூறு - புறநானூறு நம்மவர் வீடுகளிலே கணமுடியாது. அல்லி அரசாணிமாலை, போஜன் சரித்திரம், பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை, அம்மானை ஒப்பாரி முதலியவை நம் வீடுகளில் இருக்கும்.

* *

இக்கால அறிவைக் கலந்து தரக்கூடியதாகவும் சுவைக்கக் கூடியதாகவும் பாருக்குப் பயன்படுவதாகவும் பல நூல்கள் தோன்ற வேண்டும்.

* * *

நூல்களை எழுதிய புலவர்கள் பட்ட துன்பத்தைப் பற்றிக் குறிப்பிடமாட்டார்கள். நூல் எழுதுவதற்கு மாரியம்மன் துணை இருந்தது என்றும், இரவில் தூங்கும் பொழுது சூலத்தால் நாக்கில் எழுதிவிட்டுச்

சென்றுள்—அதனால் கவிபாடும் வல்லமை பெற்றுர் என்றும் ஏடுகளுக்கு முன்னுலே தைரியமாகத் துணிந்து எழுதுவார்கள்.

*　　　*　　　*

புத்துலகத்தை இக்காலத்திலே நூல் வடிவிலே தரவேண்டும். பாற்கடலிலே பரந்தாமன் பள்ளி கொண்டிருந்த கதை அந்தக் காலத்துக்குத் தேவை ; 5,6 வயதுடைய பாலகன் பள்ளிக்குச் சென்று வீதி வழியாக வீட்டுக்குத்திரும்பும் பொழுது, தின்பண்டத் தைத் தெருவிலே தின்று கொண்டு போகிருன். பையன் 18 அல்லது 20 வயதை அடைந்ததும் பொட்டலத்தைப் பிரித்து தெருவிலே தின்பது முறை யல்ல என்று கருதி தின்பதற்கு தனி இடம் நாடுகி ருன். மனிதனுக்கு முதலில் ஏற்படுகிறது குழந்தைப் பருவம் ; பிறகு சிந்தனைப் பருவம் வீட்டிலே.

*　　　*　　　*

அசோகர் ஆயுதம், சிவாஜி விரலில் அணிந் திருந்த புலிநகம், அந்தக் காலத்துக்குத் தேவைப் பட்டன. நாமும் இப்பொழுது சிவாஜியின் நகத்தை விரலில் அணிந்து கொண்டால் சிவாஜியாகிவிட முடியுமா? இந்த ஆயுதங்கள் அந்தக் காலத்துக்குத் தேவைப் பட்டிருக்கலாம்.

*　　　*　　　*

பாடகர் ஒரு பெரியாரிடம் பாடம் கேட்டார். ஆசிரியர் கண்ணைச் சிமிட்டினுர் - உடனே மாணவர்

அருளைப் பெற்றார். உடனே பாடினார் என்று சொன்னால், நம்ப முடியுமா? திரு. வி. க இசையைப் பற்றிப் பேசுகிறார் என்றால், இசையைப் பற்றி நன்கு படித்து இசைத்திறனைக் கொண்டு பேசுகிறார் என்பது தானே கருத்து! திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் ஆராய்ச்சித் திறன் கொண்டு நன்கு ஆராய்ந்து ஆராய்ச்சிச் சொற்பொழிவு செய்கிறார் என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்கள். அதை விட்டு விட்டுச் சேதுப்பிள்ளை அவர்களின் மேஜையின் மீது இருக்கும் பால் இருக்கிறதே அது ஞானப்பால், அந்த ஞானப் பாலால்தான் இவருக்கு ஆராய்ச்சித்திறன் வந்தது என்று சொன்னால் நம்ப முடியுமா?

* * *

நாட்டிலே மறுமலர்ச்சி ஏற்பட்டுவிட்டது. தமிழ் மொழி உணர்ச்சியும், தமிழ் மக்கள் உணர்ச்சியும், இனிப்பிரிந்து வாழ முடியாது. தென்றலும், புயலும் ஒன்று சேர்ந்துவிட்டன. இப்பொழுது கூட்டு முயற்சி தேவை.

* * *

வெளி உலகத்தைப் பற்றி நம்மவர்களில் பலருக்குத் தெரியாது. ஆஸ்திரேலியா தெரியுமா என்று கேளுங்கள். தெரியாது என்று திகைப்பார்கள். பிரம்மலோகம் தெரியுமா? என்று கேளுங்கள். பேஷாகத் தெரியும், என்று நேரில் போய்ப் பார்த்து விட்டு வந்ததைப்போல சொல்லுவார்கள். இப்போது ஆகாய விமானம் மூன்று விதமான முறையிலே

அமைக்கப் பட்டிருக்கிறதே தெரியுமா என்று கேளுங்கள், தெரியாது. ஆதிசேஷன் தெரியுமா ? அனந்த சயனம் தெரியுமா ? பரமசிவன் தெரியுமா ? பார்வதி தெரியுமா ? எமதர்ம ராஜா தெரியுமா ? அவர் வைத்துக் கொண்டிருந்த பாசக்கயிறு தெரியுமா ? சித்திர புத்திரன் தெரியுமா ? அவர் கரத்திலே வைத்துக் கொண்டிருந்த ஏடு தெரியுமா? இத்தனையும் தெரியும் என்பார்கள்.

* * *

பூகோளம், சரித்திரம், வீரர்களைப்பற்றி வரலாறுகள் உலக முன்னேற்றத்துக்கு உழைத்த உத்தமர்களின் ஏடுகள் முதலியவைகளைப் பற்றிப் பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்கு நன்ருகப்போதிப்பதில்லை. நம் மக்கள் கொலம்பஸ், வாஸ்கோடகாமாவைப் பற்றி நன்கு அறியமாட்டார்கள். உலக முன்னேற்றத்துக்காக உழைத்த விஞ்ஞான வித்தகர்களைப் பற்றித் தெரிந்திருக்கமாட்டார்கள். ஏன் ?

* * *

குடையைக் கண்டு பிடித்தவர் தெரியுமா ? என்று கேளுங்கள். கப்பலைக் கட்டிவிட்டவர் யார் என்று கேளுங்கள்; தெரிந்திருக்க மாட்டார்கள். விஞ்ஞானத்திலே புரட்சி செய்து கொடுமைக்கே ஆளான அன்பர்களைப் பற்றி மக்கள் அறியமாட்டார்கள். சாக்ரட்டீஸின் விஷக் கோப்பை—அந்த விஷத்தால் அவர் மாண்டதை அறிய மாட்டார்கள், பார் நலம் பேசிய பாபெனும் மகானைக் கோரமாய்ச் சுட்டுக்

கொன்றதை அறியமாட்டார்கள், சித்திரவதை செய்து நெருப்பிலே நீறுக்கி, நாடு கடத்தப்பட்டவர்களைப்பற்றி அறியமாட்டார்கள்; நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.

*　　　*　　　*

இதோ என் முன் ஒலிபெருக்கி இருக்கிறது. இதை முதலில் கண்டுபிடித்தவனைப் பற்றி எத்தனையோ பேர் பித்தன் என்கிருர்கள். ஒரு தடித்த கம்பி முனையில் மொக்கை போன்று ஒன்று, அதிலே ஒருவர் பேசுவதைப் பலர் அமைதியாகக் கேட்கலாமென்று சொல்பவனைப் பித்தன் என்றுதான் சொன்ஞர்கள். இத்தகைய விஞ்ஞான ஆராய்ச்சியிலிறங்கியவர்களுள், மனைவியால் ஏளனம் செய்யப்பட்டுப் பிரிந்தோர் எத்தனையோ பேர். தகப்பனை விட்டுப் பிரிந்து பாகப் பிரிவினை செய்து கொண்டோர் எத்தனையோ இந்த ஒலி பெருக்கியின் பெருமையைப் பற்றி அறியாமல், இந்த ஒலி பெருக்கியின் முன்னே நம்மவர் தேவாரம், திருவாசகம் பாடக்கேட்பீர்கள்.

*　　　*　　　*

விஞ்ஞான வித்தகர்கள் மக்கள் வாழ்க்கையை வளமாக்க பல அற்புதங்களைக் கண்டு பிடிப்பதை மக்கள் அறியமாட்டார்கள். எதிர்கால உலகம் விஞ்ஞானிகளைப்பற்றிய நல்ல ஏடுகளைத் தயாரித்து மக்கள் மன்றத்திலே வைத்துப் பொது அறிவை

விருத்திச் செய்யவேண்டும். ஒவ்வொருவரும் வீட்டுக்கொரு புத்தக சாலையை அமைக்கவேண்டும்.

* * *

பெண்மணிகள் காஞ்சி கருட சேவைக்குச் சென்றால் சேலை வாங்காமல் வருகிறார்களா? திருவண்ணாமலைத் தீபத்துக்குச் சென்றால் ஏதாகிலும் சாமான்கள் வாங்காமல் வருகிறார்களா? ஆருத்ரா தரிசனத்துச்குச் சென்றால் சாமான்கள் வாங்காமலா வருகிறார்கள்? அந்தச் செலவுகளை எல்லாம் சுருக்கி, புத்தகம் வாங்குவதில் செலவிட வேண்டும்.

* * *

நம்மவர் வீடுகளிலே சென்றால் சமயலறை இருக்கும், பூஜை அறை இருக்கும், படுக்கை அறை இருக்கும். புத்தகம் வைப்பதற்கென்று ஒரு அறையோ ஒரு இடமோ இராது.

* * *

பிள்ளையார் மாடம் இருக்கும். அதற்குப் பக்கத்தில் பஞ்சாங்கம் இருக்கும். விநாயகர் அகவல் இருக்கும். அதற்குப் பக்கத்திலே பால்காரன் கணக்கிருக்கும். ஆங்கிலம்—தமிழ் அகராதி, அட்லஸ், சரித்திரப் புத்தகம் இவை இரா. வாங்குவதற்கு பணமில்லை என்று சொல்ல முடியாது. மற்றவற்றிற்குச் செலவு செய்வதில் ஒரு பகுதியை ஒதுக்கிப் புத்தகங்கள் வாங்குவதற்கென்று செலவிடவேண்டும்.

* * *

நூல்கள் தமிழ் நாட்டிலே அதிகமாகப் பரவவே யில்லை. ஆங்கிலேயர் லட்சக் கணக்கில் புத்தகங்களை அச்சடித்து அவர்கள் புத்தகங்களுக்கு உலகத்தையே மார்க்கெட்டாக ஆக்கிவிட வில்லையா? தமிழிலே புத்தகம் எழுதினால் எத்தனை ஆயிரம் செலவழிகிறது?

* * *

நம் நாட்டிலே அதிகமாக செலவழியும் புத்தகங்கள் இரண்டே இரண்டுதான். ஒன்று பஞ்சாங்கம்; மற்றொன்று இரயில்வே 'கைடு' இந்த நிலை மாற வேண்டும். பஞ்சாங்கமும், இரயில்வே 'கைடு'ம் செலவழிவதைப் போலத் தமிழ்ப் புத்தகங்கள் செலவாக வேண்டும்.

* * *

நம் நாட்டில், பல கோயில்களில் லட்சக்கணக்கான ரூபாய்கள், நகைகளாகவும் நிலங்களாகவும், வாகனங்களாகவும் கிரீடங்களாகவும் மக்களுக்கு ஒரு சிறிதும் பிரயோசனமில்லாமல், முடங்கிக் கிடப்பதை எடுத்து, பல ஆலைகளையும், தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தலாமே! இந்தியாவில் வாழும் 40 கோடி மக்களும் வேலை செய்து பிழைக்கலாமே! நாட்டின் பொருளாதார வளமும் பெருகுமே! வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியுமே!

* * *

அமெரிக்கா செல்வபுரியல்லவா? அமெரிக்காவில் ஏசுநாதருக்கு, தங்கத்தேர் செய்ய முடியாதா?

இத்தாலியிலே முடியாதா? இதுவரை நம்மை ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நினைத்தால், ஏசுநாதருக்கு வைரக்கருட வாகனம் செய்ய முடியாதா? செல்வ மில்லையா அவர்கள் நாட்டில்? நம் நாட்டிலேதான் தங்கத்திலே கருட வாகனங்கள் தங்கயானைகள், வெள்ளி ரிஷபங்கள் எல்லாம்!

* * *

பலகோயில்களில் வைரமாக, முத்தாக, பச்சை யாக, நவரத்தினங்களாக நகைகள் இழைத்து வைத் திருக்கிறார்கள். இந்திய அரசாங்கத்தார், இந்தி யாவை அடமானம் வைத்து உலக பாங்கியிலிருந்து கடன் வாங்கப் போகிறார்கள். அதற்காக, அமெரிக் காவிலிருக்கும் சர்வதேச பாங்கியிலிருந்து பொருளா தார நிபுணர்கள் வந்தார்கள். அவர்களிடம் ஓடுகிற காவிரியைக் காட்டியும், கோதாவரியைக் காட்டியும், விண்ணை இடிக்கும் இமயத்து உச்சியைக் காட்டியும், விந்தியமலையைக் காட்டியும், காட்டைக் காட்டியும், நாட்டைக் காட்டியும், நாட்டின் வளத்தைக் காட்டியும் சர்க்கார் கடன் கேட்டிருக்கிறார்கள். உலக பாங்கு களிலே கடன் வாங்கக்கூடிய நிலையில் நம் இந்திய சர்க்கார் இருக்கிறது.

* * *

கோயில்களில் கோடிக் கணக்கான ரூபாய்கள் நகைகளில் முடங்கிக் கொண்டிருக்கின்றன. மக்கள் அரிசியின்றி அல்லற்படும் பொழுது, நூற்றுக் கணக் கான மூட்டைகளைப் பதுக்கி வைப்பதையும், கள்ள

மார்க்கெட்டில் விற்பதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். நாட்டிலே, பணமின்றி வறுமை தாண்டவமாடும் போது, கோயில்களிலே பல கோடி ரூபாய்கள் கடவுளின் பெயரால் பதுக்கிவைத்திருப் பதும் ஒருவித கள்ளமார்க்கட் அல்லவா?

* * *

வாழ்க்கையில் நாம் சிறந்த பொருள்களை, வாழ்க் கைக்கு வளமான பொருள்களைச் சிறிதும் வாட்ட மின்றிப் பெறமுடியாது; அதற்கு ஓயாத உழைப்பும், சலியாத முயற்சியும் வேண்டும்.

* * *

இயற்கையாக எழும் உணர்ச்சியை அடக்கி அழிகக முடியாது. அடக்க அடக்க, அது அழுத்தி வைக்கப் பட்டிருக்கும் ரப்பர் பந்து விட்டதும் மேலே எழும்புவதுபோல, மிகமிக மேலுக்குத்தான் கிளம்பும்.

* * *

வைதீகம் என்னும் நோய்க்கு டாக்டர்கள் மருந்துக் கொடுத்துக் குணப்படுத்த முடியாது. பகுத் தறிவு என்னும் ஒரே மருந்தால் வாலிபப் பருவத்தி லுள்ள மாணவர்களால் வைதீகம் என்னும் நோயைப் போக்கடிக்க முடியுமே தவிர வேறு எந்த மருந்தாலும் முடியாது.

* * *

மாணவர்களின் மனவளம் அவர்களின் குடும்ப வளத்தையே பெரிதும் பொறுத்திருக்கிறது. கல்வி

யில் நாட்டம் பிறக்கவும், அதில் ஆர்வம் வளரவும் சுற்றுச்சார்பைவிடச் சிறந்த ஆசான் வேறு இருக்க முடியாது.

* * *

கடவுள் என்ற சொல்லுக்கு எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒருமெய்ப் பொருள் அல்லது மெய் யுணர்வென்பதே பொருளாகும். இத்தகைய சிறந்த கருத்தமைந்த கடவுள் என்ற சொல், தமிழைத் தவிர வேறெம்மொழியிலும் அமையவில்லை.

* * *

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண் டால் நாட்டுக்கு நல்லநிலை ஏற்படும்.

* * *

பொங்கற் புதுநாள்—திருநாள், வாழ்வின் உட் பொருளை உணருவதற்கு உதவும்நாள்.

* * *

இலக்கியங்கள் மனிதனது அறிவை வளர்க் கிறது. மனிதனக்கு தெளிவை ஏற்படுத்துகிறது. நன்மை தீமைகளை எடுத்துக் காட்டுகிறது. மனிதனது சிந்தனையைக் கிளறி விடுகிறது.

* * *

தமிழிலே நல்ல பாடல்கள் இல்லை என்பதைக் கேட்டும் தமிழன், தமிழ் இசை முன்னம் இருந்த விரிந்த பரந்த, நல்ல தன்மையை அறிந்தால், தலை யைக் கவிழ்த்துக் கொள்ளத்தான் வேண்டிவரும்.

* * *

சரியானதை ஒத்துக்கொள்ள வேண்டும்—ஒத்துக்கொண்டதை ஓம்பவேண்டும். இது, பண்புள்ளவர்கள் செய்ய வேண்டிய கடமை.

*　　　*　　　*

நம்நாட்டில் விஞ்ஞானம், பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டி போலவும், குருடனிடம் காட்டிய முத்து மாலையைப் போலவும், செவிடன் கேட்ட சங்கீதம் போலவும் மதிப்பற்றிருக்கிறது.

*　　　*　　　*

குற்றம் செய்பவன், குற்றம் செய்வதையே தன் பிறவிக் குணமாகக் கொண்டவன் அல்லன்.

*　　　*　　　*

தமிழ் இசை மறைந்து வேற்று மொழியில் பாடல்கள் பரவியதனால், நாம் இன்பத்தை மட்டுமே இழக்கவில்லை. இயற்கையின் அழகை உணரும் அறிவையும் பகுத்தறிவுத் திறனையும் இழந்தோம்.

*　　　*　　　*

ஆண்டவன் நம்மையும் படைத்தான்; பொருளையும் படைத்தான்; கடலுள்ளே முத்தையும் படைத்தான்; முத்தைக்கொண்டுவர மனிதனுக்குத் திறமையும்படைத்தான்; பூமியிலே பொன்னைப்படைத்தான்; அதை வெட்டி எடுப்பதற்கு ஆளையும் படைத்தான்; கல்லூரியிலே நீ படிக்க வேண்டும். ஆனால் பரீட்சை எழுதக் கூடாது என்று ஆசிரியர் மாணவனைப் பார்த்துக் கூறுவாரா? மணம் செய்து வைத்துத்

திடீரென்று தம்பதிகளைப்பிரித்து வைத்தால்—எப்படி யிருக்கும் ? அதுபோலவே, படைக்கப்பட்ட பொருள் ஒவ்வொன்றும் உபயோகத்திற்காகவே தான் !

* * *

நம்முடைய காலத்தில் ரேடியோவைத் திருப்பி விட்டால் உலகம் முழுவதும் நம் கண்முன் வருகிறது. வியாசர் கூப்பிட்ட போது வரவில்லை. நாம் கூப்பிட்ட போது உலகம் நம்முன் வருகிறது. நம் நாட்டில் எத்தனைபேருக்கு விஞ்ஞானியாகிய சர். சி. வி. இராமனைத் தெரியும் ? ஒரு போலிப் பகல் வேஷச் சாமியாரைப் பற்றித் தெரிந்த அளவிற்குக்கூட சர். சி. வி. இராமனைப் பற்றித் தெரியாதே !

* * *

மலையுச்சியிலிருந்து விரைந்து வரும் பேராறுகள் போல, கட்டுரைகள் ஜோலாவின் பேனா முனையி லிருந்து கிளம்பின !

* * *

அரபு நாட்டுக் கலையிலே, தென்றலைப் பற்றிய கவிதைகள் அதிகமிருக்க முடியாது. எஸ்கிமோ நாட்டுக் கலையிலே, கதிரோனின் ஒளிபற்றிய கவிதைகள் அதிகமிராது. ஆப்பிரிக்கா நாட்டு ஜுலு வகுப்பினரின் கலையிலே அவர்களின் நாட்டியம் கவி யிலே இருக்கும். அதுபோலவே, ஆரியக் கலையிலே கங்கையின் கவர்ச்சியும், கரையோரக் காட்சியும்,

சோலைமாட்சியும் என்பன போன்றவைகள் கவிதை களாக இலக்கியமாக இருக்கும்.

*　　　*　　　*

சட்டத்தின் கட்டுக்கோப்பு சிறந்த முறையிலும், உறுதியும் பயனும் நிறைந்த வகையிலும் இருக்கும் என்பதை அறிந்து அமைக்கும் அமைப்பாளர்கள் தேவை. அவர்களால்தான் ஸ்தாபனங்கள், நல்ல முறையிலே அமையும். அமைந்த பிறகும் கட்டுக் கோப்பு கெடாதபடி பார்த்துக் கொள்ளும் திறம் இருக்க வேண்டும்—அக்கறையும் இருக்கவேண்டும்!

*　　　*　　　*

எந்த இலக்கியமானாலும் அதன் கருத்தை—அது தரும் பாடத்தை — போதனையை — நல்லறிவைப் பொறுத்துத்தான் அதன்சிறப்பு—அதனது தேவை அமையும்—அமைந்திடவும் முடியும்!

*　　　*　　　*

மனதிலேயிருந்த மூடநம்பிக்கை, பகுத்தறிவுப் பகலவனைக் கண்டு மூடுபனிபோல நீங்க ஆரம்பித்த மறுகணமே, தொழிலாளி நினைக்க ஆரம்பித்து விடுவான்! ‘ தான் ஏன் மாடி வீட்டில் வாழக் கூடாது ’? பிறப்பில் ஒருவன் ஏழையாகவும், மற்றொருவன் பணக் காரனாகவும் ஏன் பிறக்கவேண்டும்? என்று தன் மனதைக் கேள்விகள் கேட்பான். அந்த நினைப்பின் வளர்ச்சியைத் தடைப்படுத்த யாராலும் முடியாது?

இயற்கையை வணங்கி இறைவன் ஒருவனே; அவன் எங்குமுள்ளான்; எவ்வுருவும் இல்லான்; என்ற சீரிய கொள்கையுடன் யாதும் ஊரே என்ற பரந்த நோக்கங்கொண்டு எல்லோரும் சகோதரர் என்ற கருத்துடன் வாழ்ந்து வந்தனர் தமிழர்!

* * *

வீரருக்கு அழகு, எதிர்ப்படும் அத்தனை ஆபத்தையும் பொருட் படுத்தாது போரிடல்! கோழைகளின் கொள்கை, எதிர்ப்பு என்றவுடனே, என்னுகுமோ நமது கதி என்று பதைபதைத்துப் பாதகச் செயலையும் செய்யத்துணிவது. முன்னையோர் முடிவில் வெற்றியும், பின்னையோர் இறுதியில் தோல்வியும் பெற்று வந்ததாலேயே, இன்று உலகில் ஏதோ ஒரு அளவுக்காவது நீதியும் நேர்மையும் நிலைத்திருக்கின்றன!

* * *

மற்ற நாடுகளில் மாணவ மாணவிகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கும் முறைக்கும், இங்குள்ள கல்வி முறைக்கும் உள்ள வேறுபாடு மிகப் பெரிது. ஒன்றுக் கொன்று எந்த வகையிலும் பொருந்தாது. அங்கு பழமைக்கு இடம் இல்லை, இங்கு புதுமைக்கு இடம் இல்லை! ஆனால் இங்கு பழமையையும் புதுமையையும் ஒன்ருகப் பிணைத்து, மோரில் வெண்ணெய் தேடுவது போல் உருப்படாத காரியங்களைச் செய்வதில் ஈடுபடுகின்றனர்.

* * *

தமிழில் வருத்தமின்றி இயல்பால் பிறக்கும் சொற்களே நிறைந்து, கோபத்தாற் பிறக்கும் வெறுப் போசையும், துன்பத்தாற் பிறக்கும் இளைப்பொலியும் இன்றி, எல்லாம் இனிய குணத்திற் பிறக்கும் மெல் லோசைகளாய் இருத்தலின் தமிழ் இன்பவடிவாய் விளங்கும்.

* * *

உலகிலுள்ள மொழிகளில் தமிழ்மொழி ஒன்று தான், பிற மொழிச் சொற்களை எந்த ஏதுவைக் கொண்டும் இரவல் வாங்காமல் தனித்து இயங்கக் கூடியது; எந்தவிதமான புதுச்சொற்களுக்கும் தமிழில் சொற்களை ஆக்கிக் கொள்ளும் திறமை, தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டும் உண்டு!

* * *

தண்ணீரை ஜலம் என்றும், சோறு என்பதைச் சாதம் என்றும், மலர் என்பதைப் புஷ்பம் என்றும், கண்கூடு என்பதை பிரத்தியட்சம் என்றும், கறி என்பதைப் பதார்த்தம் என்றும், சாறு என்பதைச் சாம்பார் என்றும், மிளகுநீர் என்பதை ரசம் என்றும் முதுகுன்றம் என்பதை விருத்தாசலம் என்றும், மறைக் காடு என்பதை வேதாரண்யம் என்றும் தமிழ் மக்க ளால் மிக எளிதாகச் சொல்லக்கூடிய தூய தனித் தமிழ்ச் சொற்கள் எல்லாம் வடமொழிச் சொற்களாக ஆக்கப்பட்டுவிட்டன.

ஆசைக்கும் அச்சத்துக்கும் இடையே ஊசலாடு வோர் பூசலின் போது ஏசலும் பூரித்திருக்கும் போது புன்னகையும் பெறமுடியுமேயொழிய வெற்றிபெற முடியாது !

* * *

பாட்டாளி மக்கள் பயன்பெறும் பண்டிகைதான் தைப்பொங்கல், எல்லோரும் இன்புற்று வாழ வேண்டு மென்பதே தமிழனின் தனிப்பண்பு ! பிறரின் இன்பம் கண்டு,தான் இன்புறும் மாசற்ற குணம் தமிழனின் உடன் பிறந்தது !

* * *

இவ்வுலகில் உயிரோடு இருப்பது மட்டுமல்ல; வாழ்க்கை ! கல்வி கேள்விகளில் சிறந்து, மக்களை மக்களாக மதித்து, நடந்து, சோம்பித்திரியாது சுறு சுறுப்பாக உழைத்துச் செல்வத்தைப் பெருக்கி, தேவைக்கேற்ற அளவு பெற்று இன்பம் பயக்கும் பல சாதனங்களையும் கண்டு வாழ்வதுதான், மனித வாழ்வின் முடிந்த லட்சியம் என்பதை நாம் ஒவ்வொருவரும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

* * *

இடத்துக் கேற்றபடி இயல்பு அமைவதும், அங்ஙனம் அமைந்துள்ள இயல்புக் கேற்றபடி பல்வேறு இனங்களின் கலாச்சாரம் காணப்படுவதும், அந்தக் கலாச்சாரத்துக்குத் தக்கபடி சட்டதிட்டங்கள் அமைக்கப்படுவதும் எங்கும் காணப்படும் பொது

விதி ; சிலவிதி விலக்குகள் இருக்கலாம். ஆனால் பொது விதி என்றும் பொய்யாவதில்லை !

*　　　*　　　*

இந்தியா என்றோர் நாடுண்டு ; அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு, பொன்னும் பொருளும் மிகவுண்டு ; போக்கறியாதார் நிரம்ப உண்டு என்ற அளவில், பதினாறும் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருந்தது.

படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கி விட்டது. அப்போது, இந்தியா, என்றோர் நாடுண்டு ! அது ஆங்கிலருக்கு நல்லவேட்டைக்காடு என்று உலகம்இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டது.

*　　　*　　　*

காந்தியார் காங்கிரசுக்குள் புகுந்த பின்னரே, இந்தியா என்றோர் நாடுண்டு ; அங்கு விழிப்பும் உண்டு என்று உலகம் அறிந்து கொள்ள முடிந்தது.

*　　　*　　　*

புதிய மார்க்கம் துவக்கிய புத்தர், வீரத்தாலும் பிறகு விவேகத்தாலும் இந்தியாவின் புகழை வளரச் செய்த அசோகன், பெரியவல்லரசுகளைக் கட்டி ஆண்ட மன்னர்கள், ஆகியோர் படித்தவர்களுக்கு மட்டுமே தெரியக்கூடிய நிலை பெற்றனர். மகாத்மாவையே, மாநிலம் முழுதும் - படித்தவர்- பாமரர் - பாராளுமன்றத்தினர் - உலகத்திலுள்ள அனைவருமே

அறிந்து கொண்டதுடன், அவர்களின் மனதிலேயும் அவர் இடம்பெற்ருர்.

* * *

பிறப்பினுல் உண்டாகும் அறியாமையினின்றும் நீங்கிச் சிறப்பைத் தருகின்ற செவ்விய பொருளே, அதாவது பகுத்தறிவைப் பெற்று அதன்படி நடப்பதே அறிவு எனப்படும்.

* * *

அணுகுண்டு கண்டு பிடிக்கப்பட்ட காலத்திலே வாழும் மாணவர்களுக்கு, அனுமானுக்கு வால் வளர்ந்த கதையைப் படமாக்கி வைக்கும்செயல் நாத்திகத்தைக் காட்டிலும் கேடு அல்லவா ?

* * *

ஒருகாலத்தில் ஜெர்மனியும், பிரான்சும், இத்தாலியும், இங்கிலாந்தும் வேறு பல நாடுகளும் பாவ மன்னிப்புச் சீட்டுக்களைப் பாதிரிமார்களிடம் பணங் கொடுத்துப் பெற்றுப் பரமனைத் திருப்திப் படுத்திய தாக எண்ணியதுண்டு ! ஏசுவின் விசுவாசிகள் அனைவரும் கத்தோலிக்கராக மட்டுமே இருந்தனர் ! மார்ட்டின் லூதர் என்ற மாவீரன் தோன்றினுன் ; மார்க்கத் துறையிலே மறுமலர்ச்சியை உண்டாக்கினுன். பிராட்டஸ்டண்ட் கிளர்ச்சி நடந்தது. இதன் பயனுக ஏசுவின் விசுவாசிகளின் எண்ணிக்கையும் குறையவில்லை. கிறிஸ்து மார்க்கத்தின் எழிலும் குறையவில்லை. எதிர்ப்பும் ஆபத்தும் அடக்கு முறைகளும் இருந்தன ; மறைந்தன ! லூதரின் புரட்சி,

அறிவுப் பூங்காவிலே, அழகான மறு மலர்சியை உண்டாக்கிற்று

* * *

சட்டம் தாய்மொழியில் இல்லை : கடவுள் சன்னிதானத்திலே தாய்மொழி இல்லை ; மருத்துவமனைகளில் தாய் மொழி இல்லை ; என்றால், மக்கள் தாய் மொழியைப் புறக்கணிக்கத்தானே செய்வார்கள்.

* * *

நாட்டு மக்களிலே நல்லறிவாளர்கள், குறிப்பாக இளைஞர்கள், தாய்மொழிப்பற்று ஓர் உயிர்ப் பிரச்சனை என்பதை உணர்ந்தால், உண்மையிலேயே தாயகம் விடுதலை பெறும் ; வீறு கொண்டெழும் ; புதிய பொலிவும் வலிவும் பெறும் !

* * *

சட்டம் ஒரு இருட்டறை ; அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு ; அந்த விளக்கு ஏழைகளுக்கு எட்டாது.

* * *

எடுத்த காரியத்தை எதிர்ப்புக்கும் ஏளனத்திற்கும் அஞ்சாமல், புகழ்ச்சிக்கும், பூசலுக்கும் மண்டியிடாமல் செய்து முடிப்பதே மனிதர் மனிதருக்கு தன்மையோடு செய்யும் நேரிய செயல் !

* * *

ஒருவரையொருவர் கண்டவுடன் முகமலர்ச்சி சிரமமின்றி ஏற்படவேண்டும் ; பயன் கருதியல்ல— பாசாங்குக்கு அல்ல—அர்த்த மற்றதுமல்ல—கண்ட

தும் களிப்பு ; நம்மைப் போல ஒருவன் என்ற நினைப்பில் இருந்து அந்தக் களிப்பு மலர வேண்டும். அஃதே தோழமை !

* * *

அறிவுக்குப் பொருந்தாதவையும் ஆராய்ச்சிக்கு நிற்காதவையும் ; அறிவையே அகற்றி மடமையை மக்கள் மனத்தில் புகுத்தும் போலிகளாக இருத்தல் கூடாது, ஒவ்வொரு நாட்டின் இலக்கியங்கள் !

* * *

கலை என்பது நெறி, முறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

* * *

மக்கள் மன்றத்திலே திருவள்ளுவர் இடம் பெற்று விட்டார், பொது அறிவைப்பெற, மக்களுக்குத் திருவள்ளுவர் பெரிதும் துணை நின்றார். இந்த ஏட்டை உலகம் போற்றுகிறது—ஆகவே, ஒவ்வொருவரும் திருக்குறளை அவசியம் படித்தே ஆக வேண்டும். எல்லா நூல் நிலையங்களிலும், திருக்குறள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

* * *

அகிலொடு சந்தன மிகு அடல்கொண்ட மலைநாடா !
ஆழ்கடலின் முத்தெடுத்து அகிலத்துக் கனுப்பி யோனே !
நாமணக்கும் பாமலிந்த நாட்டின் நல்லோய் !
பூ மணக்கும் பொழில் சூழ்ந்த பொன்னி நாடா !

புகழ் மணக்கப் பெற்றிடுவோம் புதுமை வாழ்வு!
புறப்படுவாய்! போரிடுவாய்! வெல்வாய்!

* * *

மாற்றுக் குறையாதது தானப்பா தங்கம்! நற்குணமும் அது போல்தான்! குறைவற இருந்தால் தான் நற்குணம்! கொஞ்ச நஞ்சம் துண்டுதுணுக்கு என்ற முறையிலே நற்குணம் இருத்தல் முறையாகாது!

* * *

வெறும் மண், மழையால் கரையும்—அதேமண் அழுத்தம் ஏற்பட்ட செங்கற்களானல், மழையைச் சட்டை செய்வதில்லை.

* * *

வேறுபாடான எண்ணங்கள் எழலாம். மோதிக் கொள்ளலாம். இறுதியில் குழைந்து போகலாம், வெறுப்புணர்ச்சியாக மாறிடலாகாது!

* * *

இரவு மதுரமாயிருந்தபால், காலையிலே திரிந்து விட்டால், சாக்கடைச் சேருகிறது! மாலையிலே மாளிகையிலே மஞேகரிகளின் கூந்தலுடன் கொஞ்சி விளையாடிய மலர், காலையிலே கசங்கியதும் வீசி எறியப் படுகிறது குப்பையிலே! பொருள்கள் மட்டுமல்ல; எண்ணங்கள், ஏற்பாடுகள், முறைகள், நீதிகள் எனும் எவையும் அப்படித்தான்! காலத்துக்கு ஏற்றதாக, நடைமுறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

* * *

செடியிலே மலர் கூத்தாடுகிறது, மணம் வீசு கிறது ; மறுநாள் வாடுகிறது, உதிர்கிறது ; பிறகு வேருெரு மலர் உதிக்கிறது. இரண்டாவது மலர் பூத்திட, அந்தச்செடிக்கு நீர்பாய்ச்சி எருவிட்டுப் பாதுகாக்க வேண்டும். அப்போது தான் புதுமலர் கிடைக்கும். அதுமட்டுமல்ல நமதுபணி ! வாடிய மலரையே மீண்டும் மலரச் செய்ய முயல்கிருேம் !

*   *   *

பட்டை தீட்டி ஒளி ஏற்றியவன் வைரத்தை விட்டு விட்டுச் செல்வாளுகில், நான் பட்டை தீட்டிய தால் கிடைத்த ஒளியை என்னுடன் எடுத்துச் செல் வேன் என்று கூறமுடியும்? அதுபோலத்தான், கூட்டு முயற்சியின் விளைவாக ஏற்பட்டு விடும் எழுச்சியிலி ருந்து, எந்த ஒரு அளவையும் எவரும், தனியாக்கி எடுத்துச் செல்ல முடியாது. உடை, உணவு, பணம், இடம், பழங்கலம், பழைய ஏடு இப்படிப் பட்டவை களை எடுத்துச் செல்லலாம் ; எழுச்சியை எடுத்துச் சென்றிடமுடியாது.

*   *   *

தோகையைத் தனியே எடுத்து, வான் கோழி யுடன் இணைத்து விடுவதால், மயிலாட்டத்தை விட அழகானதாக இருந்து விடாது !

•   •   •

கோபம் குடிகொண்டிருக்கும் போது, வேறு எந்த எண்ணமும் கிட்டே நெருங்கப் பயப்படும் ! பாசம் என்பது பொருளற்றது ஆகத் தோன்றும்.

நேசம் என்பது சிலந்திக் கூடுக்குச் சமம் என்று பேசச் சொல்லும்! ஒட்டு என்ன! உறவு என்ன! என்று கேட்கத் தோன்றும்! தழதழத்த குரல் இராது; தீ மிதித்த நிலையினர் போலாவார். ஆத்திரப்படுவது. அறிவுள்ளோர் செயலாகுமா?

* * *

வீரமற்ற வஞ்சக உள்ளங் கொண்டோர் மறைந்திருந்து தாக்குவர்; மாற்றானை மாய்த்திட எம்முறையும் ஏற்றதே என்று கூறுவர். மாமரங்களுக்குப் பின்புறமிருந்து வாலியைக்கொன்ற ஆரிய ராமன் போல! நண்பனாக நடித்து நய வஞ்சகத்தால் காரியத்தைச் சாதிக்கும் கயவரும் உண்டு! எதிர்ப் போரின் உடன் பிறந்தாரையோ, ஏவலரையோ, விலைக்குப் பெற்று, விபீஷணாஸ்திரத்தால் வீரனை வீழ்த்தும் வகையுமுண்டு. மாயமொழி பேசியும் மாற்றானை மாய்ப்பதுண்டு! எதிரியின் ஏமாளித்தனத்தைத் தெரிந்து அவனைச் சாய்ப்பவருமுண்டு! உலகம் பலவிதம்!

* * *

மனிதன் பறக்கக்கூடக் கற்றுக் கொண்டான்! பார் முழுவதையும் பாக்கெட் சைஸ் ரேடியோவுக்குள் அடக்கி விட்டான். ஆனால் இன்னமும் பசி, பட்டினி, பஞ்சம் இன்றி எல்லோரும் வாழ வழி கண்டு பிடிக்க மட்டும் மனிதனுடைய அறிவு அவனுக்குப் பயன்படவில்லை.

* * *

மலர்கொண்டு மாலை தொடுத்தலிலே கைத் திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் கைத் திறன் முழுவதும் காட்டி காகிதப் பூமாலை தொடுத் தால் பயன் என்ன? மாலைக்கு முதற்பொருள் மண முள்ள மலர். அதுபோல பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.

*　　　　*　　　　*

பேசுபவரின் கருத்து பயன் தருமாயின் கேட்ப வரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும், அவர்கள் ஏற்றுக்கொள்வர். எனவே, மேடைப் பேச் சுக்குக் கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விளையும்படி செய்வது, மிகமிக முக்கியம். பூத்த மலரை அழகுறத் தொகுத்தல் போல, கிடைத்த கருத்தைத் தொகுத்தும் வகுத்தும் பிரித்தும் வெல்லும் சொல் தெளிவானநடை, நம்பிக்கையூட்டும் போக்கு இவைகளைக் கொண்டு பேச்சு அமைத்தல் வேண்டும்.

*　　　　*　　　　*

கருத்திழந்தவனுக்கு நல்லுரையும், கண்ணிழந்த வனுக்குக் காட்சியும், செவிமந்தமடைந்தவனுக்குக் கீதமும் பயனில்லை.

*　　　　*　　　　*

தமிழ்ப்புலவர், வரலாற்றுப் போதகாசிரியர் வேலை செய்வதை, பெரும் பாலோர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் அல்லவா? டாக்டருக்குத் தோட்டச்

சுவர் எப்படிக் கட்டவேண்டும் என்று தெரிந்திருக்கலாம். ஆனால், அவரிடம் மருந்துக்குப்போவார்களே தவிர, கட்டிடப் பிளானுக்குப் போகமாட்டார்கள் !

* * *

அமைவது- அமைக்கப் படுவதை விடச் சிறந்தது ! பூத்திடும் மலர் போல், பலவர்ணக் காகிதம் கொண்டு மலரைச் செய்திடலாம் ; செய்யப் படும் பொருளிடம் மணமிராது !

* * *

நல்ல மாடி வீட்டிலே அழகான பூந்தொட்டிகளை அலங்கார வரிசையாக வைத்துக் காட்டுகிறார். வ. ரா . அழகிய உயர்தரமான கோட் ! அதிலே பூச்செண்டு செருகி விடுகிறார் காண்டேகர். பாரதி தாசன் பூங்காவையே அமைத்துத்தருகிறார். காகிதப் பூஞ்சோலை, தழைமாலை, இவைகளையே தயாரிப்பவர் களும் உண்டல்லவா ?

* * *

அகம் என்பாய் ; புறம் என்பாய் ; அழகுதரும் இலக்கியம் என்பாய் ; அவனியோர்க்கே அறிவளிக் கும் அறநூலாகும் குறள் என்பாய் ; அந்த தமிழ் மொழி பயின்றிடும் நமக்கு ஆட்சி மொழியாக இந்தியா ?

* * *

தமிழகம், எதை எதையோ தாங்கிக்கொள்கிறது. எனினும் இந்தியையுமா தாங்கிக் கொள்ளவேண்டும் ?

* * *

"இந்தி பேசாத மக்களின் விருப்பம் அறியாமல், 'இந்தி திணிக்கப்பட மாட்டாது ; அவர்களின் விருப்பப்படி காலக்கெடுவின்றி, ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருந்திடும் ; அதற்கான முறையில் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படும்' என்று குடியரசுத் தலைவரை அறிக்கை பிறப்பித்துவிட்டுத் தமிழகம் வந்து, உலா நடத்திக் கொள்ளும்படி கூற வேண்டும். அதைவிட்டு போலீஸ் உண்டு படை உண்டு சிறைஉண்டு, அடக்கி விடுவோம்! ஒருதுளி யும் எதிர்ப்புணர்ச்சி தலைகாட்டாதவாறு செய்திடு வோம் என்று கூறுவார்களானால், எந்தத் தலைவரின் உலா மிகச்சிறப்பாக, அனைவரும் கண்டு பெருமைப் படத்தக்க விதத்தில் நடைபெற வேண்டும் என்று அவர் கள் எதிர் பார்ப்பார்களோ, அந்தத் தலைவரின் உலா அம்முறையில் அமையாது !

* * *

நமக்கு எத்துணை கஷ்டம் நேரிடுவதாயினும், தாயகத்துக்கு மனக்குறைவு, இனத்துக்கு இழிவு, மொழிக்குத் தாழ்நிலை, ஏற்படலாகாது, ஏற்பட விடக் கூடாது. அந்தத் தூய தொண்டாற்றவே, உயிர் நம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

* * *

எதிர்ப்பு உணர்ச்சி காட்டாதிருந்தால் இந்திக் குத் தமிழகம் தலைசாய்த்து விட்டது என்று பொருள்

படும் என்று உணரும் தமிழர், அடக்கு முறைகளைக் கண்டு அஞ்சமாட்டார்கள்!

* * *

வெளிநாடுகளுடன் செய்து கொள்ளும் ஒப்பற்ற நடவடிக்கைகள், இந்தியா முழுவதுக்கும் (தமிழகம் உட்பட) என்று இயற்றப்படும் சட்டங்கள் உத்தரவுகள் எல்லாம் இந்தியில்தான்! இந்தியப் பேரரசின் கட்டுக்கு அடங்கி நடக்க வேண்டிய இராணுவத்தில் இந்தி மொழியில்தான், கவாத்துப் பழகுவதிலிருந்து, காரிய விளக்கங்கள் வரையில்! இந்தியா முழுமைக்கும் என்று இருக்கிற உச்ச உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் இந்திமொழியில்தான்! இந்தியப் பேரரசு நடைபெறப் பணியாற்றிவரும் அலுவலகங்களிலே உள்ளோர் இந்தி கற்றுத் தேறியாக வேண்டும். இவைகள் எதைக் காட்டுகின்றன! இந்தி ஆட்சிமொழியாகி விடுவதை—ஆதிக்க மொழியாகி விடுவதை!

* * *

சட்டம், தூய்மையான உள்ளத்துடன், நெறி தவரு முறையில் இயற்றப்பட்டாலும், இயற்றியவர்கள் சமூகத்தில் எவ்விதமான அமைப்பு, இருக்க வேண்டும் என்று விரும்பி, அதனைத் தமது குறிக்கோள்கள் ஆக்கிக் கொள்கிருர்களோ அதனை நிலை நிறுத்தவும், மற்றவர்களும் விரும்பினுலும், விரும்பாவிட்டாலும் ஏற்றுக் கொள்ளவும் செய்வதற்காக வடித்தெடுக்கப்படும், கருவி!

பெறநினைக்கும் பொருளுக்குத் தக்க விலை கொடுக்க எவர் தயங்குவர்? தயங்கிடின் தரணி இந்த அளவு செழித்திருக்கத்தான் முடியுமா?

* * *

வீரம் நிரம்ப இருக்கிறது—அளவுக்கு அதிகமாகவே கூட! ஆனால், விவேகம் அல்லவோ, பொறி பறக்கப் பேசுவது?

* * *

கானம் பாடிடும் வானம்பாடியிடம் என்ன பேச முடியும்? சிறிது நேரம் 'கனிய இசை' என்று மகிழ்ந்து கேட்கலாம்!

* * *

தாங்கிக் கொள்ளவே முடியாது-சகித்துக்கொள்ளவே முடியாது என்று தோன்றும் போது, சகித்துக் கொள்வதும், தாங்கிக் கொள்வதும் தலை இறக்கத்தை அல்ல, மனிதத் தன்மையின் மாண்பினை மலை அளவு ஆக்கிடவல்லது. மிகச் சிலராலேயே, இது முடியும்!

* * *

பிரச்னைகளை நாமாகவே, அலசிப்பார்த்துக் கருத்தினைக் கொள்ள வேண்டும்; நமக்காக வேறொருவர் தயாரித்துத்தரும் 'கருத்து' அவைக்கு உதவாது.

* * *

வாழப்பிறந்தோம், அதற்கேற்ப வையகத்தை மாற்றி அமைப்போம்; அவரவர் தத்தமக்குக் கிடைத்

திடும் வாய்ப்புக்கு ஏற்ப, அந்தப்பொது நோக்கம் வெற்றி பெறப் பணியாற்ற வேண்டும்.

* * *

படித்தவன், பழனி சென்று மொட்டை அடித்துக் கொள்ளாமல் இருக்கிருனு? பாதபூஜை செய்யாமல் இருக்கிருனு? பால் காவடி எடுக்கிருன் பண்டரி பஜனை நடத்துகிருன்!

* * *

நாமே ஒரு காரியத்தைச் செய்து விட்டாலும் கூட அது தீமையானதுதான் என்று தெரிந்தால் ஒப்புக் கொள்வதுதான் பெருந்தன்மை.

* * *

இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற மொழிகளில் ஒன்றோ பலவோ ஆட்சிமொழி யாவதற்கான தகுதியற்றதாகக் கருதப்படுகிறவரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்ற வகையில் அரசியல் சட்டத்தைத்திருத்த வேண்டும்!

* * *

வழியே கிடக்கும் எருக்கஞ் செடியினையும், எலும்புத்துண்டுகளையும்; சோளக்கொல்லை பொம்மைகளையும், வயல்வளை வாழ் எலிகளையும், கத்திக் கத்திச் செத்த தவளைகளையும், காலில் உதையுண்டு சிதறிய ஓட்டாஞ் சல்லிகளையுமா கூர்ந்து கவனிப்பார்கள்? உலகம் என்ன, அவ்வளவு விவரமறியாதவர்களின் இருப்பிடமாகவா உளது?

* * *

காலாட்படைகள் மட்டுமே இருந்தால் போதும். வலிவுமிக்க கோட்டைகளையும் தூள்தூளாக்கலாம் எண்றெண்ணிப் பிறவகைகளை அமைக்காதிருப்பவன் வெற்றியா பெறுவான்?

* * *

போர்வீரர்கள் செல்வதற்கு முன், பாதை போடுவோர் கரடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டு முன்னே செல்வது போல, நம்முடைய எதிர்கால சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல நம் சமுதாயத்தில் அடர்ந்துள்ள ஆபாசங்களையும், ஊழல்களையும், அறவே ஒழித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்து விட்டுச் செல்வது நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்!

* * *

குழந்தைப்பருவம் மனித சமுதாயத்துக்கு இருந்த போதுதான் இடிதேவன், மின்னல் மாதா மழை மாகாளி, தீக்கடவுள் என கடவுட் கதைகள் கட்டி விடப்பட்டன!

* * *

மற்ற மக்களுக்குத் தெரியாதது, தங்கட்குத் தெரியுமென்றும், மற்றவர்களால் சாதிக்க முடியாததைத் தாங்கள் சாதிக்க முடியும் என்றுங் கூறுபவனை ஆராய்ச்சியுடையோர் அவன் ஓர் புரட்டன் என்று ஏசி ஒதுக்குவர்; ஆராயுந் திறனற்றோரோ, அப்படியா? என்று ஆச்சரியத்தால் வாய்பிளக்க நின்று கேட்பர்; கை கூப்புவர்!

இலக்கியத்துக்குக் கற்பனை துணையென்றாலும், இலக்கணத்துக்குக் கற்பனை கேடுபயப்பதன்றோ ?

*　　*　　*

இயற்கையிலேயே முப்புறம் கடலும், ஒருபுறம் மலையும் தமிழர்கட்கு அரணாக இருந்தன. இதனால் தான், தற்காப்பு வேண்டாது, தனித்து வாழும் சிறப்பையே வேண்டினான் தமிழன், ஆதிமுதல். தனிக் குடித்தனம் நடத்துவதே தமிழன்வழக்கம் !

*　　*　　*

பல மொழிகளிலும் இல்லாத ஒரு சிறப்பு ?— தனிச்சிறப்பு தமிழுக்குண்டு ! உயர்திணை என்ற பிரிவுக் கொள்கை தமிழில்தான் உண்டு. திணை என்றால், ஒழுக்கம் ஆகும் !

*　　*　　*

வீழ்ச்சியுற்ற இனத்தினைக் காப்பாற்ற வீறு கொண்ட இளைஞர்களே தேவை — விலா ஒடிந்த வீணரல்ல !

*　　*　　*

இப்பொழுது தமிழிலே பாடுகின்ற, தமிழுக் காக உழைக்கின்ற எல்லாக் கவிவாணர்களையும் தமிழ்நாடு வரவேற்கின்றது. எக்கட்சியினராயினும் எம்மதத்தினராயினும், எக்கொள்கையினராயினும், செய்கிற தொண்டு தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் பயன் படுகிறதென்றால், தமிழனுடைய உள்ளம் குளிர் கிறது. உடனே கவிகளைக் கட்டிஅணைக்கத் தனது இரு கரங்களையும் நீட்டுகிறான். பாராட்டுகிறான்.

பரிசளிக்கிருன். இது நாட்டின் நற்காலத்திற்கோர் எடுத்துக் காட்டு !

*　　　*　　　*

இவ்வளவு நாளுமில்லாததோர் விழிப்பு ; ஓர் உணர்ச்சி ; தாய்மொழிப்பற்று ; தன்னினப் பற்று ; தமிழர்களிடையே ஏற்பட்டதற்குத் தமிழன் தன்னிலே உணர வந்ததற்குக் காரணம், புரட்சிக் கவி பாரதிதாசன்.

*　　　*　　　*

ஏமாற்றி வாழ்பவன் எத்தன் ; ஏமாறுபவன் ஏமாளி ; தன்னுணர்வு அற்ற மக்களால் தமிழும், தமிழ் அறிஞர்களும் போற்றப்படாமல் மூலே முடுக்கு களிலே தூங்கிக் கிடந்தனர் !

*　　　*　　　*

கம்பனுக்கும், இளங்கோவுக்கும் ஓட்டுப் போடச் சொன்ஞல், தேர்தலில் கம்பன்தான் வெற்றி பெறு வான்.

*　　　*　　　*

கம்பனேயும், சேக்கிழாரையும் அடிக்கடி பலப் பல நிறங்களிலே, காட்டுவதன் மூலம், வள்ளுவனே யும் இளங்கோவையும் மக்கள் அதிகம் காண முடிய வில்லே.

*　　　*　　　*

அகநானூற்றையும், புறநானூற்றையும் மக்கள் மறக்க நேர்ந்தது. கற்றறிந்தோர் ஏற்றும் கலித் தொகையைக் கற்றவரிடம் காண்பதே அரிதாகி

விட்டது. பரிபாடலைப் பார்க்கவே முடியவில்லை. ஆகவே, சங்க இலக்கியங்கள் மங்கி, மக்களுடைய மனத்தைப் பெருமல் போனதற்குக் காரணம், அந்த சங்க இலக்கியக் கர்த்தாக்களைக் காண முடியாதபடி நமது கண்முன் திரைபோட்டு விட்டார்கள்!

* * *

ஜெர்மன் நாட்டில், ஹிட்லர், தம் ஆட்சியில் கல்வித்துறையில் புகுத்திய புதுமுறைதான் பிள்ளைப் பருவத்திலேயே ஜெர்மானிய நாட்டு இளைஞர்களுக்கு ஹிட்லர் பக்தியும், இராணுவத்தினிடம் மரியாதையும், நாசிசத்திடம் நம்பிக்கையும் கொள்ளச் செய்தது!

* * *

இளங்கோவைப் பற்றி மக்கள் அறிய ஆரம்பித்து விட்டால், சிலம்பு—நாட்டிலே ஒலிக்க ஆரம்பித்து விட்டால், கம்பனுக்கும் கம்பராமாயணத்துக்கும் அவ்வளவு மதிப்பு இராது! மேன் செஸ்டர், கிளாஸ்கோ முதலிய இடங்களிலிருந்து மெல்லிய துணிகள் வருகின்றன என்ருல், லாங்கிளாத்துக்கு அவ்வளவு கிராக்கி இருக்காது என்பது மட்டுமல்ல; சேலம் வேட்டிகளுக்கும் மதிப்பு இருக்காது. ஆமதாபாத் புடவைகள் அமோகமாகக் கிடைக்கின்றன என்ருல், ஆரணங்குகள் பெங்களூர் புடைவையை எப்படி விரும்புவர்?

பாரதிதாசனின் காவியத்தைப் பார்க்க, படித்து உணர, இலக்கணம் தேவையில்லை; இலக்கியங்களைப் படித்திருக்க வேண்டுவதில்லை; நிகண்டு தேவையில்லை; பேராசிரியர்கள் உதவி தேவையில்லை!

* * *

தொல்காப்பியம் நமக்கு இருக்கும்போது, நமக்கு வேறென்ன வேண்டும் என்றிருந்தால், அகமும் சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? சிலப்பதிகாரமே போதுமென்றிருந்தால், கலிங்கத்துப் பரணி கிடைத்திருக்குமா? கலிங்கத்துப் பரணியே போதுமென்றிருந்தால், மனோன்மணீயம் தோன்றியிருக்க முடியுமா? மனோன்மணீயமே போதுமென்றிருந்தால், பாரதியாரின் தேசிய கீதங்களைக் கேட்டிருக்க முடியுமா? பாரதியாரின் தேசிய கீதங்களே போதுமென்றிருந்தால், தேசிகவிநாயகம் பிள்ளையின் தாயினுமினிய அன்பு குழைத்தூட்டும் பாக்களைப் பார்த்திருக்க முடியாது. தேசிகவிநாயகம் பிள்ளையே போதுமென்றிருந்தால், நாமக்கல்லாரின் 'கத்தியின்றி ரத்தமின்றி' என்ற புதுமாதிரியான சண்டை தத்துவப் பாடலைக் கண்டிருக்க முடியுமா? நாமக்கல்லாரே போதும் என்றிருந்தால், 'கொலைவாளினை எடடா! மிகக் கொடியோர் செயலறவே' எனும் பாரதிதாசனின் உணர்ச்சிமிக்க புரட்சிகரமான பாடலைக் கேட்டிருக்க முடியாது!

பாரதிதாசன் பாக்களைப் படித்தவுடன் அவை நமது இரத்தத்தோடு இரத்தமாகக் கலக்கிறது ; உணர்ச்சி, நரம்புகளிலே ஊறுகிறது ; சுவைத்தால் ருசிக்கிறது, படிக்கிறோம் ; பாரதிதாசன் ஆகிறோம். படிக்கிறோம், நாமும் பாடலாமா என்று நினைக்கிறோம். படிக்கிறோம் ; தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என் கிறோம் !

* * *

கூர் இல்லாத வாளைக் கூராக்குவோம் என்கிறார், பாரதிதாசன், படி இல்லாத குளத்திற்குப் படி கட்டு என்கிறார் ; குன்று இல்லாத இடத்திலே செய்குன்றுவது செய் என்கிறார் ; குள்ள உள்ளத்தைக் கொலைசெய் என்கிறார் ; கூனுதே ! நிமிர்ந்துநட என்கிறார் ; மேகத்திலிருந்த நிலவொளி வெளியே வரட்டும் என்கிறார் ; அந்தலோகத்தைப்பற்றிப் பாடாதே ! இந்த லோகத்தைப்பற்றிப் பாடு என்கிறார்; காலத்துக்கு அடிமையாகாதே என்கிறார் ; அதனால் தான், அவரைப் புரட்சிக்கவி என்றழைக்கிறோம் ; உயிர்க்கவி, உண்மைக்கவி என்று அழைக்கிறோம் !

* * *

ஏ தமிழ்நாடே ! ஏ தாழ்ந்த தமிழ்நாடே ! தேய்ந்த தமிழ்நாடே ! தன்னை மறந்த தமிழ்நாடே ! தன்மானமற்ற தமிழ்நாடே ! நன்றிகெட்ட தமிழ்நாடே ! கலையை உணராத தமிழ்நாடே ! கடவுளின் லட்சணத்தை அறியாத தமிழ்நாடே !

மருளை மார்க்கத்துறை என்றெண்ணிடும் தமிழ்நாடே ! ஏ சோர்வுற்ற தமிழ்நாடே ! வீறு கொண்டெழு ! உண்மைக் கவிகளைப் போற்று ! புரட்சிக் கவிகளைப் போற்று ! புத்துலகச் சிற்பிகளைப் போற்று !

* * *

பாடத்திட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தினால் தான் மக்களுக்குப் பழமையினிடத்திலுள்ள பாசம் குறையும் ! மனத்திலுள்ள மாசு நீங்கும் ! காலத்திற்குத் தக்கதுபோல் கருத்து வளரும் !

* * *

பகுத்தறிவுப் பிரச்சாரம் கடினமானதுதான் ! ஆனால், வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களைவிட, வேறு யாரும் லாயக்கு இல்லை. மாணவர்களே, கிராமாந்திரத்திலுள்ள மக்களிடம் அறிவு எடுத்துச் சொல்லுகிற தூதுவர்களாக அனுப்பப்பட வேண்டும்.

* * *

மக்கள், மாணவர்களிடம் இல்லாததை எதிர் பார்க்கிறார்கள். இல்லாததை இருவர்களும் இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இருவர் இருப்பதும் வெவ்வேறு இடம். இருவர் எண்ணங்கள் இருப்பதும் வெவ்வேறு இடம் !

* * *

கிராமத்து மக்கள், நம்ப வேண்டியதை நம்ப மாட்டார்கள் ; நம்பக் கூடாததை நம்புவார்கள் ; தெரிந்துகொள்ள அவசியமல்லாததைத் தெரிந்து

கொண்டிருப்பார்கள் ; தெரிந்துகொள்ள வேண்டியதைத் தெரிந்துகொள்ள மாட்டார்கள். அவர்களை இடைவிடாத பிரச்சாரத்தால் திருத்தவேண்டும்.

* * *

நல்ல எண்ணங்களைத் தூவினால்தான், அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது !

* * *

குருடனிடம் காட்டிய முத்து மாலையைப் போல, பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டி போல, செவிடன் கேட்ட சங்கீதம் போல விஞ்ஞானம் மதிப்பற்றிருக்கிறது, நம் நாட்டில் !

* * *

மதிப்புற்றிருக்க வேண்டிய பொருள், மதிப்பற்றிருப்பது நல்லதல்ல ; விஞ்ஞானம் மதிப்பு பெற மாணவர்கள் உழைக்க வேண்டும். மாணவர்கள் மக்களிடம் சென்று அவர்கள் மனதிலே உள்ள மாசை நீக்க வேண்டும். மனதிலுள்ள மாசை நீக்கி, பகுத்தறிவைப் பரப்பிவிட்டு பிறகு விஞ்ஞானத்தைப் பற்றி பிரச்சாரம் செய்யவேண்டும். அப்போதுதான் மக்கள் மனம் தெளிவடைவர் ; அறிவைப் போற்றுவார்கள் ; அஞ்ஞானத்தைக் கைவிடுவார்கள் ; உண்மையை நம்புவார்கள் ; பொய்யை நம்பமாட்டார்கள் !

விவாதங்கள் என்றுல், நான் வெகுண்டு விடுபவ னல்ல ! விவாதம் நிகழ்த்துவது மிக்கச் சந்தோஷம் தரும். ஆனுல் விவாதம் மிக மேலான முறையினதாக இருக்க வேண்டும் !

* * *

தமிழருக்குத் தமிழ்நெறி, தமிழ்முறை, ஒழுக்கம், வீரம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக்கூடியன கலையாக இருத்தல் வேண்டும்.

* * *

வள்ளுவர் வழங்கிய வான்புகழ் குறளும், அகத் துறை நிரம்பிய கலியும், குறுந்தொகையும், குறு நூலும், பொருள் முறைகாட்டிய புறநானூறும், இளங்கோ அருளிய வளங் கெழுமிய சிலப்பதி காரமும் பண்டைத் தமிழ்மக்கள் புதுப்பொருள் கண்டு ஆராய்ந்து உணர்த்தும் மதுகை உடையர் என்பதை விளக்குகின்றன ! இவ்வளவு தனிக்கலைகள் கொண்ட தமிழர், ஏன் பிறகு கலப்புக்கலையை மேற் கொண்டனர் ?

* * *

உபகாரம் செய்வது சுலபம்; உரிமையைத் தருவது கஷ்டம். உபகாரம் செய்வதிலே காட்ட வேண்டிய தியாக உணர்ச்சி குறைவு ! தீரமும் குறைவுதான் ! ஆனுல் உரிமையைத் தருவதற்குத் தியாக உணர்ச்சியும் தீரமும் அதிகமாகத் தேவை !

* * *

சந்தனக் காட்டைக் கடந்து மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்க வருகிறதே தென்றல், அது போன்றது வாலிபம்.

*　　　*　　　*

வாலிபர்கள் உரிமைப் போர்ப் படையின் ஈட்டி முனைகள் ; அவர் தம் உள்ளத்தில் புரட்சிப் புயலிருக்கும் ; வாழ்க்கை எனும் பொய்கையிலே விசாரம் என்னும் நஞ்சு கலக்கப்படாத பருவம் !

*　　　*　　　*

வாலிபர்கள் ஆசிரியராக வேண்டும். உலகத்தைக் கிராமத்தாருக்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும். உடல், உள்ளம் இரண்டிலும் உள்ள நோய் தீர்க்கும் மருந்தளிக்க வேண்டும்.

*　　　*　　　*

பணம் ; படிப்பு இவைகளின் மூலம் ஜாதி பேதத்தின் கொடுமையை ஓரளவுக்குக் குறைக்க முடியுமேயொழிய அடியோடு அழிக்க முடிவதில்லை !

*　　　*　　　*

உற்றார் உறவினர், அண்ணன் தம்பி, பெற்றோர் பெரியவர்கள், எங்கிருந்தோ எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் எதிர்ப்பு கிளம்பும். இவைகளைக் கண்டு அஞ்சாமல் அயராமல் பணிபுரியும் பண்பு வாலிபருக்குத் தேவை !

அறிவுடன் தொடர்பு கொண்ட ஆற்றலும், மக்களிடம் மட்டற்ற அன்பும், அவர்களை வாழச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையும், அவர்கள் அனைவரும் வஞ்சிக்காமல், சுரண்டாமல், அடக்கி ஆளாமல், அடிமைப்படாமல் வாழக்கூடிய விதத்தில் நாட்டின் வளத்தையும் முறையையும் புதுப்பிக்க முடியும் என்ற எண்ணமும் வாலிபர்களுக்குத் தேவை !

* * *

சிற்பியிடம் கற்பாறை தரப்படுகிறது. அவன் வேலைக்கான மூலப்பொருள் — இனி அவனுக்குத் தேவை ; சிறிய உளியும் பெரிய உள்ளமும். சுதந்திர இந்தியாவிலே, அதுபோலவே, வாலிபர்களுக்கு பகுத்தறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் தேவை—புது வாழ்வு பெற—முழு வாழ்வு பெற !

* * *

தோழமைதான் சமத்துவத்தின் கனி. சமதர்ம மணம். இதைக் காணத்தான், ஜாதி தொலைய வேண்டும் என்று பாரதியார் சொன்னார்.

* * *

பேசும் பொருள் பயன்படத் தக்கதாகவும், வீணான வீம்புக்கு வித்திடாத வகையிலும் அமைத்துக்கொள்வது நல்லது. இனித்தே ஆகவேண்டும் என்று முயன்றால், சதங்கையும் ஜாலரும் தேடித் தீர வேண்டிவரும் !

இனிமையுங்கூட, கொள்கையின் உறுதியிலே இருந்து பிறப்பதுதான்!—கொள்கையை விட்டுக் கொடுப்பதால் வராது!

* * *

பேசுபவருக்கு முறை கூறிய வள்ளுவர், கேட்பவருக்கும் முறை கூறி இருக்கிறார்!

* * *

வேடனிடமிருந்து மீட்டு வந்த புள்ளிமானை வேங்கையின் முன்பு துள்ளி விளையாட விடுவதா?

* * *

தேன் இருந்த கரமானாலுங்கூட, தேன் சாப்பிட்டான பிறகு கழுவிவிட வேண்டுமே! இல்லையென்றால், சிற்றெறும்பு கடிக்குமே கரத்தை!

* * *

மனிதருள் இருந்துகொண்டு, சமயம் கிடைக்கும் போதெல்லாம் வெளிவந்து வெறிச்செயல் புரியும் மிருகத்தை அடக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

* * *

தேன் இனிப்பாக இருந்து தீரும். வாதம் தேவையில்லை, அதை விளக்க! சிபாரிசு தேவையில்லை, அதைப் பருக!

* * *

கலமின்றிக் கடலைக் கடப்பது எப்படி அற்புத சக்தி என்று கருதவேண்டுமோ, அது போலவே,

அற்புதப் பிறவி என்ற நிலை இன்று எல்லோரையும் போலவே பிறந்து, எல்லோருக்கும் மேம்பட்டவராக மகாத்மாவாக, மாநிலத்தவரால் கொண்டாடப் படுவது என்றால், அதுதான் உண்மையிலேயே உயர்வு !

* * *

அழகிய ரோஜாவுக்கு அற்புதமான வர்ணம் தீட்டிப் பார்க்க வேண்டாமல்லவா ? நம்மைச் சொக்க வைக்கும் மயிலின் தோகைக்கு பட்டாடை போர்த்த தேவையில்லை அல்லவா ! முல்லைக்கு மணமும், தேனுக்கு இனிப்பும், நாம் கூட்டத் தேவையில்லை அல்லவா ?

* * *

ஒரு தலைமுறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான் ; மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி, நல்லாட்சி அமைப்பார் ! பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி; மக்களுக்கு நல்வழி காட்டுவார் ! உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்பு களையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது !

* * *

நமக்கு இன்னலும், இடையூறும் இருக்கத்தான் செய்யும் ; ஆனால், நமது உழைப்பு ஒரு நாளும் வீணா காது !

* * *

யுகம் யுகமாக இருந்து வருவதாகக் கூறப்படும் ஏற்பாடுகளை நாம், திருத்தி அமைக்க விரும்புகிறோம். மமதை மலைக்கு வேட்டுவைக்கிறோம். நம்மீது சிறு சிறு துண்டுகள் சிதறிவிழுந்து, மண்டையைப் பிளக்கின்றன என்றால், நாம் வைத்த வேட்டு மலையைப் பிளந்து வருகிறது என்று பொருள்! மலையைப் பிளக்கும் காரியத்தில் இறங்கிவிட்டு, மலர் தலைமீது விழும் என்று எதிர்பார்க்க முடியாதல்லவா ?

* * *

கடுவிஷம் கொடுத்துக் கொல்லப்பட்டோர், காரிருட் சிறையில் ஆயுட்கால முழுதும் தள்ளப் பட்டோர், கல்லால் அடித்துத் துரத்தப்பட்டோர், சிலுவையில் அறையப்பட்டோர், சிறுத்தைக்கு இரையாக்கப்பட்டோர், கழுத்து நெறிக்கப்பட்டோர், கனலில் தள்ளப்பட்டோர், கண்டதுண்டமாக்கப் பட்டோர், நாட்டு மக்களாலேயே துரத்தி அடிக்கப் பட்டோர், நாதியற்றுப் போனோர், என்று இவ்வித மாகத்தான் இருக்கும் சமூகப் புரட்சிப் பணியிலே ஈடுபட்டவர்களுடைய, வாழ்க்கை வரலாறுகள்! நாம் அந்த இனம்! அவர்களெல்லாம் இன்று அறிஞர் உலகின் அணிமணிகளாயினர். நம்மையும் பின்சந்ததி மறவாது.

தமிழ்மக்கள் இந்தி கற்றுக் கொண்டாலும், கற்றவர்களில் நூற்றுக்கு எத்தனை பேருக்கு வட நாட்டில் உத்தியோகம் கிடைக்கும்?

* * *

தமிழ் நாட்டில் இந்தி கட்டாய பாடமாக இருக்க வேண்டுமென்று கருதுபவர்கள் தங்களுடைய தவறை உணரும்படி செய்வது இன்றி யமையாத தாகும்!

* * *

ஆங்கிலத்தையே பொது மொழியாக வைத்துப் பேசிவரும் இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து ஆகிய மூன்று தீவுகளிலுமுள்ள நாலேகாற் கோடி மக்களுள்ளும் பிளவுகள், இல்லாமலா இருக்கிறது!

* * *

தாய் மொழியாகிய தமிழைப் படியாதவர்கள் நூற்றுக்கு தொண்ணூறு பேருக்கு மேல் காணப் படும் இந்த இரங்கத்தக்க நிலைமையில் இந்தியைக் கட்டாய பாடமாக்குவோம் என்று கங்கணம் கட்டி நிற்கும் தமிழ் மக்கள் சிலரின் ஒரு செயலை நோக்கு மிடத்து, அது, தாய் தஞ்சையில் தன்கைப் பிச்சை எடுக்கத், தனயன் குடந்தையில் கோவீகை புரிந்தது போலு மன்றோ இருக்கிறது! என்னே இவர்களது அறிவுடமை!

* * *

இந்தி மொழியைத் தமிழ் நாட்டில் கட்டாய பாட மாக்கினால் தமிழ்மொழி தன் சிறப்பை இழந்துவிடு

மென்பதையும், தமிழ் மக்கள் தம் தாய் மொழியாகிய தமிழை மறந்து விடுவார்கள் என்பதையும் நம் தமிழ்ச் சகோதரர்கள் நன்குணர்ந்து தமிழ் மொழிக்கும் ஆக்கந் தேடிடுவார்களாக !

* * *

தாய் மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றென் பதை உணராது, தான் தோன்றித் தம்பிரான்களாய்த் தடுமாறித் திரியும் தமிழ் மக்கள் சிலரைப் பார்த்து வருந்துவதைவிட வேறு என்ன செய்ய இயலும் ?

* * *

காளைகள் பலர்—பலப் பலர் உள்ளனர். கட்டாய இந்தியை எதிர்த்துக் கடுஞ்சிறை சென்று, கல் உடைத்தவர்கள், செக்கும் இழுத்தவர்கள், சமைய லறையிலிருந்து நேரே சிறை நோக்கிச் சென்ற சீலமிகு செந்தமிழ்த் தாய்மார்கள் உள்ளனர்! சிறையிலே, தாயுடன் இருந்து, குழந்தைப் பருவத் திலேயே சிறைக் கஞ்சாராகி வளர்ந்த குழந்தைகள் சிறுவர் சிறுமியராக உள்ளனர் !

* * *

தமிழர் அறப்போர் புரிய, என்றுமே தயங்கின தில்லை — சேரன் செங்குட்டுவன் காலத்திலிருந்தே தமிழர் தயங்கினதில்லை, தமது மொழிக்காகப் போரிட !

* * *

இது விடுதலைப் போர்க் காலம் ; மொழிப் பிரச் னைக்காக மோதிக் கொள்ள இதுவல்ல நேரம் !

இது அன்னிய ஆட்சியின் பிடியிலிருந்து நாட்டை மீட்க வேண்டிய மகத்தான போர் புரியும் காலம் ; மற்ற விஷயங்களைக் கவனிக்க இதுவல்ல நேரம் ! என்று கூறினர் ! எனவே, அவர்கள் மொழிப் போர் நடைபெற்ற போது ஆடவரும் பெண்டிரும், குழந்தையும் கிழவரும், சிறை சென்ற போது, தாளமுத்துவும் நடராசனும் இறந்தபோது, கண்ணீர் பெருக்கெடுத்தது. என்றாலும், துடைத்துக் கொண்டு துரைமார்களை எதிர்க்கும் தூய போரில் ஈடுபட்டு, தாய் மொழிப் போரில் ஈடுபடாமலிருந்து விட்டனர் !— அது அன்று !

* * *

இந்தி கட்டாய பாடமாக இருப்பதை விட இஷ்ட பாடமாக இருப்பதே உண்மையில் பலன் தரக் கூடிய முறை. சர்க்கார், தமிழரின் வெறுப்புக்கு ஆளாகாதிருக்க வேண்டுமானால், இம் முறையைக் கடைப் பிடிப்பதே சாலச் சிறந்தது. இதனால் நாம் இந்தியை வேண்டா மென்று சொல்லுவதாக யாரும் கருதி விடக் கூடாது. இந்தி மட்டு மல்ல, வேறு எத்தனை பாஷைகளை வேண்டுமானாலும் மக்கள் தெரிந்து கொள்ளுவது நல்லது என்பதே நமது அபிப் பிராயம் !

* * *

ஒரு இலட்சியத்தைப் பெறுவதும் அதனை ஈடேற்ற எத்தகைய தியாகமும் செய்யத் தயாராகி

விடுவது என்ற உள்ள உரம் பெறுவதென்பதும் சாமான்யமான காரியமல்ல !

* * *

தமிழர்கள் எந்த அளவுக்கு உரம் படைத்தவர் களோ, அந்த அளவுக்குப் பொறுமையும் படைத் தவர்கள் !

* * *

நமது தாய் மொழியாகும் தமிழ், உலகின் உயர் தனிச் செம்மொழி. இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது தாய் மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்துக்குள் அது உலகப் பொது மொழி ஆகியிருக்கும்.

* * *

எண்ணிக்கை அளவைக் கொண்டுதான் விஷ யங்கள் கணிக்கப்பட வேண்டும் என்றால், நாம் நமது தேசிய, பறவையாக மயிலைத் தேர்ந்தெடுத்திருக்கக் கூடாது. காகத்தைத் தான் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்.

* * *

சமதர்மம் என்றால் சாவடியிலே தூங்கு பவனிடம் பொருளை வாரிக் கொடுப்பதல்ல.

* * *

சிங்காரச் சீமான்கள் தலைவர்களாகி விட சம தர்மம் மக்களை மயக்கும் தாலாட்டு ! நீலாம்பரி

இராகம் ! ஆனால் உண்மைச் சமதர்மவாதிகள் நீலாம்பரியை நிலையற்றதாக்கி விடுவார்கள்.

* * *

மக்களைப் பாழ்படுத்தச் சமதர்மவாதி என்று முக மூடியணிந்து கொண்டு திரிவதை விட கலை கலையென்று கூறிக் காலங்கழித்துக் கொண்டிருப்பதால் சமுதாயத்திற்கு கேடு ஒன்றும் அதிகமாகப் பெருக சந்தர்ப்பமிராது.

* * *

எந்தக் குலம் செருக்குடன் வாழுகிறதோ அதனிடம் பயபக்தியுடன் பாடுபடும் கூட்டம் அடங்கி நடக்கிறது.

* * *

சேற்றிலே தான் தவளை இருக்கும். தவளைக்கும் சேறு தான் கிடைக்கும்.

* * *

சுகத்தைத் தியாகம் செய்ததினால் அன்றோ சித்தார்த்தர் புத்தரானார்.

* * *

சொந்த வாழ்க்கையிலே அக்கரை காட்டுவது ஒரு சபலம். அதனை நீக்காதவர்களால் பொது வாழ்க்கை என்னும் போர்க்களத்திலே உலவ முடியாது.

* * *

பளபளப்பு வைரத்திலும் உண்டு, கத்தியிலும் உண்டு. ஆனால் விளைவு இரண்டுக்கும் ஒன்றாகுமா ?

எரிமலை நெருப்பைக்கககும். சுற்று வட்டாரத்தையே அழித்து விடும். ஆனால் அதற்குப் பயந்து அதனருகே வாழாமலா இருக்கிறார்கள்? கவிழ்ந்தால் உயிர் போகும் என்பதைத் தெரிந்து கொள்ளாமலா கடலிலே பிரயாணம் செய்கிறார்கள்? பூகம்பங்கள் எவ்வளவோ ஏற்பட்ட பிறகு தானே பூமியிலே நாம் வாசம் செய்கிறோம். பொது வாழ்விலே எரிமலை, அலைகடல், பூகம்பம், தீ எல்லாம் உண்டு. அவைகளிலே வெந்தும் சாம்பலாக சித்தம் வேண்டும்.

* * *

சாதாரண மக்களின் துணைகொண்டே கட்சியை நன்றாக வளர்க்க முடியும் என்பதை வாலிபர்கள் உணர வேண்டும். "அன்னக் காவடிகள்" தரும் ஆதரவு பணக்காரர்கள் தரும் 'செக்கை'விட—ஜமீன்தார்கள் தரும் பணமுடிப்புகளைவிட விலையுயர்ந்தவை வலுவுடையவை என்பதை வாலிபர்கள் உணர வேண்டும்.

* * *

"ஒரு காலத்தில் நீ உன்னத நிலையில் இருந்தாய். இந்நாட்டு ஆட்சி உன்னுடையதாய் இருந்தது. ஆனல இன்று! நீ ஆண்டியாகக் கிடக்கிறாய், வீரனாய்—விறல் வேந்தனாய் இருந்த நீ, கோழையாய் பூனையைக் கண்டஞ்சும் பேதையாகக் கிடக்கிறாய். சிம்மாசனத்தில் சிறப்போடிருந்த நீ, இன்று செங்கை

ஏந்திச் சேவடி காத்து நிற்கிருயே ! இப்படி நீ ஆன தன் அடிப்படையை உணரவில்லையே !"

*   *   *

சமூக சீர்திருத்தப் பணியில் பல விதமான தடைகள் ஏற்படும். நீக்கக்கூடியது—ஒதுக்கக்கூடியது—உடனடியாக ஒழிக்கக்கூடியது என்ற முறையில் தடைகள் ஏற்படும். அவற்றிற்கேற்பக் காலப்போக்கை அனுசரித்துக் காரியங்களை நடத்திச் சென்று வெற்றிகாண வேண்டும். தடைகளைக் கண்டு தயங்கிஞல் எடுத்துக்கொண்ட காரியத்தை எந்தக்காலத்திலுமே நிறைவேற்ற முடியாது. தடைகளின் தன்மையை அறிந்து அதற்கேற்பப் பணியாற்றிஞல் மட்டுமே வெற்றி காண முடியும்.

*   *   *

சமுதாயத்திலுள்ள சாதித்தொல்லைகள், சஞதனக் கோட்பாடுகள், வைதீகக் கொடுமைகள், மதவேறுபாடுகள், இவற்ருல் ஏற்படும் பிளவு—பகைமை—ஒற்றுமைக் குறைவு ஆகியவைகளைக் களைந்தெறிவதென்பது சுலபமான காரியமன்று. பன்னெடுங் காலமாக மக்களிடையே பரப்பப்பட்டு வந்த கொடுமைகள் இவை. இக் கொடுமைகளைப் போக்குவதையே நாம் குறிக்கோளாகக் கொண்டுள்ளோம்.

*   *   *

மேல் நாட்டவர் புறப் பொருள்களை நன்கு ஆராய்ந்து அவற்றின் உண்மைத் தன்மைகளைக்

கண்டு மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படத் தக்கவாறு பலப் பலவாய் இயற்றித் தமக்கும் நமக்கும் பெரும் நலன் விளைவித்துள்ளனர், நாம் ?

* * *

காலச் சுமை வீழ்ந்து வீழ்ந்து சாய்ந்துபோன துலாக் கோலில், தேய்ந்துபோன படிக்கற்களைப் போட்டு, நிறை பார்ப்பது நீதியாகுமா ?

* * *

கடமை, தவம், தொழில், வாழ்க்கைச் சிக்கல் முதலிய பல கொள்ள வேண்டியபோது, இரக்கம் காட்ட முடிவதில்லை, முடியாது, கூடாது.

* * *

பாழ்பட்ட மனம் பாலைவனத்துக்குச் சமமாகும். பாலைவனத்திலே, பயிரேது, மலர் ஏது ! பாழ்பட்ட மனத்திலே சிந்தனைக்கு இடம் ஏது. உரிமை உணர்ச்சி ஏது ! எழ முடியாது.

* * *

சில காலத்துக்கு முன்னர், தமிழ் நாட்டிலுள்ள பலருக்குத் திருமணம் என்றாலே அது என்ன என்பது புரியாததாக இருந்தது. "விவாஹம்" "கல்யாணம்" "கன்னிகாதானம்" என்று சொன்னால் மட்டுமே எளிதாகப் புரிந்து கொள்வர். தாய் மொழியாகிய தமிழ் மொழியிற் கூறினால் ஒன்றைப் புரிந்து கொள்ள முடியாத தமிழ் மக்கள் பலர். சமஸ்கிருதத்தில் கூறினால் அதனை மிக எளிதாகப் புரிந்து கொள்ளும்

அளவுக்குத் தங்கள் பிறப்புரிமைகளை இழந்திருந்தனர். இழக்கும்படி செய்யப்பட்டிருந்தனர். நமது இயக்கம் தோன்றி, இத்துறைகளில் பணியாற்றத் தொடங்கி, "விவாஹம்" என்பது நமக்கும் நம் மொழிக்கும் புறம்பான சமஸ்கிருதச் சொல் என்றும், தமிழுக்குரிய சொல் அல்லவென்றும் கூறி, திருமணம் என்ற சொல்லே தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் உரிய சொல் என்றும் கூறிவந்ததன் பயனாக, நம்மவர், "விவாஹம்" என்று கூறுவதை விட்டுத், திருமணம் என்று கூறத் தொடங்கினர்.

* * *

ஆறு இருந்தால் மாத்திரம் போதாது—அதிலிருந்து வெள்ளம் புரண்டு ஊரை அழித்துவிடாமல் இருக்க கரை வேண்டும்! நல்ல காளையை ஓட்ட சிறுசவுக்கு இருந்தால் மாத்திரம் போதாது—அதை கிழக்கேயும், மேற்கேயும் திருப்ப மூக்கணாங்கயிறும் வேண்டும்! வீட்டிற்கு வாயிற்படி இருந்தால் மாத்திரம் போதாது, வாயிற்படிக்கு கதவு வேணடும். கதவுக்குத் தாழ்ப்பாளும் வேண்டும்! அதுபோலவே ஜனநாயக காலத்தில்–குடியரசு வந்தபிறகு–நாட்டில் நல்லாட்சி நடக்க வேண்டுமானால் ஆளும் கட்சி என்று இருந்தால் மாத்திரம் போதாது. மாற்றுக் கட்சியும் இருக்க வேண்டும். மாற்றுக் கட்சி இல்லாத ஜனநாயக சர்க்கார், பிரேக் இல்லாத கார், கரை இல்லாத ஆறு, மூக்கணாங் கயிறு இல்லாத மாடு! ஆகவே ஆளும் கட்சிக்கு அது அடக்குவாரற்று அக்கிரமம் செய்யும்

கட்சியாக மாறுமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள ஒரு மாற்றுக் கட்சி தேவை.

* * *

இந்தக் காளைக்கு நான்தான் புல்போட்டேன், வைக்கோல் தந்தேன், இதன் முகத்தைத் தடவிக் கொடுத்தேன், இதன் கொம்பை என் கையாலேயே சீவினேன் நானே அதற்கு வர்ணமும் தந்தேன் என்று சொல்லப்பட்ட காளை அவனையே முட்டவந்தால் அதன் கொம்பு அவனைக்குத்தாமலாவிடும்? அல்லது கூரிய கொம்பு நான் சீவிய கொம்பு என்னை அது குத்தாது என்று எந்த புத்திசாலியாவது நம்புவாஞ?

* * *

எப்படிச் செல்வமாக வளர்ந்த காளை, சொந்த மாட்டில் முளைத்த கொம்பு என்று நம்பக் கூடாதோ அப்படித்தான் நாடாள வந்தவர்கள் நயவஞ்சகர்கள் ஆகிவிட்ட நேரத்தில் அவர்கள் நம்மக் கட்சிக் காரர்கள், நல்லது செய்வார்கள் என்று நம்பக் கூடாது.

* * *

மக்களாட்சி எனும் மாண்புள்ள கொள்கையை நடைமுறைத் திட்டமாக்கும் போது, நயவஞ்சகம் கொண்டவர்கள் பொது மக்களை எளிதில் தந்திரமாக ஏமாற்றிவிட முடிகிறது. ஏமாற்றுவதுடன் பொது மக்களை, தலையாட்டிகளாக்கிவிடவும் முடிகிறது.

'இது எங்கள் நாடு' நாங்கள் பிறந்த பொன்னுடு நாட்டாட்சியை நாங்கள் மீண்டும் பெற, நல்லாட்சி அமைக்க நலம் பல கொண்டு சேர்க்க நாங்கள் நினைப்பது நடவாதா? கூடாதா? எங்கள் நாட்டை ஏமாந்த நேரத்தில் எடுத்துக் கொண்டு, எந்த வகையிலும் பாத்யமில்லா சொத்துக்குச் சொந்தம் பாராட்டும் பாதகத்தை பார்த்துப் பார்த்து நாங்கள் பரமானந்தம் கொள்ள வேண்டுமா? படித்தவர்... பாமரர் அனைவருந்தான் பாராளும் பொறுப்பைப் பிறரிடம் கொடுத்துவிட்டு, அவர்களின் பாதங்களைப் பலகாலமாக வருடிக்கொண்டு கிடக்கிறீர்களே, மான உணர்ச்சி உங்களுக்கு இல்லையா? மங்கியா போய் விட்டது அந்தப் பண்பு? என்று விடுதலை பெற்ற நாடுகள், நாங்கள் வெட்கத்தால் தரை நோக்கும் படியாக, கேலியும் கிண்டலும் கலந்து பேசுகின்றனவே, பாராளுவோரே! இது உங்கள் செவி புகவில்லையா?

* * *

எங்கள் மக்கள் வறுமையால் வதைகிருர்கள்; நீங்கள் வாழ்கிறீர்கள். நாங்கள் உழைக்கிறோம்; நீங்கள் உறுஞ்சுகிறீர்கள். நாங்கள் பாடுபடுகிறோம்; நீங்கள் பலன் அனுபவிக்கிறீர்கள். நாங்கள் எலும்புருவாகினேம். நீங்கள் மாமிச மலை எனக் கொழுக்கிறீர்கள். எவ்வளவு காலத்திற்கு நாங்கள் ஏமாளிகளாக இருப்பது? நீங்கள் ஏமாற்றிப் பிழைப்பது? ஏற்குமா இது? நாகரீகத்தில் நனி சிறந்ததாகச்

சாற்றும் நாடாளவந்தவர்களே, நவிலுங்கள்? இருக்கலாமா? இந்த வேற்றுமை? சொந்த நாட்டிலே பிறரின் அடிமையாக, எடுபிடி ஏவலாளிகளாக எவ்வளவு காலத்துக்குத்தான் காலங் கழிப்பது? விழித்துக் கொண்டோம் நாங்கள், விடுதலை வேண்டுகிறோம், அதற்கு இதோ எங்கள், ஆவியை அர்ப்பணிக்கிறோம், என்று சூளுரைத்து விட்டோம். எப்படியும் சுகம் பெறுவோம். முடிவில்.

*　　*　　*

மக்கள் ஜனநாயக காலத்தில் சர்க்காரைக் கவனிக்கவும், கண்டிக்கவும், அவர்களுக்கு உள்ள உரிமையை மறந்துவிடக்கூடாது என்று மக்கள்பால் எங்களுக்கு உள்ள அன்பாலும், ஜனநாயகத்தின்மேல் எங்களுக்கு உள்ள ஆர்வத்தாலும் சொல்லுகிறோமே தவிர மந்திரி பதவியைக் கைப்பற்ற வேண்டும் என்ற நச்சு நினைப்பால் அல்ல!

*　　*　　*

பழங்குடி மக்களான திராவிடர்கள், நாகரிகத்தில் — மொழியில் — அரசியலில் — சமுதாயத் துறையில் — கலையில் வடநாட்டுக்கு முற்றிலும் புறம்பான தனிச் சிறப்போடுகூடிய உச்சநிலையில் இருந்தனர். இவ்வளவு உச்சநிலையில் இருந்து வந்த நாம், ஆரியரின் சேர்க்கைக்குப் பிறகு நடைப்பிணங்களாக மாறினோம்.

*　　*　　*

தமிழ்வேறு — ஆரியம்வேறு. இது வரலாறு கற்பிக்கும் பாடம். ஆரியக் கலையில் அளவுக்கு மீறிய பற்றுக் கொண்டவர்கள்கூடத் தமிழ்க்கலை, ஆரியக் கலைக்கு முற்றிலும் புறம்பான தனிச்சிறப்புடையது என்பதை மறுக்க முடியாதே.

*　　　　*　　　　*

ஒரு மொழியையே பேசும் ஒரு நாட்டவரிடையே பலவகைப்பட்ட பிளவுகளும் சச்சரவுகளும் காணப் படும் நிலைமையில், பல மொழிகளைப்பேசும் பலநாட்ட வரையும் ஒரு பொதுமொழி கற்பதனுல் ஒற்றுமை யாக்கி விடலாமென்று கருதிப் பாடு படுவது "உமிகுற்றிக் கைசலித்த" பான்மையாக முடியு மல்லது யாதும் பயன் விளையுமென்று சொல்ல முடியுமா ?

*　　　　*　　　　*

பள்ளிக் கூடங்களில் சொல்லிக் கொடுக்கப் படும் பாடங்கள் சிலவற்றைத் தமிழிலேயே கற்றுக் கொடுக்கும்படி செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு ஓரளவுக்குத் தமிழ்மொழிக்கு ஆக்கந்தருவதாயினும், அந்த ஏற்பாடு தனித்தமிழ் வளர்ச்சிக்கு அடிகோலு வதாகாது. பலசொற்கள் தமிழில் மொழி பெயர்க்கப் படாமல் அப்படியே உச்சரிக்கப்படுகின்றன. பிற மொழிகளில் இருக்கும் இந்தச் சொல்லையும் தமிழாக்கி, அதாவது ஆங்கிலச் சொல்லையோ, சமஸ்கிருதச் சொல்லையோ, அப்படியே தமிழில் உச்சரிக்காமல் அச் சொற்களை எல்லாம் தமிழில்

ஆக்கிக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக (Cycle) என்ற ஆங்கிலச் சொல்லை "ஈருருளி" என்றும் "பிரத்யட்சம்" என்ற சமஸ்கிருதச் சொல்லைக் 'கண்கூடு' என்னும் தமிழில் சொல்லும் நிலைமையை மாணவர்களுக்கு உண்டாக்க வேண்டும். அப்போதுதான் சர்க்கார் தமிழ்மொழி வளர்ச்சியில் கருத்துக்கொண்டுள்ளனர் என்று கருதப் படுவர். இங்ஙனமின்றித் தமிழ்ப் போர்வைக்குள் ஆங்கிலமும் சமஸ்கிருதமும், இந்தியும் பிறவும் புகுந்து, தமிழ்மொழி வளர்ச்சிக்கு இடையூறு உண்டாக்கும் முறையில் பாடபுத்தகங்கள் அமையு மாஞல், அது தமிழை வளர்ப்பதற்குப் பதிலாக அதனை அழிப்பதாகவே அமையும். எனவே நாம் கூறும் யோசனையை 'யாரோ' சிலர் கூறுகிருர்கள் என்று சர்க்காரும் வாளா இருந்துவிடாமல், ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிரும்.

*　　　*　　　*

பிற மொழிக் கலப்பால் இக்காலத்துத் தமிழ் நடையின் இனிமையும், தூய்மையும், பழமையும் குன்றியிருப்பதை எவரே உணராதார்! மேல் நாட்டவர்கள் தமிழ்மொழியைப் போற்றுவதில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் நம் தமிழ் மக்கள் பலரிடத்துக் காணப்படவில்லையே! குமரிமுனைக்கும் இமயமலைக்கும் இடையேயுள்ள பூப்பரப்பின் பொது மொழியாக ஒரு காலத்தில் இருந்த நம் தமிழ் மொழி திரும்பவும் அந்நிலையை அடையும் நாளும்

உண்டாகுமா ? அதற்காக நமது உடன் பிறப்பாளர் களான தமிழ் இளவீரர்கள் ஆர்வத்தோடு முயற்சி எடுத்துக் கொள்வார்களா ? அல்லது பிற நாட்டவர் களின் வாலைப் பிடித்துத் தொங்குவதுதான் " எங்கள் பிறப்புரிமை " என்று வாளா இருப்பார்களா ?

* * *

இமயம் நீரிடை மூழ்கிக்கிடந்த காலத்திலும் இந்துமகா சமுத்திரம் நிலப்பரப்பாய் இருந்த காலத் திலும் நம் தமிழ் மக்கள் வாழ்வு நடத்தினார்கள் என்று சொல்லப்படுகிறது. தமிழர்களுடையவும், தமிழ் மொழியினுடையவும் தொன்மை சரித்திர காலத் தையுங் கடந்து அதற்கு அப்பாலும், அப்பாலும் ஊடுருவிச்சென்று நீண்டு போவது. இப்போது தமிழ னுக்குத் தாய்மொழிப்பற்று ஒரு சிறிதும் இல்லை யென் பது உலகறிந்ததொன்று. தமிழனுக்குத் தாய்மொழி யிடத்துத் தணியா வேட்கை என்று எழுகிறதோ அன்றே அவன் வாழ்வு மணம் பெறும். முதலில் பல வழிகளிலும் சிதறுண்டு கிடக்கும் நம்தமிழ் இனத்தை ஒருமைப் படுத்துவதற்குக் கருவியாகவுள்ள தமிழைக் கற்று நாம் எல்லாரும் ஒரே இனத்தவர் என்று கண்ட பின்பு, வேண்டுமானால், விரும்புகின்றவர் கள் கட்டாயமின்றி இந்தி மொழியையும் கற்றுக் கொள்ளலாம். தாய்மொழியில் புலமை நிரம்பப் பெற்றபின்னர் வேறு பல மொழிகளைப் பயிலலாம். தடுப்பவர் எவருமில்லை.

* * *

நாமும், நமது தமிழ்மொழியும், விடுதலையும் முன்னேற்றமும் அடையக்கூடிய முறையில் சுய நலங்கருதாது உழைப்பவர்களை ஆதரித்து முன்னணி யில் நிற்கச் செய்வதே தமிழ் மக்களாகிய உங்கள் கடமை. அறிவுடைய அன்பர்களே! எல்லாரும் ஒருங்கு சேர்ந்து மக்கள் கவலை ஒழிய—கால மாறுத லால் வளர்ச்சி குன்றி ஒளி மழுங்கியிருக்கும் தாய் மொழி பழைய உன்னத நிலையை அடைய முயற்சி செய்யுங்கள். ஒரு காலத்தில் உலக மெலாம் வழங்கி வாழ்ந்ததாகக் கருதப்படும் நமது தமிழ் மொழியை இப்போது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சிறைப் படுத்தியிருக்கும் இளமை குன்றாத பழந்தமிழ் மொழியை, அவ்வெல்லைக்குள் இருக்கும் மக்களா வது சரிவரப் பேசவும் எழுதவும் தெரிந்து கொள்ளக் கூடியதாக்கும் கட்டாயத் தமிழ்க் கல்வி முறையை உண்டாக்கும் ஏற்பாடுகளைச் செய்வதிலேயே இன் னும் மிகுதியான ஊக்கமும் உழைப்பும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

* * *

நமது செந்தமிழ் மொழியின் பழமை, இளமை இனிமை முதலிய மேதக்க பெருமைகளையும், அம் மொழியின்கண் மிளிரும் ஒப்புயர்வற்ற விழுமிய கருத் துக்களோடு கூடிய அரும்பெரும் நூல்களையும், 7000, 8000, கல் தொலைவிற்கு அப்பால் உள்ள மேனாட்டு ஆங்கிலேயர் ஜர்மானியர் முதலான மக்கள் பேசியும் கற்றும் வருதலோடு தத்தம் மொழிகளிலும் அந்நூல்

களை மொழி பெயர்த்து விளக்க வுரைகளும் எழுதி, தமிழ் வளர்த்து வருகிற இந்த நாளிலுங்கூட, நமக்கு மிக நெருங்கிய தொடர்புடையவரான 400, 500, கல் தொலைவிலிருக்கும் நம் வட இந்தியர்கள் மட்டும் நம் மொழியையோ அல்லது அதன்கண் உள்ள நூல்களையோ ஒரு சிறிதும் கண்ணெடுத்தும் பாராமல் இருப்பதன் காரணம் அவர்களுக்கு நம் மீதும் நம் மொழியின் கண் உள்ள சிறந்த நூல்களின் மீதும் உள்ள அழுக்காறும், மனக்காழ்ப்பும் பொறு மையுமே யல்லாது வேறு ஏதாவது காரணம் இருக் கிறதாகக் கூற எவருக்கேனும் நாவெழுமா ?

* * *

"தாய் மொழிப் பற்றே தாய் நாட்டுப் பற்றென் பதை நன்குணர்ந்த கவி மன்னராகிய இரவீந்திர நாதர் "கீதாஞ்சலி" என்னும் உலகம் போற்றும் ஒரு நூலை முதல் முதலில் தம் தாய்மொழியாகிய வங்கத் திலன்றோ யாத்தார். உலகமறிந்த பெரியாராகிய பால கங்காதர திலகர் தாம் அருளிச் செய்த "கீதா ரகசியம்" என்னும் நூலைத் தம் தாய் மொழியாகிய மகாராஷ்டிரத்திலன்றோ வெளியிட்டார். இந்திமொழி இந்தியாவிற்குப் பொது மொழியாக வேண்டும் என்று பாடுபட்டவருள் தலை சிறந்தவரான காந்தி யடிகள் தமது "வரலாற்றை" தம் தாய் மொழியாகிய கூர்சரத்திலன்றோ எழுதிக் காட்டினர். மேலே குறிப் பிட்ட மூவரும் ஆங்கிலத்தில் நிரம்பிய புலமை பெற்ற வர்கள் அன்றோ ?

* * *

இந்திரனுக்குக் கண்கள் எத்தனை ? வருணனுக்கும் வாயுவுக்கும் என்ன தொடர்பு ? சூரியனுடைய இரதத்திலே எத்தனை குதிரைகள் உள்ளன ? அதிலே வெள்ளைக் குதிரை உண்டா ? என்ற இவ்விதமான கேள்விகளைத் தலைமுறை தலைமுறையாகக் கேட்டுக் கொண்டிருந்தனரேயன்றி, மழை இயற்கையின் கூறு- ஆனால் அதனை மனிதன் கட்டுக்குள் கொண்டுவர முடியுமா ? மனிதன் அறிவு, இந்த இயற்கைச் சக்தியைத்தன் இஷ்டம்போல் அடக்கியாள உதவுமா ? என்ற கேள்வியைக் கேட்டதில்லை. எப்படித் துணிவு வரும் ? நாம் இயற்கையின் ஒவ்வொரு கோலத்துக்கும் ஒவ்வோர் தேவனைச் சிருஷ்டித்து விட்டோமே ! அந்தத் தேவ லீலைகளைப் பற்றிச் சிந்திக்கவும் பேசவும், கதையும், கவிதையும் எழுதவும், மனம் தந்ததேயொழிய, விஞ்ஞானத்துக்கு இடம் கிடைக்கவில்லை.

* * *

மேனாட்டினரும், துவக்கத்திலே, தேவர்களைத் தான் தொழுதனர். மழைவேண்டுமானாலும் சரி, பெருமழையால் வெள்ளம் புரண்டு ஊர் அழிவதைத் தடுக்கவேண்டுமானாலும் சரி, அவர்களும், அவர்கள் நாட்டுக்கு இந்திரன் போன்ற தேவதைகளைச் சிருஷ்டித்துக்கொண்டு கோவில் கட்டிக் கூத்தாடிதான் வந்தனர். அங்கும் 'கம்பர்' பலர் கனிரசக் கவிதைகளை இயற்றித்தான் தந்தனர். ஆனால் அவர்கள், அந்தக் குழவிப் பருவத்தைக் கடந்து, பகுத்தறிவாளராகி,

இன்று இயற்கையின் சகல பண்புகளையும் தெளிவாக உணரவும், அதனை அடக்கவும் தெரிந்து கொண்டனர். எனவே அங்கு இன்று பெய்யெனப் பெய்யும் மழை! என்பது, பாட்டளவோடு இன்றி பரீட்சித்துப் பார்க்குமளவு பக்குவமும் பெற்று விட்டது. மதவாதிகள்—அவர்களில் நேர்மையானவர்களை மட்டும் குறிப்பிடுகிறோம் — வெட்கப்படும்படி, விஞ்ஞானத்தைத் துணைக்கு அழைத்து, மழையைப் பொழியச்செய்து காட்டினர்—மகான்களல்ல, சாமான்யர்கள்—அருள் பெற்றவர்களல்ல அறிஞர்கள்.

* * *

பாலகனைக் கருவில் கொண்டுலவும் தாய்போல மேகம் வான வீதியிலே சஞ்சரிக்கிறதல்லவா? ஆஸ்திரேலிய நாட்டு விஞ்ஞானிகள் அந்த மேகத்தை, தன் இஷ்டப்படி மழை பெய்வதற்குப் பதில் மக்கள் வேண்டும்போது பொழிய வைக்க வழி கண்டுபிடித்தனர். முட்டையைக் கோழி அடைகாத்து குஞ்சு பொரிக்கிறது—எங்கும் பல நூற்றாண்டுகளாக—புராண மொழிப்படி கூறவேண்டுமானால் யுக யுகமாக! ஆனால் இப்போது முட்டையிலிருந்து 'குஞ்சு' அடைகாத்திடாமல் விஞ்ஞான முறையினாலே, வெளியே கொண்டுவரப்படுகிறது. அது போல மேகம், தானாகக் கனிந்து மழையைப் பொழிவதற்குப் பதிலாக மேகத்தைக் கனியச் செய்து மழையைப் பொழியச் செய்கிறார்கள்—ரமண ரிஷியா? அல்ல! அரவிந்தரா? அல்ல! ஆஸ்தி

ரேலிய விஞ்ஞானிகள். மேகமண்டலத்துக்கு விமான மூலம் சென்று கட்டி கட்டியாகக் கெட்டியான பனித் துண்டுகளை வீச, அந்த பனித்துண்டுகளின் தாக்குதலால், மழையைச் சுமந்துகொண்டு செல்லும் மேகக்கூட்டம், தளர்ந்து மழையைப் பொழிகின்றன.

* * *

நம்நாட்டிலே உள்ள விவசாயிகளுக்கு சொந்தத்தில் ஒரு ஜோடி உழவுமாடும் கிடையாது ! அமெரிக்காவிலே கொஞ்சம் நடுத்தரக் குடியினருக்கு— சொந்த விமானமே உண்டாம் ! அங்கு விவசாயிகள் விமானமேறிச் சென்று முன்பு கூறப்பட்டுள்ள முறைப்படி மேகத்தைத் தாக்கி மழையை, தங்கள் பண்ணையில் பெய்ய வைத்திருக்கிறார்கள். அந்த அளவுக்குச் சென்றிருக்கிறது அங்கே. அதைப் படிக்கின்றோம். அவர்கள்போல, மேகமண்டலம், சந்திர மண்டலம், அளவுக்குக்கூட நமது விஞ்ஞான அறிவு உயர வேண்டியதில்லை. ஏதோ ஒரு குறிப்பிட்ட அளவுக்காவது முன்னேற வேண்டாமா? இதற்கான முயற்சியாவது வேண்டாமா? நாட்டு மக்களின் நிலைமையையும் மக்களை நடத்திச் செல்பவர்களின் நடவடிக்கைகளையும் கவனிக்கும்போது, துக்கமும், வெட்கமும் சேர்ந்து தாக்காதிருக்க முடியாது. சனாதனச் சேற்றிலிருந்தே இன்னமும் கருத்து எழவில்லை, பலருக்கு இன்றும் அந்தச் சேறு சந்தனமாக இருக்கிறது.

* * *

சஞ்சரிக்கும் மேகத்தை அங்கு மனிதன், அறிவு கொண்டு ஆள்கிருன். ஆள்வது மட்டுமல்ல, இந்த நிலையிஞல் ஏற்படக்கூடிய நலன்கள் யாவை? சிக்கல்கள் யாவை, என்பதையும் கணக்கெடுத்துக் காரிய மாற்றுகிருன். மேகத்தை அடக்கிவிட முடியும்! ஆனுல் அதுமுறையா? இதோ சஞ்சரிக்கும் மேகம் நாளைய தினம் வேருேர் பண்ணைக்கு நீரளிக்கக்கூடும். அதனைத் தடுத்து இன்றே, இந்தப் பண்ணைக்கு நீரைப் பெற்றுக் கொள்கிருன், விஞ்ஞானத்தில் இது மேகத்தைத் திருடுவதாகாதா? இந்தக் களவைத் தடுக்க வேண்டாமா? இதற்காக உலக நாடுகள், ஓர் தனிக்கழகம் காணவேண்டிய அவசியம் ஏற்படலாம் என்று யோசனை பேசப்படும் அளவுக்கு, மேனுட்டினர் முன்னேறி விட்டனர். அணுகுண்டு அழிவின் சக்தி என்ற ஆரம்ப விஷயத்தை மட்டுமே நாம் காதால் கேட்டுத் கொண்டிருக்கும் 'பருவத்தில்' இருக்கிரேம். ஆனுல் இதேபோது, நமது கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு அணுசக்தியினுல் உண்டாகக்கூடிய, ஆக்கவேலைகளைக் கவனிக்கத் தொடங்கி விட்டனர். அங்கு ஆளில்லாத விமானம் பறக்கிறது! அதிசயம், அன்ருடப் பொருளாக்கப்பட்டு விட்டது. இந்த உலகச் சூழ்நிலையிலே, இதே நேரத்தில், விடுதலை பெற்ற இந்தியாவின் சர்க்காரை நடத்தும் விவேகிகள் ஓர் அரிய ஆராய்ச்சிக்கு ஆதரவளித்திருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. என்ன ஆராய்ச்சி? திடுக்கிட்டுப் போவீர்கள்!

உலகமோ கைகொட்டிச் சிரிக்கும், நம் எதிரே அல்ல, மறைவில்! மகா பாரதத்திலே, சாந்தி பர்வம் சரியான முறையிலே பதிப்பிக்கப்பட வில்லையாம்—அதற்கான மூலாதார ஏடுகள் கண்டு பிடிக்கப்படவில்லையாம்! இந்த மகத்தான 'பர்வம்' இல்லாத குறையைக்களைய, மகா பண்டிதர்கள், வரலாற்று நிபுணர்கள் ஆராய்ந்து அலுத்து, கடைசியில் ஆதார ஏடுகள், நேபாள மன்னரிடம் இருப்பதாக அறிந்து, அவருக்குச் 'சேதி' அனுப்பி, அவருடைய சம்மதமும் பெற்று அங்கே செல விடச் சர்க்காரும் இசைகிறது. சீமான்களும் இசைந் துள்ளனர். 'விரைவில்' இந்தச் 'சாந்தி பர்வம்' ஆராய்ச்சி வெற்றிகரமாக நடைபெற்று, புத்தகம் பதிப்பிக்கப்படும். இது பத்திரிகைச் செய்தி! மழையை வரவழைக்கின்றான், விஞ்ஞானத்தின் துணைகொண்டு அங்கே! இங்கு மகாபாரதத்தின் மாண்பினை விளக்க, சாந்தி பர்வ ஆராய்ச்சி நடத்தப் படுகிறது!

* * *

இங்கே இனிச் செய்யப்பட வேண்டிய காரியங் கட்கும், வடநாட்டுக்கும், என்ன தொடர்பு இருக்க முடியும்? நாம் நமது நாட்டிலே பிறந்து, வாழ உரிமை இருந்தும், வசதி தேடித்தராத தால் மலாய், இலங்கை, ஜான்சிபார், மோரிஸ் இப்படி, பல கண்காணச் சீமைகளிலே சென்று எலும்புருகப் பாடுபட்டு வரும் கேவல நிலைமைக்கு, பல இலட்சம் உடன் பிறந்தவர்களை, விட்டு வைத்

திருக்கிறோமே, அவர்களை வரவழைத்துவிட வேண்டும் வாழ்வளிக்க. இந்தக் காரியத்தை நாம் செய்வதற்கு, இங்கு நமது நாடு வளமாக்கப்பட வேண்டும். நாமென்ன கங்கையின் தண்ணீரைக் கொண்டா வளமாக்கப் போகிறோம். காவிரி ! வைகை, தென் பெண்ணை உண்டே ! இரு கரைகளிலும் எழில் மிகுந்த வயல்கள் உள்ளனவே, காடும் அதினிலே பயன்தரும் பொருளும் உள்ளனவே ! என்ன இல்லை என்று எந்தப் பொருளுக்கு ஏங்கி, வட நாட்டை நாம் எதிர்பார்க்கப் போகிறோம். காவிரிக் கரையிலே செய்ய வேண்டிய காரியங்கட்கு கங்கைக் கரையின் தொடர்பு இருப்பானேன்.

*　　　*　　　*

நமது வடநாட்டுத் தொடர்போ, அகில இந்திய கட்சியின் தொடர்போ ஏன் ? என்ன பயன் ? வளமற்ற, வகையற்ற, சிந்திக்கும், திறனற்ற காரியமாற்றும் ஆற்றலற்ற, பழைய வரலாறு அற்ற, நாடாக இருப்பின், துணைதேடவும், தொடர்பு தேடவும் வேண்டுவது முறைதான் ! நமக்கு இல்லையே, அந்தத் தாழ்நிலை ! எல்லாம் இருக்கிறது இங்கே எதையும் செய்யும் ஆற்றலுள்ளவர்கள் உள்ளனர் இங்கே— இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே எந்த இனமும் கண்டறியாத இலக்கியங்களைக் கண்டநாடு இது. யவனத்தோடு வாணிபமும், சீனத்தோடு தொடர்பும், பண்டை நாட்களிலேயே ஏற்படுத்திக் கொண்ட

நாடு, நமக்கு என்ன இல்லை என்று இன்று வட நாட்டுத் தொடர்பு வேண்டுமென்று கூறமுடியும்?

* * *

கட்சி வேண்டும்—நாட்டுக்கு இன்று முதல் செய்ய வேண்டிய நற்காரியங்கள் ஏராளமாக உள்ளன. சமுதாய பொருளாதாரத் துறைகளிலே, தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகள் ஆயிரமாயிரம் உள்ளன. சாதியறியாத் தமிழனிடம் சாதி தலை விரித் தாடும் கொடுமைகளை, வறுமையறியாத் தமிழனிடம், வறுமை கோர நாட்டியமாடுவதை நிறுத்த, தூங்கும் இயற்கையைத் தட்டி எழுப்ப, சோம்பிக்கிடக்கும் செல்வத்தைச் சுறுசுறுப்பாக்க, தேம்பித் தவிக்கும் தொழிலாளரை வாழவைக்க, திசை பலசென்று துயருறும் உடன் பிறந்தோரை வரவழைக்க, எண்ண எண்ண, எத்தனையோ வேலைகள் மனக்கண் முன் நின்று, நான் முன்னே நீ முன்னே என்று சண்டை யிடக் காணலாம். விஞ்ஞானத்தை வரவேற்க வேண் டும்—மண்ணில் புண்பட்ட வாழ்வு இருப்பதால் விண்ணை நோக்கிக் கைதூக்கி நிற்கும் தோழர் களுக்கு, வாழ வழி அமைக்க வேண்டும். புதிதாக உருக்கி வார்த்தாக வேண்டும் சமூகத்தை! இந்தக் காரியத்துக்குக் கட்சி தேவை!

* * *

அருள்பெற ஊசிமுனைமேல் நின்று தவம் செய்த வரும், நெருப்புக் குண்டத்திலே நின்றவரும், நீரில்

மூழ்கியவரும், மற்றும் நினைக்கொணாதன செய்தோரும் இருந்தனராமே, இவர்கள் பாபம். செவியிலே சப்தத்தை விழச்செய்து முக்திக்கு வழி கோல முயன்றனர். போகட்டும் என்றுதான் நான் இருக்க எண்ணுவேன். ஆனால் காலம் இருக்கிறது. அது இத்தகையோரின் காதைப் பிடித்திழுத்துத் தலையில் குட்டிக் கேட்கிறது! ஏ மடத்தனத்தில் மண்டியிடும் மக்களே! உலகிலே செய்ய வேண்டிய காரியம் எவ்வளவோ இருக்க உம்மைச் சுற்றிலும் எத்தனையோ இழவுகள் கிடக்க, அவைபற்றிக் கவலை கொள்ளாமல் முக்திதேட முயலுவதும், அதற்காக முணுமுணுப்பதும், முப்புரிகாலில் விழுவதுமாக இருக்கினறீரே இது அறிவுடைமையாகுமா என்று.

* * *

காலத்தின் படையினர் உணர்ச்சியால் உந்தப்பட்டு, கஷ்டப்பட்டு, ஏழையைக் கண்டால், அனலிடு மெழுகுபோல உருகும் தன்மையும், எதிர்ப்பைக் கண்டால், எஃகு போன்ற உறுதி கொள்ளும் தன்மையும் கொண்ட மனம் உடையவராய், பணிபுரிவதில் விருப்பமும் படாடோபத்தில் வெறுப்பும் கொள்ளும் இயல்பினராய் உள்ள வீர வாலிபர்களைத் தானே, காலம் என்ற தளபதி தனது படையிலே வைத்துள்ளான்.

* * *

விஞ்ஞானத்தை மறந்து மெய்ஞ்ஞான மென்று எதை எதையோ கட்டிப் பிடித்துக் கொண்டிருந்த காரணத்தாலே, நம்நாட்டு மக்கள், மழை, இயற்

கையின் இன்ப விளையாட்டுகளிலே ஒன்று கண்டனர். அர்ச்சுனன் மேகங்களை விரட்ட, மேகங்கள் மிரண்டோடுமாம். ஒன்றோடொன்று மோதிக்கொள்ளுமாம், இந்திரனும் அவ்வப் போது, தனது வச்சிராயுதத்தை வீசுவான்! இதன் காரணமாக எழும் பேரொலியே இடி! வச்சிராயுதத்தின் பளபளப்பே மின்னல். இப்படி எல்லாம், கற்பனைசெய்து காலந்தள்ளி வந்தனர். காலாகாலத்திலே மழை பொழியவில்லை என்றால் தேவனுக்கு ஏதோ தீங்கு செய்துவிட்டோம், எனவே தேவதையின் கோபத்தைப் போக்க ஏதாவது மாரிக்குப் பொங்கலிடு வோமா? ஆடுகோழியை அறுத்துப் படையலிடுவோமா? மன்னரை அழிப்போமா? எருமைக்கிடா காவு கொடுப்போமா? கொடும்பாவி இழுப்போமா? கோபாலனைக் கும்பிடுவோமா? என்று இவ்வண்ணம், பல பேசிப் பல பூஜைசெய்வது என்று முறை வைத்துக்கொண்டனரேயன்றி, மழை, மேகத்தின் விளைவு, மேகம் வெப்பத்தின் விளைவு, வெப்பம் காயும் கதிரவனின் செயல், என்ற சாமான்ய விஞ்ஞானத்தையும் பரப்பவில்லை.

* * *

கோழி மனிதனுக்குப் பண்டம் பலகாரமாகிறது. ஆனால் அது பிழைத்து வளருவது குப்பை மேட்டைக் கிளறி, புழு, பூச்சித் தின்றுதான்.

* * *

கோழி வளர்ப்பார்கள், குரங்கை வளர்ப்பார்கள் இன்னமும் ஏதேதோ செய்வார்கள். ஆனால்

உலகத்தில் பிறந்தவர்களை எப்படி வளர்ப்பது என்ற கவலை கிடையாது. மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்கிருன் என்று கூறிவிடுவார்கள்.

* * *

கண்ணுக்கு அழகாக ரோஜா இருக்கிறது. அதன் மீது நமக்குப் பிரியம் இருக்கிறது. அதற்காக வேண்டி, அதனை எடுத்து வைத்துக்கொண்டு அழகு பார்க்கலாம். அதன் வாசனையை அனுபவிக்கலாம். ஆனுல் ஆசை காரணமாக அதைக் கசக்கிப் பிழிந்து விட்டால் எந்த ரோஜா மீது நமக்கு ஆசை பிறந்ததோ, அது ரோஜாவாக இராதே. கூழாகித்தானே போய்விடும்.

* * *

இயற்கை எழில் மிகுந்த இடம், நமது நாடு. ஆனுல் நம் மக்களுக்கு, அந்த அருமையைக் காண நேரமும் கிடையாது. நினைப்பும் அப்பக்கம் செல்லாது. இடிபட்டுக்கொண்டு, இம்சைக்கு ஆளாகி, எங்காவது ஒரு திருவிழாவுக்குப் போகிருர்களே யொழிய அழகிய இயற்கைக் காட்சிகளைக் காணச் செல்லமாட்டார்கள். அர்த்தமற்றதாகவே இருக்கும் அவர்கட்கு அக்காட்சிகள். அவைகளைக் காண்பது, வீண் வேலையென்றே எண்ணுவர்.

* * *

கடிகாரத்தைப் பார்த்துச் சம்பளம் வாங்கும் படித்தவர்களையுந்தான் குறிப்பிடுகிறேன். அவர்களுக்

குந்தான் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுவதில்லை, மிக்க கஷ்டப்பட்டு: 'நாலுநாள் லீவு' பெற்ருலும், குழந்தைக்கு 'மொட்டை' அடிக்கத் திருப்பதிக்கோ, அம்மா "சிரார்த்தத்துக்கோ" காவிரிக்கோ போய் வருவார்களே யொழிய, களிப்புக்காக, இயற்கை தீட்டிக் காட்டும் இனிய ஓவியங்களைக் காணச் செல்வர் இரார். இயற்கை, தன் அழகைவாரி வீசுகிறது—கவனிப்பாரற்றுக் கிடக்கிறது—எழில் மிக்க இளம் விதவை போல!

* * *

கண்ணுக்கும், கருத்துக்கும் களிப்பூட்டும் இக்காட்சிகளைக் காண மக்களுக்கு நேரம் இல்லாமற் போவதன் காரணம், மற்ற நாட்டவரைவிட இங்குள்ள மக்களுக்கு வேலை அதிகம் - அலுப்பு அதிகம் என்பர். உண்மைதான், ஆனால் முழு உண்மை அல்ல. நேரமே இல்லை என்ருல் வேலை மிகுதியாலும் கடினத்தாலும் ஆர்வமும் இல்லை என்ருல் நமது நாட்டிலே ஒவ்வோர் திருவிழா நடைபெற முடியுமா? அவைகளில் பெரும் திரளான மக்கள் கலந்து கொள்ள முடியுமா? திருவிழாக்களுக்கு வரமுடிகிறது- கடமை என்று, கருதுவதால்—கஷ்டம் பல என்ருலும்- போய்த்தான் வரவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது—ஏன்? மதக்காரியம்—மகேசனின் அன்பைப் பெறும் காரியம் – பாபத்தைத் தொலைக்கும் வழி...... புண்யம் தேடும் மார்க்கம்? இதை யறிந்துதான்

ரயில்வே கம்பெனியார்கூட "யாத்திர மார்க்கம்" என்று விளம்பரம் செய்கிறார்கள்.

* * *

இலக்கியம் எப்படி வளரும்? கலைமணம் எங்கிருந்து கமழும்? ஓவியக்கலை எவ்வண்ணம் ஓங்க முடியும்? நல்லிசை எங்கிருந்து பிறக்கும்? மனதுக்கு இயற்கை ஊட்டும் களிப்பு கிடைக்கவில்லையே, பெரும்பான்மையோருக்கும்?

* * *

இயற்கை எழில் நிரம்பிய இடங்கள் எவ்வளவோ இப்படி உள்ளன கவனிப்பாரற்று. மேனாட்டவர் கண்டால் இங்கு எவ்வளவோ "ஓய்விடங்களை" உண்டாக்கிப் பொழுது போக்கும் உல்லாசத்துக்கும் இயற்கை அழகைப் பருகுவதற்கும், பயன் படுத்திக் கொள்வர். இங்கே அவை அவ்வளவும், அழகு இருந்தும், ஆர்வம் தரும் சக்தி இருந்தும், கவனிப்பாரற்று—பருவமும், அழகும் இருந்தும், மணாளன் இல்லாத காரணத்தால் மங்கிய நிலவென உள்ள நம் நாட்டு விதவைகள் போலவே—உள்ளன. மறு மணம் செய்து கொள்ளவும் அவர்கள் தயார்—நீங்கள் தயாரில்லையே!

* * *

இயற்கை பேசாது! சிற்சில சமயத்தில் அடிக்கிறதே கடுங்காற்று அது தன்னை அலட்சியப் படுத்திவிட்டு, வேறு அலுவலைக் கவனிக்கும். நம் மீது கொண்ட கோபத்தின் குறிதான் போலும்!

* * *

கடலோரம் - கவி அங்கு நின்று காண்கிறார் கதிரவன் கிளம்பும் காட்சியை...தெரிவது கதிரவனா? இல்லை! தங்கத் தூற்றல்! கண்டகவி, "புதுக்காட்சி பருக வருக தம்பி!" என்று கூவி அழைக்கிறார். தம்பி கண்டானா அந்தத் தகத்தகாயத்தை! தம்பியைக் காண விடுவார்களா, அந்தக் காட்சியை சே! அவனைத்தான் 'பால பருவ' முதல், தங்கமயில் வாகன சேவைக்கும் வெள்ளிப் பெருச்சாளியில் விநாயகர் வருகிற உற்சவத்துக்கும் அழைத்துச் சென்று பழக்கப்படுத்தி இருக்கிறார்களே! அவன் தானே, இப்போது 'தம்பி' யாகி இருக்கிறான் தமிழ்தரும் கவிவாணருக்கு! தங்கத்தூற்றல் காண வாடா தம்பி! என்று அழைத்தால், அவன் எப்படி வருவான்? அவனுக்கு அப்படியொரு காட்சி உண்டு. அதைக் கண்டதும் பூரிப்பு பொங்கும் என்பது என்ன தெரியும்? தாயின் இடுப்பிலிருந்தபடி கண்ட தங்க மயில் வாகனச் சேவையைத்தான், அவன் சேயைத் தரப்போகும் தன் சேல்விழி மனையாளுடன் இப்போது கண்டு கொண்டிருக்கிறான். எனவே அவன் காண வரான் கடலில் தங்கத்தைத் தெளித்திடும் கதிரவனை.

* * *

கொல்லி, நேரி, பொதியம் எனும் மும்மலைகளைப் படைத்து காவிரி, பொருனை, தென்பெண்ணை, பாலாறு, வைகை முதலிய ஆறுகளை அணிகலன்

களாகக் கொண்டு, விற்கொடி, புலிக்கொடி, மீனக் கொடி ஆகிய மூன்று கொடிகளைத் தாங்கி, மங்கல முரசு, வெற்றிமுரசு, கொடைமுரசு எனும் மூன்று முரசுகளைக் கொட்டி, இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழை வளர்த்து முடியுடை மூவேந்தர்கள், ஆண்ட திராவிடம், இன்றுள்ள நிலைமையும், அன்றிருந்த எழிலையும், ஒப்பிட்டுப்பார்க்க, ஆயிர மாயிரம் இளைஞர்கள் தயாராகிவிட்டனர். பொன்பூத்த நாட்டிலே புண்ணிருக்கக் காரணம் என்ன ? வளப்ப மிகுந்த நாட்டிலே வறுமை குடிபுகுத்த காரணம் என்ன ? வீரம் செறிந்த நாட்டிலே வீணர் உரைக்கு ஏற்றம் எப்படிக் கிடைத்தது ? கடாரம் கொண்டவன், கங்கை கொண்டான், யவனம் சென்றவன், இமயம் வென்றவன் என்றெல்லாம் புகழப்பட்ட நாட்டவர் சிங்களச்சீமையில் சீரழிவு ; மலேயாவில் தொல்லை, என்று கூறத்தக்க, கதிநிலை பெற்ற காரணம் என்ன ? பூமிக்கடியில் இருந்து ஏன் உலோகங்களைத் தோண்டி எடுக்கவில்லை ? கடலுக்குள்ளே குளித்து முத்து எடுத் தவர்கள் கப்பல் தொழிலில் ஈடுபடாதது ஏன் ? புராணக் கதையிலே மற்றவர் மூழ்கி இருந்தபோதே, பொறிகள் அமைக்கத் தெரிந்தவர்கள் வழிவந்தவர்கள் வீட்டிலே பழைய பஞ்சாங்கக்கட்டுகள் எப்படி வந்து சேர்ந்தன ? எலியின் மயிரைக் கொண்டும் ஆடை நெய்தவர் என்ற ஏற்றம் எங்குசென்றது ? ஆமதாபாத் ஆடைமலை எப்படி குவிந்தது ? இரும்புக் கும் கரும்புக்கும் உணவுக்கும், உடைக்கும் ஊராள்

முறைக்கும் உபதேசத்திற்கும், கப்பலுக்கும் விமானத்துக்கும், காகிதத்துக்கும் கருவிகளுக்கும் வடக்கு நோக்கித் தவம்கிடக்கும் நிலைவரக் காரணம் என்ன ? கங்காரு மிருகத்தின், வயிற்றுப்பையிலே அமரும் குட்டிபோல டில்லி சர்க்காரிடம் இருக்கிறோமே. இருவர் யவனம் சென்றவர்க்கு ஏற்றநிலை ! குருடரல்ல ! ஆனால் காணமுடியாது ! என்பதுபோல் இருக்கும் இந்த நிலைக்குக் காரணம் என்ன, என்று அந்த வாலிபர்கள் கேட்கிறார்கள்.

* * *

வாலிபர்கள் கேட்கிறார்கள் நாட்டுக்கு நல்வாழ்வு வேண்டும் என்று ! பாட்டு மொழியிலே பதிலுரைத்துப் பயனில்லை—ஏட்டினைக் காட்டி ஏய்த்திடவும் அவர்கள் இடந்தரார் ! ஏதும் பதில் கூறாவிடில், கேள்வியை மறப்பரோ ? அதுவுமில்லை ! அந்தக் கேள்வி, வளருகிறது ! வாலிபர்களின் பார்வையே கேள்விக் குறியாகி விட்டது ! சென்னை போன்ற பெரிய நகரங்களிலே, நாலடுக்கு பாங்கிகளைப் பார்க்கும்போது, தொழிற்சாலைகளை காணும்போது, மார்க்கட்டுகளில் காணப்படும் சரக்குகளைப் பார்க்கும் போது, தங்களைத் தாங்களே காண உதவும் கண்ணாடியைப் பார்க்கும்போது, ஏறிச்செல்லும் ரயிலைப் பார்க்கும்போது, இறங்கியதும் ஸ்டேஷனிலே உள்ள சிமென்ட் கட்டடங்களைக் காணும்போது, வீட்டிலுள்ள ஆணி முதல் விண்ணில் வட்டமிடும் விமானம் வரையிலே, அவர்கள் பார்க்கும்போது

ஆளவந்தார்கள் அறிகிருர்களோ இல்லையோ, அந்தப் பார்வை ஓர் கேள்விக் குறியாகவே இருக்கிறது. அந்தக் கேள்விக்குறி அலட்சியப் படுத்தி விடக் கூடியதல்ல! கூண்டிலடைப்பட்ட புலியிடம் இருக்கக்கூடும், அதுபோன்ற பார்வை! இதை இந் நாள் மனத்திலிருத்துங்கள்.

* * *

பொங்கற்புதுநாள், தமிழர்திருநாள்! திருந்திய தமிழரின் திருநாள்! தீதெல்லா ம்களைந்தெறிந்து, நன்மை பயிரிட்டு நற்பயனெனும் அறுவடையைக் குவித்து குவித்ததைப் பதுக்கி வைக்காமல், குறித்ததைவிட அதிகம் பெற்றுக் கள்ளத்தனத்தால் காசாக்காமல், வேண்டுவோர்க்கீந்திட வேண்டும் என்ற நன்னெறியுடன் மட்டுமல்ல, உழைப்பவர் வாழ்க்கைக்கு உரியதை அடைவர் எனும் புதுமுறை அமைக்கவேண்டும் என்ற உறுதிகொண்ட தமிழரின் திருநாள்! அறுவடையின் உவகைதரும் உரை, மனைகள் பலவற்றிலே கேட்கப்பட்டு, இன்முக மாதரும், எழில்முகச்சிருரும், களித்திடும் ஆடவரும், அனைவரும் அகமகிழ்ந்திடும், பொங்கற்புதுநாளன்று, இன்பம் பெற்று, இன்பம் இன்று மனதிலே பொங்குதல்போல் என்றும் தங்கி, வாழ்வே திருநாளாகத் திகழ்ந்திட வேண்டும்.

* * *

வாடிய மலரை வீசி எறிகிருேம். வாடை கண்டு விட்ட வடையைத் தின்ன மறுக்கிருேம்.

உடைந்த கண்ணுடிப் பாத்திரத்தைக் குப்பைமேட்டில் வீசுகிறோம். ஆனால் அர்த்தமும் அவசியமும் அற்றுப் போன பழங்காலச் சடங்குகளை மட்டும் இன்னமும் விட்டுவிட மறுக்கிறோம். இருக்கலாமா ?

* * *

பாலாடையில் பருகிய குழந்தை, பிறகு கோப்பை தேடும் குமரன் ஆகிறான். தொட்டிலில் இருந்த பிறகு கட்டிலிலும் ஏறவேண்டி வருகிறது. அவை போலத்தான், பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுஅல்ல — அது கால வகை.

* * *

ஒரு நாட்டின் மானத்தை மீட்கும் போரிலே, மாணவரன்றி வேறு யார் செயலாற்றும் திறம் படைத்தவர்கள் ? அவர்களுக்கின்றி பிறருக்கு ஏது அந்த உரிமை ? அவர்களாலன்றி வேறு யாரால் சாதிக்க முடியும் அந்த மகத்தான வேலையை ?

* * *

தமிழ் நாட்டிலே இந்திப் பட்டமளிப்பு விழா உண்டு ஆண்டு தோறும் ! ஆனால் வடக்கே, டில்லியிலோ, பம்பாயிலோ, அலகாபாத்திலோ தமிழ் பட்டமளிப்பு விழா உண்டா ? கிடையாது.

* * *

சொற்சுவையும் பொருட்சுவையும் இழைந்து கேட்போருக்குக் களிப் பூட்டுவதோடு கருத்தையும் குழைத்தூட்டும் இசை போன்ற பருவம்—சுயநலமும்

சுகபோகப்பித்தும் எருமை எனப் புகுந்து இருதய கமலத்தைத் துவைத்துப் பாழ் செய்யாப் பருவம் மாணவப்பருவம்.

*   *   *

காலம் மாறக் கூடியது. மாறிக்கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாருத சமுதாயம் மறைந்து விடும்.

*   *   *

இந்தியா ஒரு நாடல்ல - ஒரு உபகண்டம்! பல இன மக்கள் ஒரு பரந்த நிலப் பரப்பு. இங்கே, ஒரே ஆட்சி நிலவுதென்பது முடியாது. அதே போல ஒரே மொழி அரசாங்க மொழியாவதும் இயலாது.

*   *   *

பழமையை விரும்பும் முதியவர்களைக் கொண்டு புதுமைச் சித்திரத்தைத் தீட்டமுடியாது, அவர்கள் ஏதோ ஒரு வகை ஓவியத்தைத் தீட்டிய பிறகு அவர் களைக் கோபித்துக் கொள்வது வீண்வேலை. எனவே வாலிபர்கள் தாமாக முன் வந்து புதுமை ஓவியத் தைத் தீட்டியாக வேண்டும்.

*   *   *

மேனாட்டவரின் வாழ்வு கலைஒலியுடன் திகழ் கிறது. இங்கோ? கவலை ஒலியே கேட்கப்படுகிறது. காரணம்? அவர்கள் விஞ்ஞானத்தின் துணையால் உழைப்பின் கடினத்தைக் குறைத்துக் கொண்டு

விட்டனர். இங்கோ மனித உழைப்பே இன்னமும் அதிகமாக இருக்கிறது.

* * *

இலட்சியம் வெற்றி பெற வேண்டுமானால் அந்த இலட்சியத்தின் நியாயத்தை விளக்கி விட்டால் போதாது. அந்த இலட்சியத்திற்குப் பலத்தையும் சேர்த்தாக வேண்டும். ஏனெனில் எவ்வளவு நியாய மான இலட்சியமும் பலத்துடன் கூடி இருந்தா லொழிய வெற்றி பெற முடியாது.

* * *

ஐந்து அல்லது ஆறுரூபாய் சம்பளம் கட்டுவதற் காக, ஏழைப்பையன் ஒருவன் வந்து காசு கேட்டால், என்ன சொல்லுகிறோம்? "ஏண்டா, இப்படிப் பிச்சை எடுத்து அலைகிறாய்? படிச்சவனெல்லாம் என்னத்தைச் செய்து விடுகிறார்கள்? எங்கேயாவது கடையில் போய் வேலை பார் என்றுதானே சொல்லு கிறோம்? கிருத்திகை அபிஷேகத்திற்காக ஓடிவரும் அர்ச்சகரிடம், 'அடிக்கடிதான் அபிஷேகம் செய்கி றேன், ஒருகார்த்திகைக்கு நம்மை விட்டு விடுங்கள்' என்று சொன்னால் கேட்கமாட்டாரா? அதைமட்டும் தவறாமல் செய்து விடுவார்கள். ஏழைப் பையனின் படிப்புக்கு எந்த வசதியையும் செய்யமாட்டார்கள்?

* * *

நாடகம் ஆடிக் கல்லூரி வளர்ச்சிக்குக் காசு சேர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதே என்பது குறித்து வருந்தாமல் இருக்க முடியுமா?

* * *

பொங்கல், உழவர்விழா! தமிழர் திருநாள்! நம்பொணுப் புராணக் கருத்தினை நாட்டினர் மனத்திலே மூட்டிடும் மற்றைய விழாக்கள் போலன்றி, உழைப்பின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் உன்னதமான விழா. களத்திலே காணப்பட்ட பலன் வீட்டிலே, புதுப்பானையிலே, பொங்கி வழியும் நாள் பொங்கல் விழா, செந்நெல்லும், செங்கரும்பும், பச்சைக் காய்கறியும் பசும்பொன் நிறப் பண்டங்களும், வண்ணக் கோலமும், வாடாமலர்களும், மனைதோறும் குவிந்து, மக்கள் மனதிலே மகிழ்ச்சியூட்டும் நன்ணுள். மார்பிலே சந்தனம் மணக்கும் நன்ணுள்! கூந்தலிலே மலர்கள் மொய்க்கும் நாள்! ஆடல் பாடல், கொட்டு முழக்கு, குதூகலம் கூத்தாடும் நாள், பொங்கல் விழா! பாடுபட்ட உழவன் தன் வீட்டுப் பானையில் தான் உழைத்ததில் சிறிதளவு பலனுவது சேர்வதைக் காணும் நாள்.

* * *

இன்பம் பெற உழைத்தாக வேண்டும், முறையும் திறனும் கொண்டு! இயற்கையை எழிலிடமாகவும், பயன்தருமிடமாகவும் ஆக்குவதற்குப் பாடுபட்டே வெற்றி காணமுடிந்தது. இயற்கை, வளம் நிரம்பக் கொண்டது. வாழ்வளிக்கும் வல்லமை கொண்டது. ஆனுல், இயற்கை, மனிதனின் மதியும் திறனும் கலந்த உழைப்பைப் பெற்ருல் மட்டுமே, பரிசளிக்கும் பண்பு கொண்டது! மனிதனுக்குத் தெளிவு இல்லா நிலையிலே இயற்கை அவனை மிரட்டும்—

மிரட்டுகிறது—மிரட்டி இருக்கிறது. பன்னெடுங் காலமாக, பெருவெள்ளம் கடுங்காற்ருக, நெருப்பாக, இயற்கை கோலம் காட்டி மிரட்டுகிறது! சிங்காரச் சிற்றருவியாகிச் சிந்துபாடி இருக்கிறது! சந்தனக் காட்டிலே உலவி நறுமணத்தைச் சேர்த்தெடுத்துக் கொண்டு வந்து சேர்க்கும் தென்றலாகி இன்பம் தந்திருக்கிறது! ஒளியும் ஒலியுமாகி, திருவிளக்காக வும், தீங்குழலிசை யாவும் மக்களே மகிழ்வித்திருக் கிறது. இயற்கை ஓர் இன்பவல்லி—ஆனால் ஓர் ஜாலக்காரி! அவள் மிரட்டுவது கண்டு அவளே அடியோடு வெறுத்து ஒதுக்கிவிட முடியாது. ஒதுக் கிடின் மக்களுக்கு வாழ்வில்லே—அவள் புன்னகை கண்டு பூரித்து, செயலற்று மிருந்துவிட முடியாது— வாழ்க்கை செம்மைப்படாது.

* * *

அறநெறி என்று கூறப்படுவது, மந்திர உச்சாட னச் சொல் அல்ல; ஓமகுண்டத்தருகே உலவுவ தில்லே! கள்ளமில்லா உள்ளத்திலே பூத்துக்காய்த்துப் பழுத்திடும், பயனும் சுவையும் உள்ள கனி அது. வெறும் பொருள் பகிர்ந்து கொள்ளும் முறைமட்டு மல்ல—தொழில் அமைப்புத் திட்டம் மட்டுமல்ல— இவைகளுடன் கூட, மக்கள் எவ்வகையிலே இழி வாலும் கொடுமையாலும் தாக்கப்பட்டாலும், அவர் களே மீட்டிடவும், அத்தகைய தாக்குதல் மக்களுக்கு நேரிடாதபடி முறை வகுத்தலும், ஆகிய எல்லாம் சேர்ந்த பொதுவான, பொறுப்பான வாழ்க்கை

அமைப்புத்திட்டம் அறநெறி. எனவேதான் மனித குலம் குரங்கு நிலையிலிருந்து, கோயில் கட்டிக் கும் பிடும்நிலை அளவுக்கு வளர்ந்தும், எந்த இன்பம், இன்னமும் கிடைக்கவில்லையோ, அந்த இன்பத்தைப் பெறுவதற்கு வள்ளுவர் அறநெறியைக் காட்டியிருக் கிறார், அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். அறத்தால் வருவதே இன்பம்.

* * *

சிறுத்தை, மானின் கண்கள் எவ்வளவு மனோ ஹரமாக இருக்கின்றன என்று எண்ணி, விட்டுவிடு கிறதா ? பஞ்சவர்ணக் கிளியுடன் பூனை கொஞ்சு கிறதா ?

* * *

உயிர்வாழ உபயோகமாகும் தண்ணீர் உயிரையே குடித்து விடுகிறது, குளத்தில் விழுந்து இறக்கையில் வாழ அவசியமாக இருக்கிற நெருப்பே, நமது உடலைச் சாம்பலாக்குகிறது.

* * *

பணம் படைத்தவர் என்பதற்காக, ஒருவரிடம் வளைவதோ குழைவதோ கூடாது. அது ஆண்மையோ அறிவுடைமையோ ஆகாது.

* * *

சமுதாயத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உருக்கி ஊற்றப்பட்டிருக்கும் பழக்க வழக்கம் சமூ கத்தை ஒரு சறுக்கு மரமாக்கி விட்டது. அதில்

தம் இஷ்டப்படி செல்ல விரும்பி சறுக்கி விழுந்து சாய்ந்தவர் கோடி, கோடி.

* * *

வைரம் ஜொலிக்க வேண்டுமானல் சாணை பிடிக்கத்தான் வேண்டும். தங்கம் பிரகாசிக்கவேண்டுமானல் தணலில் காய்ச்சத்தான் வேண்டும். ஆம் அதைப் போல, நல்வாழ்வு பெற வேண்டுமானல் நாம் பகுத்தறிவுப் பாதையில் செல்லத்தான் வேண்டும்.

* * *

பல திறப்பட்ட கருத்துக்கள் உலவி ஒன்ரோடொன்று போரிடும் தன்மை படைத்ததோர் போர்க்களம் தான் பேச்சுமேடை. அந்தக் களத்திலே பரிசும் உண்டு, பகையும் உண்டு.

* * *

பகுத்தறிவு என்னும் பகலவனல் எரிக்கப்பட்டு, சுயநலம்—சுயசுகம் ஆகிய விஷப்பூச்சிகளால் அழிக்கப்பட்ட தூய்மையானதோர் வட்டாரம் வாலிபர் உள்ளம்.

* * *

இது சரியா, இது முறையா என்ற கேள்விகளைக்கூட எதிர்த்தா பேசுகிருய், என்னிடமா கேள்வி, என்ற அதிகார மொழிபேசி, அடக்கப் பார்ப்பது அறிவுடைமையுமல்ல, ஆண்மைத்தனமும் ஆகாது. அது கேவலம் முட்டாள்தனம்.

* * *

வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரர்கள், மட்டித் தனத்தை மட்டந்தட்டும் மாவீரர்கள், சுலோ கங்களால் சுக வாழ்வு நடத்தும் சுய நலமிகளைச் "சுருட்டிக்கொள் உம் சூதை" என்றுரைக்கும் சூரர் கள் மாணவர்கள்.

*　　　*　　　*

சட்டம் ஒரு இருட்டறை. அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு. அந்தப் பிரகாசமான விளக்கை ஏழையால் பெறமுடிவதில்லை.

*　　　*　　　*

வைதீகத்தம்பி, இங்கேவா ! விஞ்ஞானியின் அறிவு கண்டுபிடித்துக் கொடுத்த கிராம போனிலே உன் பழைய பஜனைப் பாட்டை பாட வைத்து மகிழ் கிருயே, மகிழலாமா ? யோசித்துப் பார். கோபப் படாதே ! உண்மை அப்படித்தான் கொஞ்சம் நெஞ்சை உறுத்தும்.

*　　　*　　　*

பக்தர்களில் ஒரு பகுதியினரான ஆதித் திரா விடரை, பரமன் வாழும் இடத்துக்குச் செல்லவொட் டாது தடுப்பது சேயை தாயிடமிருந்து பிரிப்பது போன்ற பாதகமல்லவா ? அறிவு ஆண்மையை பார்த்துக் கேட்கவேண்டிய அவசரமான கேள்வி இது.

*　　　*　　　*

கட்டுப்பாடும் ஒழுங்கும் கட்டாயம் நமக்குத் தேவை. இவை சாதாரணமானவைதான். ஆனல்

இம்மாதிரி சாதாரண விஷயங்களைக் கொண்டுதான் ஒரு சமூகத்தை எடை போடமுடியும்.

*　　　*　　　*

விஞ்ஞானி கண்டு பிடித்துக் கொடுத்த மோட்டாரில் ஏறிக்கொண்டு அஞ்ஞானத்தை வளர்க்கும் பஜனை மடத்திற்குச் செல்லும் நம் போக்கைக் கண்டு, உலகக் கொட்டகையில் எவ்வளவுபேர் கேலி செய்கிறார்களோ? யார் கண்டார்கள்? செய்யாமலா இருப்பார்கள்!

*　　　*　　　*

வேண்டும்போது, வேண்டிய அளவு பொழியச் செய்கிறார்கள் மழையை. ரமண ரிஷிகளா? அல்ல! அரவிந்த முனிவர்களா? அல்ல! ஆஸ்திரேலிய நாட்டு விஞ்ஞானிகள். அவர்கள் அல்லவா உலக உத்தமர்கள்.

*　　　*　　　*

வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரம், வீணரின் கொட்டத்தை அடக்கியாக வேண்டுமென்ற வீரம், அநீதியைக் கண்டால் கொதித்தெழுந்து தாக்கும் பண்பு—இவை வயோதிகரைவிட வாலிபர்களிடையேதான் மிகுந்திருக்கும்.

*　　　*　　　*

முடியுமா? காலம் சரியா? போதுமான பலமிருக்கிறதா? இந்தப் பேச்சு வாலிபர்கட்கு இனிப்பாய் இரா. சும்மா இருக்கலாமா—சொரணையற்றவர்களா

நாம்—புறப்படு — போரிடு — இந்தப் பேச்சுத்தான் வாலிபர் செவி புகும்.

* * *

சாதி முறையை நாம் எதிர்க்கிறோம் என்றால், பொருளாதார பேதநிலையை உண்டாக்கியதும் நிலைத் திருக்கச் செய்வதுமான கொடிய ஏற்பாட்டைத் தகர்க்கிறோம் என்று பொருள். அதாவது சமதர்மத் திற்கான சூழ்நிலையை ஏற்படுத்துகிறோம் என்று அர்த்தம்.

* * *

பென்சிலின் மருந்தின் பெருமையைப் பேச வேண்டிய இக்காலத்தில், சஞ்சீவி பர்வதத்தின் அருமையைப் பேசுவதுதான் கல்வி என்றால் அதற்குப் பள்ளிக்கூடங்கள் ஏன் ?பஜனைக்கூடங்கள் போதுமே !

* * *

நம்ப முடியாத கவிதைகளை எல்லாம் நாதனின் திருவிளையாடல்கள் என்று பெயரிட்டு பள்ளிக்கூடத் தில் உலவவிட்டால், நம்நாட்டில் நற்கருத்தும் வளராது, உண்மை அறிவும் பரவாது.

* * *

நாடாண்ட தமிழ் மக்கள் இன்று நாடோடி களான காரணம்? வளம் மிகுந்த தமிழ் நாட்டிலே இன்று வறுமை மிகுந்தது ஏன் ? வீரம் செழித்த இந் நாட்டிலே இன்று வீணர் மிகுந்தது எப்படி ? இமயத்

திலே வெற்றிக்கொடி நாட்டிய இனம் இன்று ஏங்கிக் கிடப்பது ஏன்?

* * *

எங்கோ ஒரு குக்கிராமத்தில் குறி கூறுவான் ஒரு தந்திரக்காரன். அங்கே கும்பல் கூடும், அதற்கு அருகே அரியதோர் இயற்கைக் காட்சி இருக்கும். ஆனல் அதைக் காணவோ யாரும் வாரார். இப்படிப் பட்ட நாட்டிலே இலக்கியம் வளரவில்லை என்ருல், எப்படி வளரும்?

* * *

ஆடைக்கு ராட்டை! அரிசிக்கு உலக்கை! ஆணுக்குச் சுற்றும் வேலை! பெண்ணுக்குக் குத்தும் வேலை! விஞ்ஞான சகாப்தத்தில் இந்த விபரீத நிகழ்ச்சிகள்! இருக்கலாமா? இவை சரியா? முறையா?

* * *

'செயலாளர்' என்ற இனிய தமிழ் இருக்கக் காரியதரிசி என்கிற வடசொல் ஏன்? உரிய மனைவி கண்ணகி இருக்கக் கணிகைகுல மாதவி ஏன்? செந்தமிழ் மொழியில் தேவையற்ற பிறமொழிச் சொற்கள் நுழைவானேன்?

* * *

கொந்தளிக்கும் கடல், இடியும் மின்னலும் மிகுந்த வானம், உக்கிரமாக உருளும் அலைகள், துடுக்குடன் தாக்கவரும் திமிங்கலங்கள் இவற்றைக்

கடந்து செல்லவேண்டிய கப்பலுக்கோ பழைய பாய்மரம்! கலம் செலுத்துவோரிடையே கலகம்! இதுதான் இன்றைய இந்தியா!

* * *

உபகாரம் செய்வதற்குக் காட்டவேண்டிய தியாக உணர்ச்சி குறைவு. தீரமும் குறைவுதான். ஆனால் உரிமையைத் தருவதற்கோ தியாக உணர்ச்சியும் தீரமும் அதிகமாகத் தேவை. ஆகவேதான் உபகாரம் செய்யச்சம்மதிப்பவர்கள்கூட உரிமையைத் தர சங்கடப்படுகிறார்கள்.

* * *

பேச்சு மேடையில் பெரும்புகழ் பெற விரும்புவோருக்கு அச்சம், தயை, தாட்சண்யத்துக்குக் கட்டுப்பட்டு கருத்தை அடகுவைக்கும் குணமும் இருத்தலாகாது. காட்டுக் குதிரை மீதேறிச் செல்லும் முரட்டுச் சுபாவமும் இருத்தலாகாது.

* * *

அறிவுப் பண்ணைக்குப் பணியாற்ற முன் வருபவர்களை நாடு வரவேற்பதில்லை. நையாண்டி செய்கிறது. மதிப்பளிப்பதில்லை—மாச்சரியத்தை வாரி வீசுகின்றது. துணைபுரிவதில்லை. தொல்லை தருகிறது. எனினும் அந்த ஒரு சிலரால்தான் நாடு முன்னேறுகிறது.

* * *

குழந்தைப் பருவத்தில் மனித சமுதாயம் இருந்த போதுதான் இடிதேவன், மின்னல்மாதா, மழை

மாகாளி, தீக்கடவுள் என்று கடவுட் கதைகள் தேவைப்பட்டன, அறிவுப் பருவத்தை அவனியோர் பெற்றுள்ள இந்தக்காலத்தில் இவை எதற்கு ?

* * *

இன்னது இன்ன பலனுள்ளது என்று அறிந்து ஆராயுமுன்னம், யாரும் எதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆராய்ச்சி அவசியமில்லை என்று இரு சாரர் மட்டுமே கூறுவர். ஒருசாரர் ஆராய்ச்சி செய்யும் ஆற்றலற்றவர். மற்றொருசாரர் ஆராய்ச்சி தம் அகவாழ்வுக்கு ஊறு உண்டாக்கும் என்று பயப் படும் சுயநலமிகள். முன்னவர்கள் வேட்டையாடப் படும் முயல்கூட்டம்; பின்னவர்கள் இரத்தம் குடிக்கும் நரிக்கூட்டம். இருசாரரும் சமுதாயத்தின் விரோதி களே!

* * *

சமுதாயக் கொடுமைகள் ஒருபுறமும், சாதிப் பூசல்கள் ஒருபுறமும், வைதீகம் ஒருபுறமும், வீணர் வாய் வேதாந்தம் வேறோர்புறமும் இருந்து கொண்டிருப்பதால்தான் இந்த நாட்டில் வீரர்கள் கோழைகளாகின்றனர், மக்கள் வாழ்வு வழுக்கு நிலமாகிறது.

* * *

மலர் கொண்டு மாலை தொடுத்தலில் கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் கைத்திறன் முழுவதும் காட்டி காகிதப் பூமாலை

தொடுத்தால் பயன்என்ன? பேச்சுக்கு அழகு தேவை தான். ஆனால் அழகு மட்டுமே இருந்து கருத்து இல்லையானால் என்னபயன்?

* * *

சுதந்திர இந்தியாவில் வாலிபர்களுக்கு வேலை தானா இல்லை? சூதுமதியினரை அடக்க, சொந்த மதியற்றோருக்கு அறிவுபுகட்ட சுரண்டுபவனை அடக்க, சோர்ந்திருப்பவனுக்கு உரம்ஊட்ட, பஞ்சம் வராமல் தடுக்க, படிப்பைப் பரப்பித் தொழிலை வளர்க்க, படுகுழிகளைமூட, பாதைகளைச் செப்பனிட —எண்ணப் போனால் மளமளவென்று பலப்பல தெரியும் மனக்கண்முன், இவைகளைச் செய்யும் மன உறுதிதான் வேண்டும். செய்வதைத் திருந்தச் செய்யும் நல்ல பண்புதான் வேண்டும்.

* * *

ஒரு சிறு மின்சார விளக்கு தரும் அளவுக்கு ஒளிபெற நாம் எத்தனை அகல் விளக்குத்தேட வேண்டும் கணக்குப் போட்டுப் பாருங்கள்—பிறகு கூறுங்கள். விஞ்ஞானம் அதிக உழைப்பு எனும் சிறையிலிருந்து நம்மை மீட்டு விடுதலை வீரனுக்குமா அல்லவா என்பதை!

* * *

உலகெங்கும் கல்வியும் தொழிலும் வளருவதைப் படித்துவிட்டு, இங்கு 100-க்கு 80 பேருக்குமேல் படிப்பற்று இருக்கக் காண்கின்றபோது ஆத்திரம்

வாலிபர்களுக்கு. வரத்தானே செய்யும்! வரத்தானே வேண்டும்?

*　　　*　　　*

புலிப்பாலில் குதிரைக் கொம்பைத் தோய்த்து அந்தத் திலகத்தை நெற்றியில் வைத்துக்கொண்டு வந்தால்தான் வேலை கிடைக்குமென்ற நிலை, இந்த நாட்டில் பலருக்கு இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். எல்லோருக்கும் எளிதில் வேலை கிடைக்க வேண்டும்.

*　　　*　　　*

நமக்கென்ன என்று கூறும் சுயநலமிகளும், நம்மால் ஆகுமா என்று பேசும் தொடை நடுங்கிகளும், ஏன் வீண் வம்பு என்று சொல்லும் கோழைகளுமல்ல நாட்டுக்குத் தேவை. வீரர்கள் தேவை. உறுதி படைத்த உள்ளங்கள் தேவை.

*　　　*　　　*

ரோம்வரை சென்று வாணிபம் நடத்திய இனம், இன்று ஏன் பனியாக்களின் பணியாளாகி விட்டது? பழமுதிர்சோலையாம் தமிழகம் ஏன் இன்று பயம் மிகு படுகுழியாகி விட்டது? யார் இந்த கேவல நிலைமைக்கு—கொடுமைக்கு—மடமைக்குக் காரணம்?

*　　　*　　　*

அஞ்சா நெஞ்சு படைத்த இலட்சியவாதிகள் தான் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக் கூடிய ஒப்பற்ற செல்வங்கள், ஏனெனில், பணம் வெறும் இரும்புப்

பெட்டியில்தான் தூங்கும். ஆனால் இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டிகள் தோறும் நடமாடுவார்கள்,

* * *

மேடைப் பேச்சு என்பது காலட்சேபமுமல்ல, வசன சங்கீதமும் அல்ல. இனிமைச் சுவையை எல்லோருக்கும் அளிக்கும் நா வாணிபமும் அல்ல, கைகட்டி கேட்கும் மக்கள் எதிரே நடத்தும் உபதேசமுமல்ல. உயிர்ப் பிரச்னைகளைப் பற்றிய கருத்துக்களை வெளியிடும் களம், மேடை,

* * *

வியாசர் கூப்பிட்டபோது உலகம் வரவில்லை. நாம் கூப்பிட்டால் ரேடியோ மூலம் உலகமே நம்முன் வந்து நிற்கிறது. எதனால் ஏற்பட்டது இந்தத் திறமை நமககு ? பக்தியாலா ? இல்லை ! பகுத்தறிவால்.

* * *

கல்விச் சாலைகளிலும் நாத்திகமா என்று! கண்ணீர் சிந்துகிறார்களே அவர்களைக் கேட்கிறேன். அணுகுண்டு கண்டு பிடிக்கப்பட்ட காலத்தில் வாழும் மாணவர்களுக்கு அனுமானுக்கு வால் வளர்ந்த கதையைப் பாடமாக வைத்தால் நாத்திகம் வளராமல் ஆத்திகமா வளரும் ?

* * *

உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகளான மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து அறிவுப் பிரச்சாரம்

செய்யவேண்டும். உங்கள் ஓய்வுநேரத்தை நல்வழியில் பயன் படுத்துங்கள்! நாட்டின் உயிர் நரம்புகளான நீங்கள் உங்கள் காரியத்திலே வெற்றிபெற, இடை விடாது பகுத்தறிவுப் பிரசாரம் செய்யவேண்டும். நாட்டிலே எதை நீக்கவேண்டுமோ அதையெல்லாம் நீக்கவேண்டும். முன்னேற்றப் பாதையிலே செல்லும் மாணவர்களாகிய நீங்கள் முதல்முதலாகச் செய்ய வேண்டிய கடமை யாதெனில் மனிதத் தன்மைக்கு மாறான கருத்துக்கள் நாட்டிலே பரவவொட்டாமல் தடுக்கவேண்டும். சமுதாயத்திற்கு உழைக்க வேண்டும் என்ற ஆர்வமுள்ள மாணவர்கள் கிராமாந் தரங்களுக்குச் சென்று அறிவு புகட்டவேண்டும். அஞ்ஞானத்தை அறவே இந் நாட்டைவிட்டு ஓட்ட நீங்கள் எல்லா வழிகளிலும் பாடுபடவேண்டும். நீங்கள் அனைவரும் துணிவுடன் சேர்ந்து கூட்டு முயற்சியில் ஈடுபடவேண்டும்.

* * *

சென்ட்ரல் ஸ்டேஷனையும், எழும்பூர் ஸ்டேஷனை யும் தெரிந்துகொள்வதற்குமுன் அவை எங்கே இருக் கின்றன என்பதை முன்னதாகவே தெரிந்துகொள்ள வேண்டும். எப்படிப்போனால் சென்ட்ரலை அடைய லாம், எப்படிப் போனால் எழும்பூரை அடையலாம் என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

* * *

இந்தக் கால மாணவர்களை எவரும் எளிதில் ஏமாற்றிவிட முடியாது. மாணவர்கள் மனத்தைத்

துலாக்கோல்போல் வைத்து, தாங்கள் கேட்டவற்றை மனமாகிய துலாக்கோலில் இட்டுப் பார்க்கவேண்டும். நேர்மையானவற்றை ஏற்கவேண்டும். மற்றவற்றைத் தள்ளவேண்டும். அதற்கு ஆசிரியர்கள் வழிசெய்ய வேண்டும். பெருந்தன்மையோடு எந்தக் கருத்துக்கும் நீங்கள் மனத்திலே இடம் தரவேண்டும்

* * *

சிலருக்கு எதற்கெடுத்தாலும் சந்தேகம். சிலருக்கு சந்தேகிப்பதே தவருனது என்ற தவருன எண்ணம்.

* * *

புதிய கருத்துக்கள் பல தோன்றவேண்டிய நேரம் இது! வேறு லோகத்தில் இருப்பதைப் பற்றிய சந்தேகங்களை இந்த லோகத்திலே கேட்பது தவருகும்.

* * *

பட்டினத்தடிகள், "இருக்கும் இடந்தேடி உணவு வராவிடில், உணவு இருக்கும் இடந்தேடி ஏகேன்"— என்ருர். இது பட்டினத்தார் பாசுரம். யாராவது துறவிகளைத் தேடிவந்து உணவு கொண்டு வந்தால் தான் துறவிகள் உண்ணவேண்டும். இதுதான் துறவிகளின் பண்பு. இப்படி யிருக்கத் துறவறத்தை மேவும் திருவாடுதுறை மடாதிபதிகளுக்கு நஞ்சையும், புஞ்சையும் ஏன்?

மக்களைக் கெடுப்பது எவையோ, அவையெல்லாம் பாபம். மக்களை வாழவைப்பது எவையோ, அவையெல்லாம் புண்ணியம் என்று நாம் கொள்வோமானால், அது மிகப் பொருத்தமாக இருக்கும். துறவிகளுக்கும், ஜீயர்களுக்கும் அதிகமான பொருள் ஏன்? துறவறத்தை மேவுகின்ற துறவிகளுக்கு, ஏராளமான பொருள்கள் ஏன்?

* * *

சுவையும், பயனும் எதில் இருந்தாலும் எடுத்துக் கொள்ளுங்கள். பயன் மட்டுமிருந்து, சுவையில்லாமல் இருக்கக்கூடாது. சுவை மட்டுமிருந்து, பயனில்லாமல் இருக்கக்கூடாது. இரண்டும் ஒருங்கு சேர்ந்து இருக்க வேண்டும்.

* * *

பணக்கார வீட்டுப் பிள்ளைகளிடம் வைர மோதிரமிருக்கும். அதை வைத்துக்கொண்டு அவர்கள் நட்சத்திரத்தைப் பார்த்து, 'ஏ! மின்னும் நட்சத்திரமே! நீவைரத்தைப் போல எவ்வளவு அழகாய் இருக்கிறாய்!'' என்றெல்லாம் புகழுவார்கள். ஏழைப் பிள்ளையோ வைரத்தைப் பார்த்திருக்க முடியாது. அவனுக்கு வைரத்தைப்போல் மின்னும் என்றால் தெரியாது.

எது பாவம்? எது புண்ணியம்? என்பதை நன்கு ஆராய்ந்து, அறிவுத் தெளிவு கொண்டு, நீங்கள் வாழவேண்டும்.

*     *     *

''பசித்தால் புசி'' என்றுதானே துறவிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது? பசித்தால் புசி என்றல் என்ன? காயேனும், செங்கனியேனும், கந்த மூலமேனும் உதிர் சருகேனும் துறவிகள் உட்கொள்ளலாம் என்றுதானே சொல்லப்பட்டிருக்கிறது? மணிமுடி துறந்து, அரசை உதறித் தள்ளி, நடு நிசியிலே குழந்தையையும், ஆசைக்கினிய மனைவியையும் பிரிந்து, கபில வஸ்துவை விட்டு புத்தர் துறவு கொண்டார் என்றல், அதிலே அர்த்த மிருக்கிறது. சமணர்கள் துறவு கொண்டார்கள் என்றல் அர்த்த மிருக்கிறது. ஆனல் மனித உருவிலே தோன்றி, மக்களை ஏய்த்து வாழ்வதற்காக துறவு பூண்டவர்களை நாம் எப்படி துறவிகளாக ஏற்றுக்கொள்ள முடியும்?

*     *     *

அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

*     *     *

நமது பண்டைப் பெருமைகளை நாம் உணர வேண்டும். நம்முடைய பரம்பரை பெரியது. நமது தமிழினம் மானமே பெரிதென மதித்த இனம். எவ்

வுயிரையும் தன்னுயிர்போல்காத்துவந்தவன் தமிழன். பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன். பிறருக்குப் புறமுதுகு காட்டி ஓடாதவன் தமிழன். இமயத்தில் புலி பொறித்து, கடாரத்தை வென்று ரோம் நகருக் குப் பொன்னுடை விற்றவன் தமிழன்.

* * *

காஞ்சிக் கோயில்களிலே முப்பது லட்சம் ரூபாய் பெறுமான பொன் வைரம், நவரத்தினம் இவற்று லான நகைகள் இருக்கின்றன. இதைப்போன்று நவ ரத்தினங்களாலான சிலுவையைக் காட்டுங்கள்! பொன்னுலான ஏசுநாதரையும் நீங்கள் எவரும் பார்க்க முடியாது. வைரத்தால் தீட்டப் பெற்ற சிலு வையையும் நீங்கள் எங்கும் பார்க்க முடியாது. கிறித்துவர்கள் கையில் வைரம் கிடைத்தால் அது லயோலா கல்லூரியாக இருக்கும்; மிஷின் ஆஸ் பத்தரியாக இருக்கும்; சென்னையிலே பிள்ளை பெறும் ஆஸ்பத்திரிகளில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால், அதுவும் இங்கு வைத்தியர்கள் கைவிட்டால் வேலூரில் இருக்கும் மிஷின் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கிறோம் வேலூரிலே உள்ள அமெரிக்கன் மிஷன் ஆஸ்பத்திரியிலே இங்குக் கைவிடப்பட்ட நோயாளி யின் நோயை நன்கு கவனித்து அவர்களை உடல்நலத் தோடு அனுப்பும் பொழுது அவர்கள் கையில் பைபில் தந்து அனுப்புவதைக் காண்கிறோம். இதைப் போல இங்கு பக்தர்கள் மக்களுக்கு நன்மையும் புரிந்து

பகவத் கீதையைத் தந்தனுப்பட்டுமே பார்ப்போம்! முடியாது.

* * *

மாணவர்களாகிய உங்களிடம் எல்லோராலும் கைவிடப்பட்ட கேஸ் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. மனிதனை மனிதனுக்க, மனிதனிட மிருந்து மிருகத் தன்மையைப் பிரிக்க, மக்களிடத்திலே மனவளத்தை உண்டாக்க நீங்கள் பாடுபட வேண்டும். மூட நம் பிக்கையுள்ள மக்களைத் திருத்த டாக்டர்களால் முடியாது உங்களால் தான் முடியும்.

* * *

சமத்துவம், சமதர்மம்போன்ற இலட்சியங்களைப் பேசுவது சுலபம், சாதிப்பது கடினம். அந்த இலட்சியத்தின் சாயலை—முழுப்பயனைக்கூட அல்ல— சாயலைப் பெறுவதற்கே பல நாடுகளில் புரட்சிகள் நடந்திருக்கின்றன நினைவிருக்கட்டும்.

* * *

மனித சமுதாயத்தின் அல்லலை, விஞ்ஞானம் எந்த அளவு குறைத்திருக்கிறது என்பது பற்றி எண்ணிஞல், மக்கள் வீழ்ந்து வணங்கவும் செய்வார்கள் விஞ்ஞானத்தின் முன்பு. மனித சமுதாயத்தின் வேதனையை விஞ்ஞானம் அந்த அளவுக்குக் குறைத்திருக்கிறது.

ஆழ்வாராதிகள், நாயன்மார்கள் கதைகளைப் புராணீகர்கள் படிக்கட்டும். வீர வாலிபர்களே! நீங்கள் உலக அறிவாளிகள், உத்தம விஞ்ஞானிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படியுங்கள்.

* * *

டாங்கிகளை ஓட்டும் கரம்—பீரங்கிகளைப் பேச வைக்கும் கரம்—ஆராய்ச்சி வாளைப் பிடிக்கும் கரம்—அறிவுச் சுடரை ஏந்தும் கரம் இவை மேனாட்டார் கரங்கள், கூப்பிய கரம்—தலையிலே மோதும் கரம்—வயிற்றைப் பிசையும் கரம்— நம் நாட்டார் கரங்கள்!

* * *

ஆத்ம சக்தியிலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட காந்தியாருக்குக்கூட நோய் கண்டபோது, ஆத்ம சக்தி அல்ல, ஆறு டாக்டர்கள்தான் அவசியமாகத் தேவைப்பட்டனர். ஏன்? அதைத்தான் உங்களைச் சிந்திக்கச் சொல்லுகிறேன்.

* * *

மக்கள் வாழ விழைந்த மாவீரர்களின் வரலாற்றைப் படித்தவர்கள் வாலிபர்கள். எனவேதான் அவர்கள் சிந்தனையிலே, 'நம்மால் ஆவதென்ன பராபரமே' என்ற பஜனைப் போக்கு ஏற்பட முடிவதில்லை.

* * *

ஒருவரை ஒருவர் கண்டதும் முகமலர்ச்சி சிரமமின்றி ஏற்பட வேண்டும். பயன் கருதி அல்ல—

பாசாங்குக்கு அல்ல—அர்த்தமற்று அல்ல—கண்டதும் களிப்பு—நம்மைப்போல ஒருவன் என்ற நினைப்பிலிருந்து களிப்பு மலர வேண்டும். அந்த அக மலர்ச்சிக்குப் பெயர்தான் தோழமை.

* * *

சுவையும் பயனும் உள்ள ஏடுகள் நம் தமிழ் மொழியிலே ஏராளமாக உண்டு. அநேகர் தமிழ் ஏடுகளை மறைத்து வைத்திருந்த காரணத்தால் பலருக்கு தமிழ் ஏடுகளைப் பற்றி நன்கு தெரியாமல் போயிற்று. தமிழுள்ளத்தை அப்படியே எடுத்துக் காட்டும் ஏடுகள் பல தமிழ் மொழியிலே உண்டு.

* * *

உங்களுக்கு தமிழ் வளரவேண்டுமென்ற மனப்பான்மை மட்டும் இருந்தால் போதாது. சுவையும், பயனும் உள்ள ஏடுகளையே நீங்கள் படிக்கவேண்டும். உதாரணமாகத் திருப்புகழிலே சுவை மட்டும் இருக்கிறது. ஆனால் பயன் இல்லை. அதை விட்டு விடுவோம். அற்புதமான கருத்துக்கள், சாரமுள்ள செய்திகள் அஞ்ஞானத்தையும் இருட்டையும், போக்கி, அறிவுதரும் மின்சாரம், மோட்டார், இரயில் இவையெல்லாவற்றையும் பயன் கருதி ஏற்றுக் கொள்கிறோம்.

* * *

தமிழ் என்றால் தமிழ்மக்கள் அனைவரையும் குறிக்கும். தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுகூட

வேண்டுமென்ற உயர்ந்த கருத்தை நன்கு வரவேற்கிறேன்.

* * *

அறிவுத் தெளிவோடு எதைத் தள்ள வேண்டுமோ அதைத் தள்ளவேண்டும். புலவர் மணிகள் என்னதான் திறமையோடு, எதுகைமோனையோடு, உவமை கற்பனை நயத்தோடு இராவணனுக்குப் பத்துத்தலைகள் என்று சொன்னாலும் இந்தக் காலத்து மாணவர்களாகிய நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்களா? தமிழ்ப் புலவர்கள் என்ன சொல்லியும் உங்களை நம்பவைக்கமுடியாது. பகுத்தறிவுப் பிரசாரத்தால் நீங்கள் இப்பொழுது பலம் பெற்றிருக்கிறீர்கள்.

* * *

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வான், மற்றவர்கள் தொழுதுண்டு பின் செல்பவர்கள் என்று நகரத்தில் படிக்கிறோம். படித்தான நமக்கே எண்ணம் அதுபோலிருப்பதில்லை. அவன் பட்டிக்காட்டான் என்றுதான் கேலி செய்கிறோம். செய்யலாமா?

* * *

அறிவுத் துறையிலே ஆற்றல் உள்ளவர்களாக இருந்து அழியாப் புகழ்பெற்ற அருந்தமிழ்ப் புலவர்கள் அளித்த கருத்துக் கருவூலம் சங்கஇலக்கியம். ஆரிய போதை அகலவேண்டுமானால் அந்த இலக்கியத் தேனைப் பருகவேண்டும் தமிழர்கள்.

* * *

ஜாதியினுல் விளையும் கேடுகளை அறியமுடியாத பாமரர்களைவிட, அதனை அறிந்திருந்தும் தமக்குச் சுகவாழ்வு கிடைக்கிறது ஜாதி இருப்பதனுல் என்ற காரணததுக்காக ஜாதிமுறையைத் தங்கள் செல்லப் பிள்ளையாகக் கொள்ளும் படித்தவர்கள்தான் மிக பொல்லாதவர்.

* * *

ரேடியோவும், டெலிபோனும், ஒலிபெருக்கியும், மின்சாரமும் ஞானப்பால் உண்டதால் வந்த வல்லமைகள் அல்ல. அசரீரி அடி எடுத்துக் கொடுத்ததால் உண்டான அற்புதங்களுமல்ல. தன்னலமற்ற அறிவாளிகளின் உழைப்பால் விளைந்த உன்னதப் பொருள்கள் அவை.

* * *

வாழ்வது மாயம் என்று பேசுவது—பிறவாவரம் தாரும் என்று சலிப்புச்சிந்து பாடுவது—ஆகிய போக்கும் முறையும் வாலிபர்கள் விரும்பாதவை. அவர்கள் புரட்சியின் சின்னங்கள். புத்துலகத் தூதுவர்கள்.

* * *

ஒரு பலமான தாக்குதலை நடத்தினுல்—ஒரு தன்னலமற்ற முயற்சியைச் செய்தால்—மக்கள் வாழ்வில் நஞ்சைக்கலக்கும் விதி எனும் அடிமைத் தளையை நம் நாட்களிலேயே வீழ்த்தமுடியும். செய்வோமா ? நீங்கள் தயார்தானு ?

*

திறமை வேறு, தன்மை வேறு. கம்பரின் கவித் திறமை கண்டு நாங்கள் வியக்கிறோம். ஆனால் அந்தத் திறமை ஆரியத்தை ஆதரிக்கும் தன்மையானது கண்டு நாங்கள் திகைக்கிறோம். நாங்கள் கண்டிப்பது கம்பரின் கவித்திறனையல்ல — அதன் தன்மையை—விளைவை.

* * *

கதம்ப மாலையில் மலர் குறைவாகவும், தழை அதிகமாகவும் இருப்பின் அதனை மாதர் கொள்ளார். அதுபோலவே மேடைப்பேச்சில் கருத்து அங்கொன்றும் இங்கொன்றுமாகி கவைக்குதவாதன அதிகமாகவும் இருப்பின் அதனை எவரும் கொள்ளார்.

* * *

ஆயிரம் உண்டிங்கு சாதி என்றார் பாரதியார். அப்படிப்பட்ட தமிழர் சமுதாயத்தை, இனம் எனும் ஓர் உணர்ச்சியால் ஒன்று படுத்தும் காரியம் சிறியதா ? அதைச் செய்து முடிப்பது சாத்தியமா ? அதைச் செய்யாது வேறு எதைச் செய்யினும் பயன்தருமா ?

* * *

பழங்கால முதலை மனப்பான்மை நமக்கு இருக்கக் கூடாது. பழங்கால, முதலை மனப்பான்மை இருந்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்காது. உலகமென்பது ஓர் உருண்டை என்று புராணம் இயற்றியவர்களுக்குத் தெரியாது.

* * *

நம் மனம் ஒரு மியூசியம் போல இருக்கிறது. எது கொள்ளத் தக்கதோ அதை ஏற்றுக் கொள்ளுங்கள், எது தள்ளத்தக்கதோ அதைத் தள்ளி விடுங்கள்.

*                    *                    *

எத்தகைய கருத்துக்கும் நீங்கள் மனத்திலே இடம் தருவதோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. மாணவ மணிகளாகிய உங்களுக்கு ஆராயும் அறிவு வேண்டும். நீங்கள் அனைவரும் புத்துலகச் சிற்பிகளாக வேண்டும். உங்களிடம் தீரமும் திறமும் இருந்தால் மட்டும் போதாது. இத்துடன் அறிவு ஆராய்ச்சிகளும் தேவை. அதை அறிவுத் தெளிவோடு ஆராய்ந்து, இது சரி, இது தவறு என்று முடிவு கட்டும் மனப்பான்மை உங்களுக்கு வேண்டும். இதோடு திட்டவட்டமான கொள்கையும், பெருநோக்கும் உங்களுக்கு இருக்கவேண்டும்.

*                    *                    *

பகுத்தறிவுப் பிரசாரத்தைப் பரவ விட்டால் மாணவர்கள் கெட்டு விடுவார்கள் என்று ஆசிரியர்கள் எண்ணினால், தாங்களே கொஞ்சம் தவறு செய்வதாகத்தான் ஆகும். பகுத்தறிவுப்பிரசாரம் மாணவர்களைக் கெடுப்பதற்குப் பதில் உயர்த்தும் ; அவர்கள் மனப் பண்பை விரிவாக்கும். அவர்களை நற்கருத்துடையவர்களாக்கும். இதை அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாத ஆசிரியர்கள்தான் "மாணவர்கள் கெட்டுவிடுவார்கள்" என்று கூறுவார்கள். எவரும் முற்றும் உணர்ந்தவர்கள் இல்லை. ஆசிரியர்களே

பகுத்தறிவு கொண்டு பல விஷயங்களை ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில்தான் இருக்கிருர்கள்.

* * *

நீரிலே நெருப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிந்த விஞ்ஞானிகள், நீரோட்டத்தை இன்று மனித வாட்டத்தைக் குறைக்கும் சாதனமாக்கியுள்ளனர். வேதத்தின் துணைகொண்டல்ல - மதியின் துணை கொண்டு!

* * *

மாற்ருன் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கும் மணம் உண்டு - ரசிக்கத்தான் செய்வோம். அது போலத்தான் பேசுபரின் கருத்து பயன் தருமாயின் கேட்போரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும் கேட்பவர்கள் ஏற்றுக் கொள்வது உறுதி.

* * *

புரட்சி என்பது வாலிபத்தின் கூறு, பகுத்தறிவாளர் ஆயுதம் பழைமை விருப்பங்கள் - புரட்டர்கள் —எதேச்சாரிகள் ஆகியோருக்கு நஞ்சு. மக்களின் மகத்தான சக்தி அதைப் பொசுக்கிவிட எவராலும் முடியாது.

* * *

திருப்புகழ் பாடாதே என்று சொன்ஞல் திருப்புகழ் பாடுபவர்களுக்குக் கோபம் வருகிறது. பூகோ

ளத்தைப் பற்றிப் பேசக்கூடாது என்றால் நமக்குக் கோபம்வரும். பழையகால ஏற்பாட்டிற்கும், புதியகால ஏற்பாட்டிற்கும் எவ்வளவோ வேறுபாடு. 20 ஆண்டுகளுக்கு முன் A. R. P. இல்லை. போர்ச் சமயத்தில் அதுவும் இக்காலத்தில் A. R. P. மிகவும் தேவைப் படுகிறது. அந்நாளில் இராவணனிடம் A. R. P. இருந்திருந்தால் இராமர் இலங்கையை அழித்திருக்க முடியாது. இராமரிடம்கூட அப்பொழுது A. R. P. இல்லை என்பதை அனைவரும் அறிவர். ஆனால் A. R. P. க்குப் பதிலாக ஹனுமான் இருந்தார். A. R. P. அன்று இருந்ததா ? இல்லையா ? என்ற சந்தேகம் உங்களுக்கு இருந்தால் கம்ப ராமாயணத்தில் உள்ள யுத்த காண்டத்தைப் புரட்டிப் பாருங்கள்.

* * *

மேட்டூர் — மலைமீது ! கோலார் — பாதாளத்தில் ! மலைமேல் இருக்கும் நீரைக்கொண்டு பாதாளத்தில் இருக்கும் சுரங்கத்தைப் பட்டப் பகல் போலாக்கியுள்ள மின்சார விளக்குகள் ! இந்த அற்புதத்தைச் சாதித்துள்ள விஞ்ஞானத்தைவிட நமக்கு உள்ள தோழன் வேறு யார் ?

* *

எல்லாப் புத்தகங்களையும்விட சிறந்த புத்தகம் இந்த பரந்த உலகம்தான் ; உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

* * *

முன்னோர்கள் இவ்வழி சென்றனர், எனவே அடியேனும் அவ்வழியே என்று ஆராயாது சொல்வது விஷய விளக்கமுமல்ல, விவேகமுமல்ல, வாதமுறையும் ஆகாது. அது கேவலம் மூட நம்பிக்கை.

* * *

மாணவர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டு முயற்சியில் ஈடுபட வேண்டும். உங்களுக்கு இடைவிடாத உழைப்புத் தேவை.

* * *

இன்று தேவைப்படுகிற கருத்து அந்த நாளிலே தேவைப்படாமல் இருந்திருக்கலாம். செஞ்சிக் கோட்டையின் உள்ளே பகைவர்கள் யாரும் புக முடியாதபடி அந்தக் காலத்துக்கு ஏற்பக்கோட்டை கட்டப்பட்டது. ஆனால் அந்தக் கோட்டையையே வைத்துக் கொண்டு இந்தக் காலத்திலே யாரும் போர் செய்ய முடியாது. அந்தக் காலத்து நிகழ்ச்சியையும் இந்தக் காலத்து நிகழ்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எதையும் சரியா ? தப்பா ? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். சரியில்லாததைத் தூக்கி எறிய வேண்டும்.

* * *

ஓராயிரம் ஆபத்துக்கள் ஓயாமல் நம்மைநோக்கி வருவதாயினும் சரியே. நம் உள்ளம் உண்மையென்று உணர்ந்ததை உரைக்க அஞ்சுபவன், கோழை. கோழை மட்டுமல்ல நாட்டுத்துரோகி.

\- - -

மேல் நாடுகளிலே மாதர்கள் நகையணியும் வழக்கமில்லை! அவர்களிடம் பணம் சேர்ந்தால் அப் பணம் பாங்கில் இருக்கும். அல்லது நல்ல கம்பெனி களிலே பங்குகளாக இருக்கும். நம் நாட்டிலேதான் பெண்மணிகள் பணத்தை நகைகளாக்கி ஆறு ஜதை, ஏழுஜதை வளையல்கள், வைர அட்டிகைகள், காதில் தோடுகள், அவற்றோடு குண்டலங்கள், சடை பில்லைகள் என்றெல்லாம் அணிந்து கொள்கிறார்கள்.

* * *

பொதுவாக நாட்டு மக்களைத் திருத்துவதற்கு முன் அவர்களுடைய சூழ்நிலையைக் கவனிக்க வேண்டும். அப்படியானாலதான் திருத்தும் பணியில் ஓரளவேனும் வெற்றி பெறக்கூடும்.

* * *

ஒழுக்கம் ஒரு பொது நீதி. ஆனால் அது இடத் துக் கிடம் ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றது. எல்லா மக்களுக்கும் ஒழுக்கம் ஒரே படித்தாயில்லை. பெண் ணுக்கு ஓர் ஒழுக்கம் சொல்கிறோம்; ஆண் அதைக் கடைப்பிடிப்பதில்லை. ஏழைக்கு ஓர் ஒழுக்கம் சொல் கிறோம்; பணக்காரன் அதைக் கடைப்பிடிப்பதில்லை. வேலைக்குச் சரியாக 8 மணிக்கு வரவேண்டிய தொழி லாளி 9 மணிக்கு—அதாவது ஒரு மணி நேரங் கழித்து வந்தால் முதலாளி தொழிலாளியைப் பார்த் துக் கேட்டால், அதற்குத் தொழிலாளி, "இல்லை சார்! நான் 8 மணிக்கே வந்து வேலை செய்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்லுவான். உடனே

முதலாளி, "பொய் பேசினால் போஜனம் கிடைக் காதப்பா ! ஏன் பொய் பேசுகிறாய்"? என்று கேட் பார். இதே சமயத்தில், முதலாளிக்கு ஒரு வியாபாரம் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். வியா பாரி ஒரு பொருளை நாலாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கியிருப்பான். அந்தப் பொருள் விற்பனைக்கு வந்தால், வாங்க வந்தவனிடம் என்ன சொல்லுவான் தெரியுமா ? "நான் இந்தப்பொருளை ஆறாயிரம் ரூபாய் கொடுத்துத்தான் வாங்கினேன். உங்களை உத்தே சித்தே இதை நியாய விலைக்குத் தருகிறேன். நிச்சய மாக நம்புங்கள். இன்னும் கேட்டால் நான் சத்திய மாகச் சொல்லுகிறேன்—நான் இந்தப் பொருளை ஆறாயிரம் கொடுத்துத்தான் வாங்கினேன். உங்களை உத்தேசித்து—அதுவும் உங்களுக்காக வாங்கிய விலைக்கே தருகிறேன். நான் இந்த விலைக்குத் தந் ததை வேறு யாரிடமும் சொல்ல வேண்டாம்." என்று பன்னிப் பன்னிக் கூறுவான். ஆனால் முத லாளி அந்தப் பொருளை வாங்கிய விலையோ ரூபாய் நாலாயிரம். இதில் முதலாளிக்குக் கிடைக்கும் இலா பமோ இரண்டாயிரம் ரூபாய். திறமையோடு பொய் சொல்லி வியாபாரம் செய்வதால் முதலாளிக்குக் கிடைக்கும் இலாபம் அதிகம். ஆனால் தொழிலாளி முதலாளியிடம் பொய் சொன்னால் அவனுக்குக் கிடைப்பது என்ன? வசவு, உதை—வேலையில்லாமை, அதன் காரணமாக பசி, பட்டினி இவை போன்ற எண்ணிறந்த தொல்லைகள். ஒருவன் சொல்லும்

பொய்யுக்கு இலாபம் ; இன்னொருவன் சொல்லும் பொய்யுக்கு நஷ்டம்.

* * *

தமிழருக்குத் தமிழ் நெறி, தமிழ் முறை, ஒழுக்கம், வீரம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக் கூடியன கலையாக இருத்தல் வேண்டுமே யொழிய, வேற்றோர் இனத்தைப் புகழ்வதும், அதற்கு ஆதிக்கமளித்துத் தமிழ் மக்கள் மனதிலே தன்னம்பிக்கையற்றுப் போகும்படி செய்வதும், தமது இனத்தைப் பற்றியே தாழ்வாகக் கருதிக் கொள்ளும்படியான நிலைமை உண்டாக்குவதுமான கதை, காவியம், இலக்கிய மென்பவைகளைக் கொளுத்த வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம்.

* * *

காதலுக்கும் கற்புக்கும் இராம காதையிலிருக்கும் இன்ப நுணுக்கப் பொருள்களைவிட, மிகச் சிறப்புடைத்தான பொருள்கள் நமது அகப் பொருளில் உண்டு. எனவே கம்பராமாயணமழியின் காதலுக்கும் கற்புக்கும் கவிதை இராதே என்று பண்டிதர்கள் கவலை கொள்ளத் தேவையில்லை.

* * *

தமிழர், தனி இனத்தவர், பன்னெடுங்காலம் பண்புடன் வாழ்ந்து, பாரோர் புகழ வாழ்ந்து, கலைச் செல்வங்களைக் கண்டவர். இந்தியா எனும் உப கண்டத்திலே பல இனங்கள், தம் தம் கலைகளுடன்

உள்ளன. தமிழ் இனத்துக்குத் தனிக்கலை ஒன்று உண்டு.

*　　　*　　　*

தமிழரின் தனிச் சிறப்புக்களைக் கெடுத்த நூற்கள் ஒழிக்கப்பட்டு, தமிழன், தனி இனம், தனிப் பண்பு படைத்தவன், தனிக் கலையுடையவன், தனி அரசு கேட்பவன் என்பதை வலியுறுத்திப் பெற வேண்டும். தமிழன் இழந்துவிட்ட தன்மானத்தையும் மீண்டும் பெற இதுவே தக்கவழி.

*　　　*　　　*

அவர்கள் ஞானசம்பந்தர் அளித்த விபூதியினால் எலும்பைப் பெண்ணாக்கியதாகக் கூறட்டும். நான் இன்ன இஞ்செக்ஷன் கொடுத்ததால் எலும்புருக்கி நோய் தீர்ந்து எலும்பு பெண்ணானாள் என்று கூறுவோம். ‘ எங்கள் விரிசடைக் கடவுள் முக்கண் விரித்தார். திரிபுரமெரிந்தது ’ என்று அவர்கள் கூறட்டும். இதைக் கேட்டவுடன் இது நம்மால் முடியாது—ஆனால் ஒரு மூலையில் ஒரு சுவிட்சை அழுத்தினால் ஊரெங்கும் ஒளி வீசச் செய்ய முடியும், என்று நாம் கூறுவோம். ரேடியோ கண்டு பிடித்தவர் அது பற்றி நூல் எழுதி, உள்ளே இன்னின்ன சாமான்கள் இருக்கின்றன—இது என் சொத்தன்று, எல்லோருடைய சொத்து, என்று எழுதி நூல் வெளியிட்டு விடுவார். ஆனால் நம் கிராமத்தில் ஒருவனுக்குத் தேள்கொட்டி விட்டால், சில பச்சிலைகளை எடுத்துவந்து போடுவார்கள். இது என்ன இலை என்று கேட்டால்,

"அதை சொல்லக் கூடாது ; சொன்னால் பலிக்காது" என்பார்கள். அயல்நாட்டு டாக்டர் மருந்து கொடுக்கும்போது, இன்னின்ன மருந்து இன்னின்ன சதவிகிதம் என்று எழுதி புட்டியின் மேலேயே ஒட்டிக் கொடுப்பார். நம்மிடம் லிங்கக்கட்டு இருந்தால் இதைச் செய்யும் விதத்தை மகன் இல்லாதவர்களுக்குச் சொல்லக் கூடாதென்பர். அவர்களோ எல்லாவற்றையும் எல்லோருக்கும் சொல்லிக் கலையைப் பரப்புகின்றனர். ஆகையால் இவற்றையெல்லாம் நீங்கள் நன்கு உணர்ந்து, உண்மையான பொருள்களைக் கிராம மக்களுக்கு உங்கள் கல்லூரி கழகத்தின் வாயிலாக—எடுத்துச் சொல்லவேண்டும்.

* * *

நம் நாட்டில் மேற்படி சூழ்நிலையை மாற்றி அமைக்க வேண்டும். நல்ல ஏடுகளை மொழி பெயர்க்கும் வேலையிலே நீங்கள் ஈடுபட வேண்டும். தேவாரம், திருவாசகம் இவற்றிலே இருக்கும் தமிழ் நாட்டு இயற்கை வளத்தைப்பற்றி யெல்லாம் தொகுத்து நூலாக வெளியிடுங்கள் ; நாங்கள் அதை வேண்டாமென்று சொல்லவில்லை ! நாட்டிலே நடக்கின்ற செய்தியை எழுதட்டும் ; வரவேற்போம். நாட்டிலே நடவாத ஒன்றைப் புனைந்து எழுதுவதைத்தான் நாம் தடுக்கிறோம்.

* * *

கம்பராமாயணம் நடக்காத கதை—நான் புனைந்தது. கற்பனை—நடந்த-நிகழ்ச்சியல்ல - இது உண்மை !

இப்படிப் பாகுபடுத்திப் போட்டு, அடியிலே ஓர் அடிக் குறிப்பு எழுதி இறுதியிலே இப்படிக்கு பதிப்பாசிரியர் என்று எழுதி வெளியிட்டால் நாம் மகிழ்ச்சியோடு வரவேற்போம்! நூலை வெளியிடும் ஆசிரியர் இந்த முறையிலே உழைத்தால் நம் நாட்டு மக்களுக்கு நல்ல சுவையும் பயனும் கிடைக்கும்.

*　　　*　　　*

நாம் வேருெரு பொருளைப் பெற முடியும். ஏன்? இழந்த பொருளையும் நாம் பெறக்கூடும். இவை அனைத்துக்கும் கருத்துத் தெளிவுதான் மிகவும் அவசியம்.

*　　　*　　　*

நாகரிக உலகம் ஏற்பட்டது எப்படி என்ருல், பர்ணசாலை ஒன்று, இரண்டாகி, அவைகள் குடிசைகளாக மாற, பிறகு ஆற்ருேரத்தில் குடியேற, ஆற்ருேரம் கிராமமாக அமைய, கிராமங்கள் சேர்ந்து நகரமாகி, இப்பொழுது நாகரிக அளவில் பெரிய நகரங்களாக ஏற்பட்டுவிட்டன.

*　　　*　　　*

மேல் நாட்டினர் பொருளைத் தேடிக் கொள்வதிலும் அதனைச் சரியான முறையில் பயன் படுத்துவதிலும் காலங் கழித்தார்கள். ஆனுல் நம்மவர்களோ பொருள் அநித்திய மென்று கூறிக்கொண்டு, அதே பொருள் தரும் சுகத்தில் வாழ்ந்தார்கள்—வாழ்கின்ருர்கள்.

முன்னேற்றப் பாதையிலே செல்லும் மாணவர்களாகிய நீங்கள், முதன் முதலாகச் செய்ய வேண்டிய கடமை, மனிதத் தன்மைக்கு மாறுன கருத்துக்கள் நாட்டிலே பரவ வொட்டாமல் தடுக்க வேண்டும். மனிதத்;தன்மைக்கு மாறுன கருத்துக்கள் இசையிலே புகுந்துள்ளன ; நாடகக் கலையிலே புகுந்துள்ளன ; இதிகாசங்களிலே புகுத்தப்பட்டிருக்கின்றன. புராணங்களாகப் புனையப்பட்டிருக்கின்றன; காவியங்களிலே நுழைக்கப்பட்டுள்ளன ; ஓவியங்களிலே காணப்படுகின்றன. மனிதத் தன்மைக்கு மாறுன கருத்துக்கள், கலையிலே புகுத்தப்பட்டால் கலைக்கே களங்கம் விளைவிப்பதாகும்.

* * *

இரயிலிலே ஒருவன் சென்று கொண்டிருப்பான். ஜன்னல் வழியாக ஒரு மலை அவன் கண்ணுக்குத் தென்படும்; அந்த மலைமீது ஒரு கோபுரம் தெரியும்- உடனே அவன் பக்கத்திலுள்ளவனைப் பார்த்து அந்தக் கோயிலைக் கட்டியது யார் என்று கேட்பான் ; அதற்கு அவனும் பதில் சொல்லாமலிருக்கமாட்டான் ஆனுல் அவர்களிருவருக்கும் அவர்கள் செல்லுகின்ற இரயிலைக் கண்டுபிடித்தது யார் என்று தெரியாது.

* * *

பொருள் என்பதிலே, காந்தியாரை இழந்துவிட்டது நாட்டின் அரிய பொதுப் பொருளை இழந்துவிட்டதாகும். நம் நாட்டின் பொதுப் பொருளாகிய

காந்தியார் மறைந்தது அரசியல் துறையிலாயினும் சரி அறிவுத் துறையிலாயினும் சரி ஒரு பெரிய நட்ட மேயாகும் ஆனால் இழந்த பொருளைப் பிறகு பெறவும் முடியும் ; அதற்குப் புதுக் கருத்துக்கள் தேவை.

*　　　*　　　*

கருத்துத் தெளிவு மிகவும் இன்றியமையாதது. வெளியிடாமல் மனத்திலே மட்டும், உள்ள கருத்து மனிதத் தன்மைக்கு ஏற்றதல்ல ; அது காட்டிலே உள்ள ஒரு முறை.

*　　　*　　　*

எவை பேசப்பட்டாலும் கருத்துத் தெளிவுடன் இருக்க வேண்டும். அது எந்த வார்த்தையானாலும் சரி, எந்த காரணத்தாலானாலும் சரி, அது யார் பேசினாலும் சரி பேசும் பொருளின் உட்கருத்தைக் கவனிக்கவேண்டும், அப்பொழுதுதான். மாணவர் கழகம் என்ற தோட்டமும் அதன் இலட்சியங்கள் என்ற மணமலர்ச் செடிகளும் செயல் வீரர்களின் கண்ணியம் என்ற தண்ணீரில் தொண்டு என்ற எருவால் வளரவிட முடியும் !

*　　　*　　　*

மற்றவர்க்கு நம்முடையக் கருத்து உடன் பாடோ, உடன்பாடில்லையோ, தேவையோ தேவை யில்லையோ, அதுவல்ல பிரச்னை. நாம் செய்ய வேண்டிய தொண்டு, கடமை என்ற ஆணையிலே நடத்தப்பட வேண்டும். அந்த முறையிலே, கல்லூரி மாணவர்களாகிய நீங்கள், தொட்டுப் பார்க்காத

தைக்கூட தொட்டுப் பார்க்கின்றீர்கள். உண்மையிலே மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நாட்டுப்பற்று நாட்டின் ஆதிக்கத்திற்கான ஓர் அறிகுறி அதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்; பெருமையும் அடைகிறேன்.

* * *

நம் நாட்டில் வேதாந்தம் சொல்வதெல்லாம் ஏழைகளிடத்தில்தான். "பொருள் மேல் ஆசை வைக்காதே; பொருள் மாயை, அழிந்துவிடக் கூடியது; அநித்தியம்; பொருள் மாத்திரமென்ன ?- நீ கூடத்தான் அழியக் கூடியவன்—நீ மாத்திரம் என்ன ?—உன்னைப் படைத்த இவ்வுலகம்" என்று இவ்வளவும் பேசிவிட்டு, ரிசர்வ் பாங்க், 'காதரஜ் சேப்' 'நேஷனல் பாண்டு' களாக வாங்கிப் பணம் சேமித்தல் முதலியவற்றில் 100-க்கு 20 பேர் ஈடுபடுகின்றனர்; 100-க்கு 80 பேர் ஏழைகளாக்கப்படுகின்றனர். மாணவர்களாகிய நீங்கள் இடையிலே உள்ள தடையை உடைத்தெறிய வேண்டும். அவர்கள் வாழ்வது போல், வாழ்வு இவர்களுக்கும் தேவை. அவர்களுக்குப் பொருள் இருப்பதுபோல் இவர்களுக்கும் பொருள் தேவை. அதற்கான பணியை ஆற்ற நீங்கள் முன்வரல் வேண்டும்.

* * *

ஒருவரை மற்றொருவர் அடிமை கொள்ள, வசியப்படுத்த, வீழ்த்த வகைபல. உண்டு வீரர் வேல் கொண்டு போரிடுவர்; தமது ஆற்றலையே, ஆதிக்க

அளவு கோலாகக் கொண்டு, வீரமற்ற வஞ்சக உள்ளங் கொண்டோர், மறைந்திருந்து தாக்குவர்; மாற்றானை மாய்த்திட எம்முறையும் ஏற்றதே என்று கூறுவர். மாமரங்களுக்குப் பின்புறமிருந்து வாலியைக் கொன்ற ஆரிய இராமன் போல! நண்பனாக நடித்து நயவஞ்சகத்தால் காரியத்தைச் சாதிக்கும் கயவரும் உண்டு! எதிர்ப்போரின் உடன் பிறந்தாரையோ, ஏவலரையோ விலைக்குப் பெற்று, விபீஷணாஸ்திரத்தில் வீரனை வீழ்த்தும் வகையுமுண்டு. மாயமொழி பேசியும் மாற்றானை மாய்ப்பதுண்டு! எதிரியின் ஏமாளித்தனத்தை தெரிந்து அவனைச் சாய்ப்பவருமுண்டு. உலகம் பலவிதம்.

* * *

நறுமலர்க் கூடையிலே நச்சரவு இருந்திடின் மலர்தேடும் கையிலே விஷப்பல்லன்றோ தீண்டும்!

* * *

மனிதன் கஷ்டம் அனுபவித்தபோது மதவாதிகள் அவனுடைய கண்ணையும் கருத்தையும் எந்த உண்மைக் காரணத்தால் மனிதன் கஷ்டப்படுகிறானோ அந்தக் காரணங்களைக் காண ஒட்டாமல் தடுத்து கைலாயம் வைகுந்தம், காகுத்தன் காளியாயி, ஜெபமாலை, உடுக்கை இப்படி வேறுபல பொருள்கள், முறைகள் மீது திருப்பிவிட்டனர். மனிதன் திக்குத் தெரியாத காலத்தைப் போலானான்!